தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 02, இதழ் : 458 பிலவ வருடம், மாசி மாதம் 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை (18.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 16, 0115886187 - பக்கங்கள் 16
விலை ரூ.30
Follow us:

## தாதியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஜனாதிபதி பணிப்பு

நாட்டின் தற்போதைய நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு தாதியர்களின் அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அரச துறைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தாதியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து கடந்த 09 நாட்களுக்கு முன்னர் பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டபோதிலும், அமைச்சரவையில் முன்மொழியப்பட்ட யோசனையை சுகாதார அமைச்சர் சமர்ப்பித்ததையடுத்து பணிப்பகிஷ்கரிப்பை இடைநிறுத்துவதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

## பயங்கரவாதத் தடைச் சட்ட எதிர்ப்பு; மனுவில் கையெழுத்திட்ட பேராயர்!

02 பக்கம்



## நிர்ணய விலையில் மஞ்சள் கொள்முதல்

நாடு முழுவதுமுள்ள மஞ்சள் செய்கையாளர்களிடமிருந்து நிர்ணய விலையில் மஞ்சள் கிழங்கு கொள்முதல் செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் மற்றும் இலங்கை வாசனைத் திரவியங்கள் சந்தைப்படுத்தல் சபை என்பன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை கம்பஹா, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்ட செய்கையாளர்களிடமிருந்து ஒரு இலட்சம் கிலோகிராம் மஞ்சள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் மஞ்சள் கிழங்கு 165 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டதாக கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

## மங்களம் அருள்வாய் மாத்தளை அரசி...



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பஞ்சரத பவனி நேற்று மாலை கோயிலில் இருந்து புறப்பட்டது. வீதியுலாவை நிறைவுசெய்து இன்று பஞ்சரதங்கள் கோயிலை சென்றடையும். தேர்த்திருவிழாவில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

# நீதித்துறை பிரமுகர்களுக்கு வெளிநாட்டு விசா மறுப்பு!

### படை அதிகாரிகள் மீதான தடைக்குப் பின்னர் மேற்குலக நாடுகள் புதிய அதிரடி நடவடிக்கை

02 பக்கம்



# இந்தியாவை தோற்கடித்து இலங்கையைக் கட்டுப்படுத்த சீனா புதிய தந்திரோபாயத்தைப் பயன்படுத்தலாம்!

### கொள்கை ஆய்வுக்குழு அமைப்பு தெரிவிப்பு

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கொழும்பிற்கும் புதுடில்லிக்கும் இடையிலான இராஜதந்திர செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளதால் இலங்கையைக் கட்டுப்படுத்துவதற்கு சீனா புதிய தந்திரோபாயத்தினைப் பயன்படுத்தலாம் என கொள்கை ஆய்வுக்குழு என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் நிதியமைச்சர் அடுத்த சில நாட்களில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு இந்திய பிரதமர் விஜயம்... 02 பக்கம்

## பெப். 22 - 25ஆம் திகதிவரை நாடாளுமன்ற சபை அமர்வு

நாடாளுமன்றத்தை எதிர்வரும் 22ஆம் திகதிமுதல் 25ஆம் திகதிவரை கூட்டுவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற... 02 பக்கம்




யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை அங்கீகரிக்குமாறு கோரி பல்கலை மாணவர்களால் நுழைவாயிலை வழிமறித்து நேற்று முற்றுகைப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)


## ஒமிக்ரொன் பரவும் வேகம் அதிகரிப்பு; சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை!

எவ்வித நோய் அறிகுறிகளும் இல்லாத ஒமிக்ரொன் நோயாளர்களிடமிருந்து வைரஸ் பரவும் வேகம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் காரணமாக கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இயல்பாகவே ஒமிக்ரொன் பிறழ்விற்கான பல அறிகுறிகள் தென்படாது என்பதை சுட்டிக்காட்டிய விசேட வைத்திய நிபுணர், நோய் அறிகுறிகள் தென்படாத காரணத்தினால் அன்ரிஜன் அல்லது பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளாத குறிப்பிட்ட சதவீத கொரோனா நோயாளர்கள் சமூகத்தில் இருப்பதால் மேலும் தொற்று பரவலாம் எனவும் கூறியுள்ளார்.

## பெற்றக் குழந்தையை துப்பாக்கி முனையில் கடத்திய தந்தை பொலிஸ் சூட்டில் பலி



ஹொரணை கந்தான பிரதேசத்தில் பாட்டியின் பாதுகாப்பில் இருந்த குழந்தையொன்றைக் கடத்திய தந்தை, பொலிஸாருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். ஹொரணை பெல்லபிட்டிய பிரதேசத்தில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, 02 பக்கம்

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை தவறாகப் பயன்படுத்தவேண்டாம்

### பொலிஸாருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் தகவல்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை தவறாக பயன்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயங்கரவாதம் குறித்த தெளிவான தகவல்கள் கிடைத்தால் மாத்திரம் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ள ஜனாதிபதி, குறுகிய வழிமுறையாக அதனைப் பயன்படுத்தவேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிவில் சமூகத்தினர் மத்தியில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர், பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான திருத்தங்கள் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை... 02 பக்கம்

## கச்சதீவு விழாவில் பக்தர்கள் கலந்து கொள்வதற்குத் தடை

யாழ். நிருபர்

கச்சதீவு பெருவிழாவில் பக்தர்கள் கலந்துகொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மயிலிட்டிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் கச்சதீவு பெருவிழா நடைபெறவுள்ளது. அதற்கு இலங்கை பக்தர்களை மட்டும் இம்முறை அனுமதிப்பது தொடர்பில், யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் முன்னதாக முடிவெடுக்கப்பட்டது.


ஆனால் இம்முறையும் இருநாட்டு பக்தர்களையும் கச்சதீவுக்கு அனுமதிப்பது இல்லை என அரசு முடிவெடுத்துள்ளது. 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



ஸ்ட்ரைக் பண்ணினாத்தான் அரசாங்கம் எதாவது செய்யும் எண்ட மனநிலை தொழிற்சங்கங்களுக்கு வந்திருக்குது பாருங்கோ...

## ‘நான் ஒரு தமிழ்க் குடிமகன்’; ஆவணத்தை தமிழில் வழங்கு!



### நிதி நிறுவனம் வழங்கிய சிங்களப் படிவத்தில் எழுதிக் கொடுத்த யாழ். இளைஞன்

02 பக்கம்

## உஷ்



அமைச்சர் விமல் வீரவங்சவின் இல்லத்தில் சில தினங்களுக்கு முன்னர் கூட்டமொன்று நடந்தது.

ஆளுங்கட்சியின் பங்காளிக் கட்சிகளை உடைக்க பெசில் முயற்சிகளை மேற்கொள்வதாக இங்கு பலரும் விமர்சித்துள்ளனர்.

அதனால் ஆளுந்தரப்பிலுள்ள சிறிய கட்சிகளை இணைத்து புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைக்க இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மயிலிட்டித் துறைமுகத்தின் வரலாற்றுப் பெருமை விரைவில் மீட்டெடுக்கப்படும்



### இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்துவைத்து அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவமிக்கதாகவும் வடபகுதி கடற்றொழிலாளர்களின் பொருளாதார மிக்கதாகவும் விளங்கிய மயிலிட்டி துறைமுகத்தை மீண்டும் அதே பெருமையுடன் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கடற்றொழில்... 02 பக்கம்

## அதிகபட்ச பாவனையாளர்களுக்கு மின்தடை அமுல்படுத்த முன்மொழிவு

### இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

ஊடக நிறுவனங்கள் மற்றும் ஏனைய பாரிய வர்த்தக நிறுவனங்கள் உட்பட மொத்த மின்சார பாவனையாளர்களுக்கு மின்வெட்டுக்களை அமுல்படுத்துவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது.

அதிக அளவில் மின்சாரத்தைப் பயன்படுத்தும் பாரிய நிறுவனங்கள் தங்களுடைய சொந்த மின்பிறப்பாக்கிகளை வைத்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்தகைய நிறுவனங்களை தேசிய மின்கட்டமைப்பை சார்ந்து அல்லாமல், தங்கள் சொந்த மின்பிறப்பாக்கிகளை சார்ந்து இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மொத்த பாவனையாளர்களுக்கு மின்வெட்டுக்களை அமுல்படுத்துவதன் மூலம் திட்டமிடப்பட்ட மின்வெட்டுகள் நாடு முழுவதும் அமுல்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

02 பக்கம்

## யாழில் மலேரியா பரவும் அபாயம்

யாழ்ப்பாணத்தில் மலேரியா காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் நான்கு வாரங்களில் 04 மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மலேரியா தடுப்புப் பிரிவின் பணிப்பாளர், வைத்தியர் பிரசாத் ரணவீர குறிப்பிட்டார்.

ஆபிரிக்க நாடுகளிலிருந்து வருகைத்தந்த 06 மலேரியா நோயாளர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களில் நால்வர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் பிரசாத் ரணவீர குறிப்பிட்டுள்ளார்.

## 'நான் ஒரு தமிழ்க்....

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் நிதி நிறுவனமொன்றில் சிங்கள மொழியில் வழங்கப்பட்ட படிவத்தில், தனது தாய்மொழி தமிழ் என இளைஞர் ஒருவர் எழுதிக் கொடுத்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழிலுள்ள நிதி நிறுவனமொன்றில் வாகன விபத்து காப்புறுதிக்கு படிவம் பெறச் சென்ற இளைஞருக்கு சிங்கள மொழியிலான படிவம் வழங்கப்பட்டுள்ளது. அந்தப் படிவத்தை நிராகரித்து, தனக்கு தமிழ் மொழியிலான படிவத்தை வழங்கும்படி கேட்டுள்ளார் ஓர் இளைஞர்.

அத்துடன், சிங்கள மொழியிலான படிவத்தின் மேல், ''எனது தாய் மொழி தமிழ். தமிழ்ப் படிவம் வழங்கவும்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.இது குறித்து சம்பந்தப்பட்ட இளைஞர் பேஸ்புக்கில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சிறிய வாகன விபத்து ஒன்றிற்காக வரவேண்டிய கொடுப்பனவு எடுப்பது தொடர்பாக யாழ்ப்பாண தனியார் காப்புறுதி நிறுவனத்திற்கு சென்ற போது பொலிஸ் ரிப்போட் எடுக்கவேண்டும். இந்தப் படிவத்தை நிரப்பிக்கொண்டு பொலிஸ் ரிப்போட் எடுத்திட்டு வாங்க என்று சொல்லி அங்கே வேலைக்கு நிற்கும் பெண் இந்தப் படிவத்தை தந்தார். நான் கேட்டன், உன்ட தாய்மொழி தமிழ். என்ட தாய்மொழி தமிழ். யாழ்ப்பாணத்தில நிர்வாக மொழி தமிழ். நீ தந்திருக்கும் இந்தப் படிவம் என்ன மொழி? முடிந்தால் கொழும்பிலுள்ள உன்னுடைய கிளையில் தமிழ்ப் படிவத்தை கொடுத்து இதை நிரப்பிக் கொண்டுபோய் கொடுக்கச் சொல்லி ஒரு சிங்களவரிடம் கொடுக்க முடியுமா? தனியார் நிறுவனமாக இருந்தாலும் இங்கே உங்கள் சேவையினை தமிழர்களுக்குத்தானே வழங்குகின்றீர்கள் - என்றுள்ளது.

## அதிகபட்ச..

இலங்கை மின்சார சபையின் சில அதிகாரிகள், இந்த முன்மொழிவு நடைமுறையில் இல்லை என்று கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்தப் பிரேரணை நடைமுறைக்குரியது எனக் கருதுவதாகவும், அதனை முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாரியளவிலான மின்சார பாவனையாளர்கள் தமது மின்பிறப்பாக்கிகளை இயக்குவதற்கு எரிபொருளை கொள்வனவுசெய்ய முடியும் எனவும் ஆனால், மின் நிலையங்களுக்கு போதிய எரிபொருளை கொள்வனவுசெய்வதற்கு மின்சார சபையிடம் நிதி இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு மின் நிலையத்திலும் பாரிய செயலிழப்பு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர் மின் நிலையங்களில் போதியளவு தண்ணீர் போன்றவற்றினால் ஏப்ரல் மாதம்வரை திட்டமிடப்பட்ட மின்வெட்டு தேவைப்படாது என ஆணைக்குழு கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தடையில்லா மின்சாரத்தை உறுதிசெய்வதற்கான முக்கிய காரணிகள் சீராக இயங்கும் என்ற அனுமானத்தில் ஏப்ரல்வரை திட்டமிடப்பட்ட மின்வெட்டு இருக்காதென எப்படி முன்னரே தீர்மானிக்கப்பட்டது என்றும் சிலர் கேள்வி எழுப்பியதாகவும் அவர் தெரிவித்தார்.

சேர் ஐசக் நியூட்டன் போன்ற நன்கு அறியப்பட்ட விஞ்ஞானிகள் கூட அனுமானங்களின் அடிப்படையில் தங்கள் தீர்மானங்களை அடைந்துள்ளனர் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## கச்சதீவு விழாவில் ...

இந்த விடயத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன், இம்முறையும் மதகுருமார் மாத்திரம் சென்று பூஜை விடயங்களை முன்னெடுப்பார்கள் - என்றார் அமைச்சர் டக்ளஸ்.

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை ..

இந்த மனோநிலை வெளிப்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பொறுப்பற்ற விதத்தில் பயன்படுத்துவதை தவிர்க்கவேண்டும் என அரசாங்கம் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதென குறிப்பிட்டுள்ள அவர், அதற்கான வாய்ப்பை வழங்கி அது இடம்பெறுகின்றதா இல்லையா என்பதை பார்ப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது சிவில் சமூகத்தினர், பொலிஸார் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தும் விதம் குறித்து கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். எனினும், வெளிவிவகார அமைச்சு உத்தேச திருத்தங்களை கடுமையாக நியாயப்படுத்தியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கான திருத்தங்கள் குறித்து சிலர் எடுத்துள்ள நிலைப்பாடுகள் புதியவை அல்ல எனவும் சட்ட மா அதிபர் பிணை வழங்க முன்வந்தபோதிலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவிற்கு பிணை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர், சட்டத்தரணிகள் கடுமையாக வாதங்களை சந்தித்தே பிணையை பெற்றுக்கொண்டனர் என குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச திருத்தங்களை நிராகரித்தால் தற்போதுள்ள சட்டம் பலப்படும் எனவும் திருத்தங்களை முன்வைத்துள்ளதால் பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குவதற்கான சட்டங்கள் உருவாக்கப்படாதென்பது அர்த்தமல்ல எனவும் குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு காலம் எடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

## பெற்றக் குழந்தையை...

ஹொரண கந்தன பிரதேசத்தில் பாட்டியின் பாதுகாப்பில் இருந்த குழந்தையொன்று நேற்றுக் காலை ஆயுதமுனையில் அவரது தந்தையால் கடத்தப்பட்டுள்ளது.

குழந்தையின் தந்தையான ஹொரண நீலக்கவினால் இந்த கடத்தல் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் கொலை உட்பட பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என தெரிவிக் கப்படுகிறது.

ஹொரண நீலக்க என்ற சந்தேகநபர், குறித்த வீட்டிற்கு வந்து T-56 ரக துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டு தனது குழந்தையை கடத்திச் சென்றுள்ளார்.

குறித்த நபர் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு கூரிய ஆயுதத்தால் தனது மனைவியின் கை, கால்களை துண்டுத் துண்டாக வெட்டி பலத்த காயம் ஏற்படுத்தியிருந்தார்.

இச்சம்பவத்தின் பின்னர் அவரது குழந்தை மாமியாரின் பாதுகாப்பில் இருந்ததுடன், இன்று குழந்தைகள் பராமரிப்பு நிலையத்திற்கு மாற்றப்படவிருந்த நிலையிலேயே இவ்வாறு குழந்தை கடத்தப்பட்டுள்ளது.

இந்த குழந்தையை மீட்க பொலிஸார் நேற்று நடவடிக்கைகளை எடுத்து சந்தேகநபரை தேடினர். அப்போது ஹொரணை பெல்லபிட்டிய பகுதியில் சந்தேகநபர் இருப்பதை அறிந்த பொலிஸார் அங்கு நடத்திய தேடுதலின்போது பொலிஸார் மீது தாக்குதல் நடத்த சந்தேகநபர் முயன்றுள்ளார். அப்போதுநடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சந்தேகநபர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஹொரணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பயங்கரவாதத் தடைச் சட்ட...

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்குமாறு வலியுறுத்தி மக்களிடம் கையெழுத்து பெறும் மனுவில் கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கையெழுத்திட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில், அனைத்து இனத்தவரும் அங்கம் வகிக்கும் சிவில் மற்றும் அரசியல் அமைப்புகளின் உதவியுடன் மனுவில் கையெழுத்து பெறும் திட்டம் நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.

கொழும்பு மாவட்டத்தில் பொதுமக்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கைகள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு எதிரில் நடைபெற்றது. அதன்பின்னர் யாழ்ப்பாணத்திலும் கையொப்பங்கள் பெறப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமணிக்கம், பேராயரை சந்தித்து மனுவில் கையெழுத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

அரசாங்கம் தற்போது கொண்டுவரவுள்ள பயங்கரவாதத் தடுப்பு தொடர்பான புதிய திருத்தச் சட்டமூலம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட சர்வதேச அமைப்புகளின் கோரிக்கை மற்றும் அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய உருவாக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது

தமிழன் தமிழன் ஜூனியர்

கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.

தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்நாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...

அழையுங்கள்
0761393805




'கோழை அரசாங்கத்துக்கு அஞ்சவேண்டாம்' எனும் தொனிப்பொருளில் புதிய சிறகுகள் அமைப்பினரால் அரசாங்கத்துக்கு எதிராக கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று (17) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

## நீதித்துறை பிரமுகர்களுக்கு...

இலங்கை நீதித்துறையில் அங்கம் வகிக்கும் உயர்மட்ட பிரமுகர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வெளிநாடுகளுக்கு பயணம் செய்வதற்கான விசாவை வழங்குவதில் கொழும்பிலுள்ள சில தூதரகங்கள் மறுப்பை வெளியிட்டுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் நேற்றிரவு 'தமிழன்' செய்திகளிடம் தெரிவித்தன.

ஏற்கனவே இறுதிப் போர்க்களத்தில் செயற்பட்ட முன்னிலை இராணுவ அதிகாரிகள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் வெளிநாடு செல்ல அனுமதியளிக்கும் விசாவை வழங்க அந்த நாடுகள் மறுதலித்திருக்கும் நிலையில், இப்போது நீதித்துறையின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு விசா வழங்குவதை சில நாடுகள் மறுதலித்திருப்பது அரச மேலிடத்திற்கு அதிர்ச்சியை கொடுத்திருப்பதாக அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

அண்மைக்காலமாக நீதித்துறையின் சில செயற்பாடுகள் காரணமாகவே இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க சில நாடுகள் தீர்மானித்துள்ளதாக அறிகிறோம். இது நாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல. ஜெனீவா மனித உரிமைகள் பேரவை கூட்டம் நடக்கவுள்ள நிலையில், இப்படியான செயற்பாடுகள் இடம்பெறுவது சிறந்த சகுனங்கள் அல்ல. இராணுவ அதிகாரிகளின் மீதான தடைகளுக்கு பிறகு இப்போது புதிய தடைகள் வந்துகொண்டிருக்கின்றன. நீதித்துறையின் உயர்மட்ட பிரமுகர்கள் பலரின் பிள்ளைகள் விண்ணப்பித்த கற்கைகளுக்கான விசாக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று அரசின் உயர்மட்ட பிரதிநிதியொருவர் மேலும் குறிப்பிட்டார்.

## இந்தியாவை தோற்கடித்து

மேற்கொள்வார் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

மார்ச் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள பிம்ஸ்டெக் மாநாட்டில் இந்திய பிரதமர் கலந்துகொள்வாரா என்பது குறித்து இந்தியா இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என தெரிவித்துள்ள கொள்கை ஆய்வுக்குழு, மார்ச் 18 முதல் 20ஆம் திகதிவரை இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார் எனவும் தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கான அடுத்த விஜயத்தின்போது இலங்கையின் நிதியமைச்சர் இந்தியப் பிரதமரை சந்திப்பாரா என்பது உறுதியாக தெரியவில்லை என தெரிவித்துள்ள கொள்கை ஆய்வுக்குழு, புதுடில்லிக்கான தங்கள் விஜயத்தின்போது இலங்கை வெளிவிவகார அமைச்சரும் இலங்கை நிதியமைச்சரும் பிரதமர் மோடியை சந்திக்கவில்லை என குறிப்பிட்டுள்ளது.

கடன்களும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய உதவிகளும் இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உதவாது என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்ற போதிலும் குறுகிய காலத்திற்கு நிதிகளை பெறுவதற்காக இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதே சிறந்தது என கொழும்பு கருதுகின்றது என தெரிவித்துள்ள கொள்கை ஆய்வுக்குழு, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பிற்கான நான்கு தூண்கள் குறித்து ஆராய்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

ஒத்துழைப்பின் முதலாவது தூண் அவசர உணவு மற்றும் மருந்து. இதற்காக ஜெய்சங்கர் இலங்கை நிதியமைச்சருடனான சமீபத்தைய மெய்நிகர் சந்திப்பின் பின்னர் ஒரு பில்லியன் டொலர் கடனுதவியை அறிவித்துள்ளார் என தெரிவித்துள்ள கொள்கை ஆய்வுக் குழு, இந்த கடனுதவி குறித்து ஆராயப்படுகின்றது இந்த உடன்படிக்கையை இறுதி செய்வதற்காக இலங்கையின் நிதியமைச்சர் இன்னுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வார் எனவும் தெரிவித்துள்ளது.

இந்தியாவை தோற்கடிப்பதற்காக இலங்கையை கட்டுப்படுத்துவதற்காக சீனா புதிய தந்திரோபாயமொன்றை முன்னெடுக்கலாம் என தெரிவித்துள்ள கொள்கை ஆய்வுக்குழு, கடன்களும் கடன்களை அடிப்படையாகக்கொண்ட திட்டங்களும் நாட்டிற்கு உதவப்போவதில்லை என்றபோதிலும் இலங்கை இந்த விளையாட்டை தடையின்றி விளையாடும் என தெரிவித்துள்ளது.

இலங்கை கடன் வாங்கிய அல்லது திணிக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் இல்லாமல் தனது நிலையான வளர்ச்சிக்கான சொந்த மூலோபாயத்தை வகுக்கவேண்டும் என தெரிவித்துள்ள கொள்கை ஆய்வுக் குழு, தோல்விகளின் மூலம் கற்றுக்கொண்ட பாடங்களை இலங்கை உள்வாங்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

இயற்கை விவசாயத்திற்கு நாடளாவிய ரீதியில் மாறியமை, கொரோனா பெருந்தொற்றின்போது ஏற்றுமதியை கட்டுப்படுத்தியமை போன்றவற்றை அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

## பெப். 22 - 25ஆம் திகதி....

செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய பெப்ரவரி 22ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன் முற்பகல் 11.00 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை விளைபொருட் தரகர்களுக்கு உரிமமளித்தற் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மற்றும் இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் விவாதிக்கப்பட்டு அனுமதிக்கப்படவுள்ளன.

பெப்ரவரி 23ஆம் திகதி முற்பகல் 11.00 மணிமுதல் பிற்பகல் 5.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் யோசனைக்கு அமைய சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கு இங்கு இணக்கம் காணப்பட்டதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

பெப்ரவரி 24ஆம் திகதி முற்பகல் 11.00 மணிமுதல் பிற்பக்ல 4.30 மணிவரை தாவர, விலங்கினப் பாதுகாப்புத் (திருத்தச்) சட்டமூலம், மரங்களை வெட்டி வீழ்த்துதல் (கட்டுப்படுத்தல்) சட்டத்தின் கீழான கட்டளை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை என்பன விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளன.

அதேநேரம், பெப்ரவரி 25ஆம் திகதி முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 5.30 மணிவரை மறைந்த முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்கள் சிலர் தொடர்பான அனுதாபப் பிரேரணை இடம்பெறும். இதற்கமைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆனந்த ரத்னாயக்க (பொலன்னறுவை மாவட்டம்), ஆர்.ஆர்.டபிள்யூ.ராஜபக்ஷ (குருநாகல் மாவட்டம்), சோமவீர சந்திரசிறி (தேசிய பட்டியல்), பி.பி.திஸாநாயக்க (அநுராதபுர மாவட்டம்), எச்.ஆர்.மித்திரபால (கேகாலை மாவட்டம்) ஆகியோர் குறித்த அனுதாபப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறும். இதில் ஒவ்வொரு உறுப்பினரின் அனுதாபப் பிரேரணைக்கு தலா 75 நிமிடம் ஒதுக்கப்படவுள்ளது. அத்துடன், அன்றையதினம் வாய்மூல விடைக்கான கேள்விகள், 27 (2) நிலையியற் கட்டளையின் கீழான கேள்வி, சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்வி, சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை என்பவற்றுக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை.

பெப்ரவரி 22ஆம் திகதிமுதல் 24ஆம் திகதி வரை தினமும் முற்பகல் 10.00 மணிமுதல் முற்பகல் 11.00 மணிவரை வாய்மூலவிடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பெப்ரவரி 22 மற்றும் 24ஆம் திகதிகளில் பிற்பகல் 4.30 மணிமுதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப. 4.50 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரையான காலப்பகுதியில் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதமும் இடம்பெறும்.

## மயிலிட்டி துறைமுகத்தின்...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மயிலிட்டி துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (17.02.2022) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு புனரமைப்புப் பணிகளை அங்குரார்ப்பணம் செய்து வைத்தபின் உரையாற்றுகையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கையின் முதன்மையான துறைமுகமான இந்தத் துறைமுகம் இலங்கையின் மீன்பிடி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கை உற்பத்தி செய்துவந்தது.

ஆனாலும் கடந்தகாலத்தில் நாட்டில் நடைபெற்ற வன்முறை, அழிவு யுத்தம் காரணமாக துரதிர்ஷ்டவசமாக அதில் பாரிய பின்னடைவை சந்திக்க நேரிட்டது.

ஆனாலும் அந்த பாதிப்பிலிருந்து இந்த துறைமுகத்தை தூக்கி நிறுத்தும் முகமாகவே அதன் அபிவிருத்திக்கான இரண்டாம் கட்ட பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

இதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் எம்மை வழிநடத்திக்கொண்டிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் விசேடமாக நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஆகியோருக்கும் எமது மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்த மயிலிட்டி துறைமுகத்தை மட்டுமல்லாது வடக்கில் பருத்தித்துறை துறைமுகம், மன்னார் பேசாலை துறைமுகம் மற்றும் யாழ்ப்பாணம் குருநகர் துறைமுகம் ஆகிய மூன்று துறைமுகங்களையும் அமைப்பது தொடர்பிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் கடந்த காலத்தில் பருத்தித்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஏற்பாடுசெய்யப்பட்டு அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டும் இருந்தன. ஆனாலும் அம் முயற்சி சரியாக கையாளப்படாமையால் தவறவிடப்பட்டிருந்தது.

ஆனால், நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதபின் அந்தத் துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பான முயற்சியை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றோம். அது விரைவில் கைகூடும் எனவும் நம்புகிறேன். துறைமுகத்தை கட்டும்போது அப்பிரதேசத்தின் கடற்றொழில் அமைப்புகளுடன் கலந்துரையாடித்தான் அமைப்பது வழமை. அதேபோன்றே இங்குள்ள கடற்றொழில் அமைப்புகளுடன் கலந்துரையாடி முதலாவது கட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் அதில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

தற்போது எமது அரசாங்கத்தால் அதன் இரண்டாம் கட்டப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது கடந்த காலத்தில் விடப்பட்ட அனைத்து குறைபாடுகளும் கவனத்திற்கொள்ளப்பட்டு நவீனத்துவத்துடன் கூடியதாக நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.

இதேவேளை, எமது கடற்றொழிலாளர்கள் பலவகையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக, கடந்த காலத்தில் நாட்டில் நடைபெற்ற வன்முறை காரணமாக பலமான பொருளாதார கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

அதுமட்டுமல்லாது கடந்தகால தமிழ்த் தலைவர்கள் என கூறப்பட்டவர்களால் கிடைத்த சந்தர்ப்பங்கள் சரியாக பயன்படுத்தாது தவறவிடப்பட்டதால் அதிக துன்பங்களையும் அவர்கள் எதிர்நோக்கியுள்ளார்கள்.

அந்தவகையில் அவற்றை தீர்க்குமுகமாகவே எமது நிகழ்கால எதிர்காலச் செயற்பாடுகள் அமையும்.

மயிலிட்டி பிரதேசத்தில் தற்போது 60 ஏக்கர் காணி நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. மேலும் சுமார் 100 முதல் 125 ஏக்கர் காணிகளை கட்டம் கட்டமாக விடுவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு பெற்றுத் தரப்படும் .

சுமார் 304 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள குறித்த அபிவிருத்திப் பணிகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு, கடற்றொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜயந்த சந்திரசோம தலைமையில் நடைபெற்றதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இந்திய தூதரக பிரதி தூதர் ராஜேஸ் நடராஜ், கடற்படையின் வடக்கு பிரதானி, மாவட்ட செயலாளர் மகேசன் மற்றும் துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்

18.02.2022 வெள்ளிக்கிழமை மாசி 6

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: பூரம்**
மாலை 4.42 வரை
**உத்தரம்**
மாலை 4.42 - 19.02.2022
மாலை 4.51 வரை
**யோகம்: சுகர்மம்**
மாலை 6.31 வரை
**திருதி**
மாலை 6.31 - 19.02.2022
மாலை 4.57 வரை
**திதி:**
**அமர பட்ச துவித்யை**
இரவு 10.29 வரை
**அமர பட்ச திரித்யை**
இரவு 10.29 - 19.02.2022
இரவு 9.56 வரை
**முற்கரணம்: தைதுலம்**
காலை 10.37 வரை
**பிற்கரணம்: கரஜம்**
காலை10.37 - இரவு10.29

**சுப நேரங்கள்**
காலை 6.27 - 7.55
மாலை 5.21 - 6.22
**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
காலை 10.55 - பி.ப. 12.25
**குளிகை காலம்**
காலை 7.56 - 9.26
**எமகண்ட காலம்**
மாலை 3.23 - 4.53
**துர் முகூர்த்தம்**
காலை 8.50 - 9.38
பிற்பகல் 12.48 - 1.36

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** இறக்குமதி / ஏற்றுமதி வர்த்தக இலாபங்கள் அதிகரிக்கலாம். காதலர்களுக்கு ஆச்சரியமான நாளாக அமையலாம். இன்றைய நாள் இறையருளால் சிறப்பான நாளாக அமையலாம். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறலாம்.

**ரிஷபம்:** காணி/வீடு/சொத்து சம்பந்தப்பட்ட தொழில் வர்த்தகத்தில் ஒப்பந்தங்களில் முழுமையான கவனம் தேவைப்படலாம். பயணத்தால் சோர்வு உண்டாகலாம். உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். தேவையற்ற வதந்திகளை புறந்தள்ளுவது நல்லது.

**மிதுனம்:** சூழ்நிலை சாதகமாக அமையலாம். அன்புக்குரியவர்களுடன் வாக்குவாதம் தவிர்ப்பது நல்லது. சில இலட்சியங்கள் நிறைவேறலாம். அரசாங்கம் சம்பந்தப்பட்ட வேலைகளில் பிரச்சினை நீங்கலாம். திறமைகளால் பிறரிடம் ஈர்ப்பு உண்டாகலாம்.

**கடகம்:** நிதி சம்பந்தப்பட்ட நிச்சயமற்ற தன்மை மனக் கவலையை உருவாக்கலாம். பணி தேடுவோருக்கு புதிய வேலை கிடைக்கலாம். வணிக விடயங்களில் புதியவர்களுடன் கவனம் தேவைப்படலாம். வாழ்க்கைத்துணையுடன் அன்புடன் இருப்பது நல்லது. உங்கள் உடல்நலத்திலும் அக்கறை தேவைப்படலாம்.

**சிம்மம்:** சகோதரர்களின் ஆதரவு மகிழ்ச்சி தரும். சொத்து பிரச்சினை நீங்கலாம். தம்பதியரிடையே மன நிறைவு ஏற்படலாம். ஆக்கபூர்வமான செயல்களில் ஆர்வம் மேம்படும். அனுபவசாலி களின் ஆலோசனையில் புதிய முதலீடு செய்வது நன்மை.

**கன்னி:** கடனாக கொடுத்த பணத்தின் வரவு உண்டாகலாம். வாகனம் செலுத்துவதிலும், பயணத்திலும் கவனம் தேவைப்படலாம். மறைமுக எதிர்ப்புகள் உண்டாகலாம். தேவையற்ற சகவாசத்தை நீக்குவதும் நல்லது.

**துலாம்:** புதிய தொழில் துவங்க சாதகமான நாள். பிள்ளைகளுடன் இருக்கும் இன்றைய நாளின் நேரங்கள் மன அழுத்தத்தைக் குறைக்கும். வருவாய் அதிகரிக்கலாம். சொத்து சம்பந்தப்பட்ட விடயங்களில் நன்மை கிடைக்கலாம்.

**விருச்சிகம்:** நிர்வாகத் திறமைக்கு பாராட்டு கிடைக்கப் பெறலாம். பணியிடங்களில் வேலை திறன் அதிகரிப்பில் நன்மை கிடைக்கலாம். தடைப்பட்ட வேலைகள் நிறைவேற துவங்கும். சில பழைய கடன்களை திரும்ப செலுத்தும் நிலை உண்டாகலாம்.

**தனுசு:** பணிகளில் ஆற்றல் இருந்தாலும், பணிச்சுமை அதிகரிப்பால் சலிப்பு உண்டாகலாம். புதிய நிறுவனங்களில் வேலை வாய்ப்பு கிடைக்கலாம். உங்களை தவறாக வழி நடத்த முயற்சிப்பவர்களிடம் கவனம் தேவைப்படலாம். வணிக இலாபங்கள் அதிகரிக்கலாம்.

**மகரம்:** தீர்வுகளை எடுப்பதில் அவசரம் தவிர்ப்பது நல்லது. வணிகத்தில் புதிய பிரச்சினைகள் ஏற்படலாம். பணித்திறன் பாராட்டப்படலாம். தேவையற்ற அதிக சிந்தனையை நீக்குவது நன்மை. இறைவணக்கம் தேவை.

**சந்திராஷ்டமம்: அவிட்டம் நட்சத்திரம் பாதம் 1/2க்கு காலை10.36-இரவு 10.46**

**கும்பம்:** பயணங்களால் நன்மை கிடைக்கலாம். வாழ்க்கைத்துணையின் வழிகாட்டுதல் சிறப்பை உண்டாக்கலாம். நிதி நிலையை கருத்தில் வைத்து செலவுகள் செய்வது நல்லது. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாளாக அமையலாம்.

**சந்திராஷ்டமம்: அவிட்டம் நட்சத்திரம் பாதம் 3/4க்கு இரவு 10.46 - 19.02.2022 காலை 10.51 வரை**
**சதயம் நட்சத்திரத்திற்கு 19.02.2022 காலை 10.51- 20.02.2022 காலை 10.46 பூரட்டாதி நட்சத்திரம் பாதம் 1/2/3க்கு 20.02.2022 காலை 10.46- 21.02.2022 அதிகாலை 4.32 வரை**

**மீனம்:** சமூகத்தில் நற்பெயர் உருவாகலாம். சிறந்த வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் கிடைக்கப் பெறலாம். கடின உழைப்புடன் கூடிய ஆக்கபூர்வமான உங்கள் பணிகளுக்கு மிகுந்த பாராட்டு கிடைக்கலாம். எதிர்கால நல்வாழ்வுக்கான திட்டங்கள் உருவாகலாம்.

# மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய இரதோற்சவம்



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழாவின் பஞ்சரத பவனி நேற்று (17) இடம்பெற்றது. இதன்போது வசந்த மண்டபப் பூஜைகள் மற்றும் தேர் பவனி இடம்பெறுவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.

## நீர்கொழும்பில் சிறுவன் மாயம்; 27 நாட்களாக தேடும் பொலிஸ்



நீர்கொழும்பு, கொச்சிக்கடை ஒப்பேரிய பகுதியில் காணாமல்போன 14 சிறுவனை தேடி வருவதாக தெரிவித்துள்ள பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர். ஒப்பேரியவைச் சேர்ந்த சிறுவனை கடந்த 22ஆம் திகதிமுதல் காணவில்லையென பெற்றோரால் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

மெரின் ஸ்டெபன் என்ற சிறுவனே காணாமல்போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வீட்டுக்கு அருகிலுள்ள தேவாலயத்தில் திருமண வைபவத்தில் கலந்துகொள்வதற்காக செல்வதாகக் கூறி அந்தச் சிறுவன் சென்றுள்ளான். அதன் பின்னர் வீடு திரும்பவில்லையென பெற்றோர் தெரிவித்துள்ளனர். இந்தச் சிறுவன் தொடர்பான தகவல் அறிந்தோர் 071 8591631, 0312277222, 031 2276338 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# கேரள கஞ்சா, போதை மாத்திரைகளுடன் அவிசாவளையில் சந்தேக நபர் கைது

## ஒரு இலட்சம் ரூபா பணமும், வாள்களும் மீட்பு

## ‘மன்ன ரமேஷ்’ என்ற போதைப்பொருள் குற்றவாளியின் சகாவென பொலிஸார் தெரிவிப்பு

அவிசாவளை, இஹல தல்துவ பிரதேசத்தில் வீடொன்றில் கேரள கஞ்சா, போதை மாத்திரைகள், கூரிய ஆயுதங்கள், போதைப்பொருள் வியாபாரத்தால் உழைக்கப்பட்டதாக கருதப்படும் பணத்துடன் நபரொருவர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர், அவிசாவளை பிரதேசத்தில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவரான ‘மன்ன ரமேஷ்’ என்பவரின் உதவியாளர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து 235 கிராம் கேரள கஞ்சா, 50 போதை மாத்திரைகள், ஒரு இலட்சம் ரூபா பணம் மற்றும் வாள்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படை திட்டமிடப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் களனி கங்கைக்கு அருகில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வு நடவடிக்கை முன்னெடுப்பதாகவும், சட்டவிரோத போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் திட்டமிட்ட குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமையவே இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் மற்றும் பணம் என்பன சந்தேகநபரிடம் இருந்ததாகவும், வாள்கள் இரண்டும் அவரின் முச்சக்கரவண்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். 32 வயதான இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக அவிசாவளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# ஹெரோயின் போதைப்பொருளுடன் சீனக்குடாவில் இளைஞர் கைது

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை, சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்பே பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொட்பே மீன்பிடித் துறைமுகத்தில் ஹெரோயின் போதைப்பொருளை இளைஞரொருவர் வைத்திருப்பதாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து குறித்த இளைஞரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 4 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை, மிகிந்தபுரம் பகுதியைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த இளைஞரிடம் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணையின் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹொரவபொத்தானையிலிருந்து கொழும்புக்கு 2,000 கிலோ மாட்டிறைச்சியைக் கொண்டுவந்த இருவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

ஹொரவபொத்தானை பகுதியிலிருந்து கொழும்பு தெமட்டகொட பகுதிக்கு வாகனமொன்றில் பெருந் தொகையான மாட்டிறைச்சியினை எடுத்துச்சென்ற சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய ஹொரவபொத்தானை, வில்லவெவ பகுதியில் நேற்று (17) அதிகாலை நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்கள் இருவரை கைதுசெய்துள்ளதுடன், இரண்டாயிரம் கிலோவிற்கும் அதிகமான மாட்டிறைச்சியையும் கூலர் வாகனத்தையும் ஹொரவப்பொத்தானை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 40, 45 வயதுடைய வெள்ளவத்தை மற்றும் கண்டி பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

ஹொரவப்பொத்தானை, திம்பிரிஅத்தாவெவ பகுதியில் பசுமாடுகளை அறுத்து இறைச்சியினை கூலர் வாகனத்தில் எடுத்துச்செல்வதற்கு சிலர் ஆயத்தமாவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றுக்கு அமையவே குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரவப்பொத்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 18ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# தணிகிறதா மூன்றாம் உலகப்போர் அச்சம்!

உக்ரைன் எல்லையருகே படைகளை வாபஸ் பெற்றதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

ஆனால், அது பொய்யான தகவல் என அமெரிக்க அரசின் மூத்த அதிகாரி ஒருவர் புதன்கிழமை தெரிவித்துள்ளார். செய்தியாளர்களை சந்தித்த அவர் இது குறித்து கூறுகையில், "உக்ரைன் எல்லையிலிருந்து படைகளை வாபஸ் பெறுவதாக ரஷ்ய அரசு தெரிவித்துள்ளது. அந்தக் கூற்றுக்காக அவர்கள் இங்கும், உலகெங்கிலும் அதிக கவனத்தைப் பெற்றனர். ஆனால், அது பொய் என்று இப்போது எங்களுக்குத் தெரியும்" என்றார்.

படைகளை ரஷ்யா மீளப்பெறவில்லை என்பதற்காக ஆதாரங்களை அந்த அலுவலர் வெளியிட மறுத்துவிட்டார். இதுகுறித்து விரிவாகப் பேசிய அவர், "ரஷ்யா, உக்ரைனிய எல்லையில் தனது துருப்புகளை மேலும் 7000த்தால் அதிகரித்துள்ளது. அவர்களில் பலர் சமீபத்தில், அதாவது கடந்த புதன்கிழமைதான் குவிக்கப்பட்டனர்" என்றார்.

படைகள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாகக் கூறிய ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சு, உக்ரைன் அருகே போர்ப் பயிற்சிக்குப் பிறகு அதன் படைகள் பின்வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேலும், கிரிமியா தீபகற்பத்திலிருந்து படைகள் வெளியேறுவதைக் காட்டும் வகையில் ஒரு வீடியோவையும் ரஷ்யா வெளியிட்டது.

இதனை மறுத்துள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் என்டனி பிளிங்கன், முக்கியமான துருப்புகளை எல்லையருகே ரஷ்யா குவித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

சோவியத் யூனியன் கடந்த 1991ஆம் ஆண்டில் சிதறியபோது, அதில் அங்கமாக இருந்த உக்ரைன் சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டது. தனது எல்லையையொட்டி அமைந்துள்ள அந்த நாடு, சோவியத் யூனியனுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் இணைந்தால் அது தங்களது பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று ரஷ்யா கருதுகிறது.

உக்ரைனை தங்களது அமைப்பில் இணைக்க மாட்டோம் என்று நேட்டோ உறுதிமொழியளிக்க, நேட்டோவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், உக்ரைன் எல்லையருகே ஏராளமான எண்ணிக்கையில் படையினரை ரஷ்யா குவித்துள்ளது.

அங்கு ஒன்றரை இலட்சத்துக்கு மேல் படையினரை ரஷ்யா குவித்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும், உக்ரைன் மீது ரஷ்யா விரைவில் படையெடுக்கும் என்று அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் கூறி வருகின்றன.

இந்தச் சூழலில்தான், எல்லைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த தங்களது படையினரின் ஒரு பகுதியினர் நிலைகளுக்குத் திரும்பத் தொடங்கியதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

உக்ரைன் எல்லைப் பகுதியில் ரஷ்யா ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட படைவீரர்களை நிறுத்தி அவர்களுக்கு தொடர்ந்து பயிற்சியளித்து வருவது அங்கு பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா எச்சரிக்கைகள் விடுத்தும் ரஷ்யா தனது பயிற்சி நடவடிக்கைகளை முழுவதுமாக இன்னும் விலக்கிக்கொள்ளவில்லை.

பெப்ரவரி 16 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுக்கவுள்ளதாக வெளிவந்த செய்திகளையடுத்து, இந்தியா உள்ளிட்ட நாடுகள் உக்ரைனிலுள்ள தங்கள் குடிமக்களைப் பாதுகாப்பாக வெளியேறுமாறு அறிவுறுத்தின. உக்ரைனிலுள்ள ரஷ்ய தூதரக அதிகாரிகளும் வெளியேறத் தொடங்கியமை இந்த அச்சத்துக்கு மேலும் வலுசேர்த்தது. எனினும், ரஷ்யா ராஜதந்திர ரீதியில் இந்தப் பிரச்சினையை நீடிப்பதற்கான சமிக்ஞைகளையும் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது.

எல்லையின் பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்து மேற்குலக நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், எல்லையிலிருந்து படைப்பிரிவுகளை விலக்கிக்கொள்ளவும் தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தெரிவித்திருப்பதிலிருந்து அவருக்குப் போரை நோக்கி நகரும் உத்தேசமில்லை என்று புரிந்துகொள்ள முடிகிறது. ஜேர்மன் பிரதமர் ஒலாஃப் ஸ்கால்ஸுடன் இணைந்து புட்டின் பங்கேற்ற பத்திரிகையாளர் சந்திப்பு பதற்றத்தைத் தணிக்கும் அதேவேளை, மறுபுறம் ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழவை, கிழக்கு உக்ரைனை சுதந்திரம் பெற்ற தனிநாடாக அங்கீகரிக்க வேண்டுமாறு ஜனாதிபதி புட்டினைக் கேட்டுக்கொண்டிருப்பது பதற்றத்தைத் தணிப்பதாகவும் இல்லை.

ஒருவேளை, ரஷ்யா தாக்குதலில் ஈடுபட்டால், உக்ரைனுக்கு அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரவளிக்கக்கூடும். ஏற்கனவே போலந்து நாட்டின் எல்லையில் நேட்டோ படைகள் களமிறக்கப்பட்டுள்ளன. உக்ரைனிலிருந்து வெளியேறும் அகதிகளை ஏற்றுக்கொள்வதற்கு போலந்து தயாராகி வருகிறது. அதற்கான உதவிகளை அமெரிக்கா செய்துவருகிறது. இந்நிலையில், பேச்சுவார்த்தைகள் மூலமாக போர்ப் பதற்றத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் உலகம் முழுவதும் எழுந்துள்ளன.

குறிப்பாக, மேற்குலக நாடுகள் உக்ரைன் மீதான போரைத் தவிர்க்குமாறு ரஷ்யாவுக்கு மேலதிக அழுத்தத்தை உருவாக்க வேண்டும் என்று கோரப்படுகிறது. ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே தோல்வியடைந்த பழைய பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கலாம் என்றும் பேசப்படுகிறது. ஆனால், உக்ரைன் தனக்குக் கட்டுப்பட்ட நாடாக இருக்கவேண்டுமென்றும், நேட்டோவின் அங்கமாக மாறிவிடக் கூடாது என்றும் ரஷ்யா விரும்புகிறது. சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த பின்பும், உக்ரைன் மீதான அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ளவே ரஷ்யா விரும்புகிறது. தனக்கு ஆதரவான ஆட்சியாளர்களை அமர்த்துவது, அந்த முயற்சிகள் தோல்வியடையும்போது எல்லைப் பகுதிகளைக் கைப்பற்றுவது, பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளிப்பது என்று தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது ரஷ்யா.

மொத்தத்தில், ரஷ்யாவுக்கும், ஐரோப்பாவுக்கும் இடையிலான அதிகாரப் போட்டியில் உக்ரைன் ஒரு பகடைக்காயாக உருட்டப்படுகிறது. இருவேறுபட்ட அதிகார மையங்களின் எல்லைப் பகுதிகளுக்கு நடுவே அமைந்திருப்பதாலேயே இச்சிக்கலை உக்ரைன் எதிர்கொண்டுள்ளது. ஏற்கனவே பொருளாதார நிலையில் பின்னடைவைச் சந்தித்துள்ள உக்ரைன் போர்ப் பதற்றச் சூழலால் மேலும் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம். அங்கு நிலவும் பதற்றநிலை விரைவில் தணியவேண்டும்.

தற்போதைய கொரோனா சூழ்நிலையில் மூன்றாவது உலகப்போர் ஒன்று வருமாயின் அது ரஷ்யா, உக்ரைன் மற்றும் அதன் அண்டைய நாடுகளில் மட்டுமல்ல, முழு உலகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கையின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டு பொருளாதாரம் சேதாரத்திற்குள்ளாகும்.

# இரண்டு ஒலிம்பிக்ஸ் இரண்டு சீனா




பீஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் நடைபெற்று வருகின்றது. இது பெப்ரவரி 4ஆம் திகதி தொடங்கியது. 91 நாடுகளிலிருந்து பீஜிங் வந்திருக்கும் 3,000 வீரர்கள் 109 தங்கப் பதக்கங்களுக்காகப் போட்டியிடுகிறார்கள். இது சீனாவில் நடக்கும் இரண்டாவது ஒலிம்பிக்காகும். எல்லா நாடுகளும் முழுமூச்சோடு பங்கேற்கும் கோடை ஒலிம்பிக், இதே பீஜிங்கில் 2008இல் நடந்தது. இந்தப் போட்டிகள் முடியும் பெப்ரவரி 20 அன்று, கோடை-குளிர் ஆகிய இரண்டு ஒலிம்பிக்களையும் நடத்திய ஒரே நாடு என்கிற பெயர் சீனாவுக்குக் கிடைக்கும்.

2022 ஒலிம்பிக், 2008 ஒலிம்பிக்கைவிட பல விதங்களிலும் வேறுபட்டது. இந்த முறை கொரோனாவின் காரணமாக பார்வையாளர்களுக்கு அனுமதியில்லை. போட்டியாளர்களும், பயிற்சியாளர்களும் "பாதுகாப்புச் சிமிழுக்குள்" பேணப்படுகிறார்கள். போட்டி முடிந்ததும் சிமிழுக்குள் போய்விட வேண்டும். முதன்முறையாக, முற்றிலும் செயற்கையாக உருவாக்கப்பட்ட பனியின் மீது போட்டிகள் நடக்கின்றன. வேறுபாடுகள் இந்த இடத்தில் முடிவதில்லை.

**அது காத்திருப்பின் காலம்**

உலகின் தொழிற்சாலையாக உருவாகிக்கொண்டிருந்த சீனாவை யாருடைய கண்ணும் படாமல் வளர்க்க வேண்டுமென்று விரும்பினார் அப்போதைய தலைவர் டெங்-சியோ-பிங். சீனத் தலைவர்களுக்கு அவர் வழங்கிய அறிவுரை இது: "அமைதியாக அவதானி. உன் இடத்தை உறுதி செய்துகொள். உன் சக்தியை வெளிக்காட்டாதே. அடக்கி வாசி" என்பதாகும். சீனா அவ்வண்ணமே செய்தது. அது பல காலம் தன் சக்தியை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. 2008 போட்டியின் முன் நிகழ்ந்த ஒலிம்பிக் பந்தத்தின் பவனியில் சீனாவின் அடக்கி வாசிக்கும் திறனைக் காணமுடிந்தது.

ஒலிம்பிக் மைதானத்தின் நடுவில் எரியும் ஜோதி, உலகின் பல நகரங்கள் வழியாகத் தொடர் ஓட்டம் மூலமாகக் கொண்டுவரப்படும். 2008 இல் இந்தத் தொடர் ஓட்டத்தின்போது பல நாடுகளில், மனித உரிமை ஆர்வலர்கள் சீனாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். லண்டனில் ஓட்டத்தைத் தொடங்கிவைத்தவர் துடுப்புப் படகில் ஐந்து முறை தங்கம் வென்ற ஸ்ரீவ் ரெட்க்ரேவ் ஆவார். அவரது கைகளிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பந்தத்தைப் பறித்தார் கள். பல நகரங்களில் தொடர் ஓட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சீனர்கள் அப்போது ஒலிம்பிக் குறித்து பெரும் எதிர்பார்ப்பில் இருந்தனர். தங்கள் பெருமிதத்தை அந்நியர்கள் பங்கப்படுத்துவதாகக் கருதினர். ஆகவே, சீனாவிலுள்ள அமெரிக்க, ஆங்கிலேய, பிரெஞ்சு நிறுவனங்களின் எதிரில் ஆர்ப்பாட்டம் செய்தனர். சீனத் தலைவர்கள் அவர்களை மட்டுப்படுத்தினர். ஏனெனில், அது சீனா அடக்கி வாசித்த காலம். சீனத் தலைவர்களுக்குத் தெரிந்திருந்தது. பந்தத்தின் பவனி என்பது ஒரு சடங்கு. விளையாட்டுத்தான் முக்கியம். அவர்களின் பொறுமைக்குப் பலனிருந்தது.

2008இற்கு முன்பும், அதற்குப் பின்பும் அப்படி ஒரு விமரிசையான ஒலிம்பிக் கொண்டாட்டத்தை வேறு எந்த நாட்டாலும் காட்சிப்படுத்த முடியவில்லை. அந்த ஒலிம்பிக்கில் சீனா 100 பதக்கங்களை அள்ளியது. அதில் சரி பாதி தங்கம். அந்த விளையாட்டின் முடிவில் உலக நாடுகளிடையே சீனாவின் மதிப்பு உயர்ந்தது. அந்த மதிப்பைத் தக்கவைத்துக்கொள்ள சீனா தனது நாட்டில் மனித உரிமைகளை மேம்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அப்படி நடக்கவில்லை.

**இது மோதலின் காலம்**

இப்போது 2022 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கெடுக்கும் பல ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்க, கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளும் தொடக்க விழாக் கொண்டாட்டங்களைப் புறக்கணித்துவிட்டன. சின் ஜியாங் மாநிலத்தில் வசிக்கும் உய்குர் முஸ்லிம்கள் இனத்தால், மொழியால், மதத்தால் பெரும்பான்மை சீனர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். அங்கு மறுகல்வி முகாம்கள் அமைக்கப்பட்டு, உய்குர்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டு நெடுநாளாக இருந்துவருகிறது.

இதுதான் மேலைநாடுகளின் புறக்கணிப்புக்குக் காரணம். முதலில் இந்தப் புறக்கணிப்பிலிருந்து இந்தியா தள்ளி நின்றது. ரஷ்யா கேட்டுக்கொண்டதும் ஒரு காரணம். ஆனால், போட்டி தொடங்குவதற்கு முன்னர் ஒலிம்பிக் பந்தத்தை ஏந்தப் போகிறவர்களில் ஒருவர், 20 இந்திய வீரர்கள் கொல்லப்பட்ட கால்வன் போரில் (2020) பங்கேற்ற சீன அதிகாரி என்பது தெரிந்ததும் இந்தியாவும் புறக்கணிப்பில் சேர்ந்துகொண்டது.

**அதிகாரக் குவியல்**

மா-சே-துங்கின் மறைவுக்குப் பிறகு சீன கம்யூனிஸ்ட் கட்சி சுயபரிசீலனை செய்துகொண்டது. ஒரே தலைவரிடம் அதிகாரம் குவிந்திருந்ததே முந்தைய வீழ்ச்சிகளுக்குக் காரணம் என்று கருதியது. அதனால், அதிகாரத்தைப் பரவலாக்கியது. மேலும், ஒரு ஜனாதிபதியின் பதவிக்காலம் 10 ஆண்டுகளுக்கு அதிகமாகக் கூடாது என்றும் நிர்ணயித்தது. இப்போதைய ஜனாதிபதி ஷி ஜிங்பிங் இந்த விதிகளை மாற்றி எழுதிவிட்டார். 2012 இல் பதவிக்கு வந்த ஷி, 2022இற்குப் பிறகு, மேலும் ஒரு தசாப்தமேனும் அதிகாரத்தில் நீடிப்பார். கட்சி, ஆட்சி, இராணுவம், வெளியுறவு என அனைத்து அலகுகளிலும் அவரது ஆதிக்கம் நீடிக்கும். இப்போது ஷியின் சீனா அடக்கி வாசிப்பதில்லை. அது வெளிப்படையாக மோதுகிறது. அமெரிக்காவுடனான வணிக யுத்தத்திலும், தென்சீனக் கடல் ஆக்கிரமிப்பிலும், இந்திய எல்லையைத் தாண்டுவதிலும் அது வெளிப்படுகிறது.

**இந்தியாவின் நிலை**

இந்தியாவுக்கும், சீனாவுக்குமிடையில் பிணக்குகள் வளர்ந்தபடி இருக்கின்றன. ஆனால், 2021இல் சீனாவிலிருந்து இந்தியா இறக்குமதிசெய்த பொருட்களின் மதிப்பு முதன்முறையாக 100 பில்லியன் டொலரைத் தொட்டுவிட்டது. இது முந்தைய ஆண்டைவிட 46 வீதம் அதிகம். கைபேசிகள், மருந்துப் பொருட்கள், வாகன உதிரிப்பாகங்கள் தொடங்கி எண்ணற்ற பொருட்கள் இறக்குமதியாகின்றன.

விளையாட்டுப் போட்டி வெறும் விளையாட்டல்ல. அது பகையும், பொறாமையும், அகங்காரமும் நிறைந்த போர் என்றார் ஜோர்ஜ் ஆர்வெல். மைதானத்துக்கு வெளியேயும் போட்டிகள் நடக்கின்றன. 2008 இல் சீனாவின் கை மைதானத்துக்குள் ஓங்கியிருந்தது. 2022இல் மைதானத்துக்கு வெளியேயும் ஓங்கியிருக்கிறது. இந்தச்சூழலுக்கு நாடுகள் தங்களை தகவமைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் இந்த குளிர்கால ஒலிம்பிக் வழங்கும் செய்தியாகும்.

• மு.இராமநாதன்
எழுத்தாளர்

# நினைவில் வாழும் ரிச்சர்ட் டி சொய்சா



ரிச்சர்ட் டி சொய்சா (18 மார்ச் 1958 - 18 பெப்ரவரி 1990) இலங்கையில் இருந்த முன்னணி ஊடகவியலாளர், மனித உரிமை செயற்பாட்டாளர் மற்றும் நடிகராவார்.

இவர் இனந்தெரியாத நபர்களால் இவரது வீட்டிலிருக்கும்போது கடத்தப்பட்டு 1990 பெப்ரவரி 18 இல் கொலைசெய்யப்பட்டார். இலங்கையின் தேசிய தொலைக்காட்சி சேவையான ரூபவாஹினியில் ஆங்கில செய்தி வாசிப்பாளராகவும், பத்திரிகை ஆசிரியராகவும் செயலாற்றிய ரிச்சர்ட் கொலைசெய்யப்பட்டபோது உலக ஊடகவியலாளர் சேவையின் கொழும்புக் கிளையின் பொறுப்பாளராகவும் செயற்பட்டுவந்தார்.

ரிச்சர்ட் இலங்கையின் பெரும்பான்மை சிங்களத் தந்தைக்கும், சிறுபான்மை தமிழ்த் தாய்க்கும் பிறந்தவராவார். இவர் கொழும்பில் பிறந்து வளர்ந்தார். பிரபல ஊடகவியலாளரும், மலேசியாவில் வசித்தவருமான மாணிக்கசோதி சரவணமுத்துவின் மகளும், பிரபல மருத்துவருமான மனோராணி சரவணமுத்துவின் மகனே ரிச்சர்ட் ஆவார். மகனது மரணத்தின் பின்னர் இவர் "மகன்களை இழந்த தாயார்" என்ற சங்கத்தை ஆரம்பித்து மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தார்.

ரிச்சர்ட் தனது தாயாருடன் வெலிக்கடவத்த வீடமைப்புத்திட்டத்தில் வசித்து வந்தார். 1990 பெப்ரவரி 17 இரவில் அங்கு வந்த ஆயுதம் தாங்கிய குழுவினர் அவரை அங்கிருந்து கடத்திச் சென்றனர்.

தாயார் உடனடியாக வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையிட்டார். அடுத்த நாள் பெப்ரவரி 19, 1990 அன்று ரிச்சர்ட்டின் உடல் கொழும்பிலிருந்து தெற்கே 20 கி.மீ. தூரத்தில் மொரட்டுவை கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டது. அவர் தலையிலும் கழுத்திலும் சுடப்பட்டிருந்தார். அவரது வாயெலும்பில் முறிவு காணப்பட்டது. ரிச்சர்ட்டின் உடலை அவரது நண்பரான, 2006 இல் கடத்தி கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் தராக்கி சிவராம் அடையாளம் காட்டினார்.

**அரசின் நடவடிக்கைகள்**

வைத்தியர் சரவணமுத்து அடுத்த நாள் தனது மகனைக் கடத்தியவர்களை அடையாளம் காட்டமுடியும் எனக் கூறியிருந்தார். மூன்று மாதங்களுக்குப் பிறகு, தொலைக்காட்சியில் வந்த நபர் ஒருவரை அவர் அடையாளம் கண்டார். அவர் ஒரு பொலிஸ் அதிகாரியாவார். இது வழக்கில் தெரிவிக்கப்பட்டபோதிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக சரவணமுத்துவும், அவரது சட்டத்தரணி பட்டிவீரக்கோனும் கொலை அச்சுறுத்தல்களை எதிர்நோக்கினர். 2004இல் வைத்தியர் சரவணமுத்து தனது மகனது கொலையாளர்களைக் காணாமலேயே காலமானார்.

**ஐக்கிய நாடுகள் விருது**

ஐ.நாவினால் சுதந்திர ஊடகவியலாளருக்கான விருதொன்று ரிச்சர்ட் டி சொய்சாவின் பெயரில் வழங்கப்பட்டு வருகிறது.

ரிச்சர்ட் டி சொய்சா அரசியல் காரணங்களுக்காகவே கொலைசெய்யப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன. அவர் படுகொலை செய்யப்பட்டாலும் அவரின் நினைவுகள் இன்றும் எம்முன் உள்ளன.

# இன்றைய நாளில்...

* 1832 – யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பல இடங்களில் ஓர் அசாதாரண எரிவெள்ளி தோன்றியது.
* 1911 – முதலாவது அதிகாரபூர்வமான வான்வழிக் கடிதப் போக்குவரத்து இடம்பெற்றது. இதன்போது இந்தியாவின் அலஹாபாத் நகரிலிருந்து 10 கி.மீ. தூரத்திலுள்ள நைனி நகருக்கு 6,500 கடிதங்கள் கொண்டுசெல்லப்பட்டன.
* 1946 – இலங்கையில் ருவான்வெலிசாய தாதுகோபுரத்தில் 2,000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த புத்தரின் உருவ ஓவியம் கண்டுபிடிக்கப்பட்டது.
* 1948 – இந்திய தேசத்தந்தை மகாத்மா காந்தியின் அஸ்தியின் ஒரு பகுதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க இதனைப் பெற்றுக்கொண்டார்.
* 1959 – நேபாளத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
* 2014 – ராஜிவ் காந்தி கொலை வழக்கு: இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைசெய்யப்பட்ட வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக உச்ச நீதிமன்றம் குறைத்துத் தீர்ப்பளித்தது.

# நக்கல் நமசிவாயம்

வறுமைப்பட்ட ஆக்களின்ர எண்ணிக்கை 5 இலட்சத்தால் அதிகரிச்சிருக்கிறதா ரணில் ஐயா சொல்லியிருக்கிறார்..! அதுக்கு அவரும் ஒரு காரணகர்த்தா என்பதை மறந்திட்டார் போல..!



# மாணவர் ஒன்றியத்தை அங்கீகரிக்க கோரி யாழ். பல்கலையில் போராட்டம்

## நுழைவாயிலை முற்றுகையிட்டதால் பதற்றம்










வீடியோவைக் காண...

**(யாழ்.செய்தியாளர்)**

மாணவர் ஒன்றியத்தை அங்கீகரிக்குமாறு கோரி யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் நுழைவாயிலை மூடி நேற்று (17) காலை முடக்கல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பல்கலையில் கடந்த பல மாதங்களாக செயலிழந்து கிடக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை அங்கீகரிக்குமாறு மாணவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இதன்காரணமாக பல்கலைக்கழக ஊழியர்கள், ஆசிரியர்கள், உள்நுழைய முடியாத நிலையேற் பட்டிருக்கின்றது.

இதனையடுத்து துணைவேந்தர் எஸ்.ஸ்ரீ சற்குணராஜா இன்றைய தினம் பரீட்சைகள் நடந்துகொண்டிருப்பதால் வாயில் கதவை திறக்கும்படியும், பிரச்சினைகள் தொடர்பாக பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் மாணவர்களிடம் கூறியிருந்தார்.

எனினும் எழுத்தில் முன்வைத்த கோரிக்கை 4 மாதங்களாக எடுக்கப்படவில்லை எனக் கூறி மாணவர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர்.



லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் தனியார் நிறுவனத்தின் மற்றுமொரு வெளியீடாக 'கிரண' சிறுவர் சஞ்சிகை, கொழும்பிலுள்ள அதன் தலைமையகத்தில் நேற்று (17) வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த சஞ்சிகை, லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் சந்திரசேனவினால் கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேராவுக்கு வழங்கப்பட்டது. (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

## 17.02.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 030 5 14 | 036 46 2 |
| கனேடியன் டொலர் | 044 1207 | 050 811 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 768 | 21 2407 |
| யூரோ | 115 5841 | 124 1575 |
| ஜப்பான் யென் | 0 6 75 | 0 6615 |
| சிங்கப்பூர் டொலர் | 036 2786 | 041 028 |
| ஸ்ரேலிங் பவுன் | 157 3415 | 165 8145 |
| சுவிஸ் பிராங்க் | 103 586 | 110 5387 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 6808 |
| குவைட் | குவைட் தினார் | 556 4775 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 6 3 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 2 08 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 7244 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 8874 |

# அரியவகை ஆந்தைக் குஞ்சுகள் புத்தளம் காட்டுப்பகுதியில் மீட்பு




**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் காட்டுப் பகுதியிலிருந்து அரிய வகை மூன்று வெள்ளை நிற ஆந்தைக் குஞ்சுகள் நேற்று (17) மீட்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாய் ஆந்தையின் பராமரிப்பில் இருந்த மேற்படி ஆந்தைக் குஞ்சுகள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் மரத்திலிருந்து கீழே விழுந்திருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கூறினர்.

குறித்த ஆந்தைக் குஞ்சுகள் கூகை ஆந்தை (Barn Owl) வகை இனத்தைச் சேர்ந்தவையாகும்.

இவ்வாறு மீட்கப்பட்ட மூன்று ஆந்தைக் குஞ்சுகளும் ஆபத்தான நிலையில் இல்லை என்றும், அவை நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

குறித்த ஆந்தைக் குஞ்சுகள் மேலதிக மருத்து தேவைகளுக்காக நிக்கவெரட்டிய வனவிலங்கு கால்நடை மருத்துவப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட குறித்த ஆந்தைக் குஞ்சுகள் தனித்து வாழக்கூடிய நிலையில் இப்போது இல்லை எனவும், அவை நிக்கவெரட்டிய வனவிலங்கு கால்நடை மருத்துவப் பிரிவில் வைக்கப்பட்டு, உரிய முறையில் பாதுகாப்பாக வளர்க்கப்பட்டு, அவை தனித்து வாழும் வயதை எட்டியதும், காட்டுப்பகுதியில் விடப்படும் என்று வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# கல்குளம் கிணற்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

அநுராதபுரம் கல்குளம் பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற கிணறொன்றிலிருந்து ஆண் ஒருவருடைய சடலத்தை கவரக்குளம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய 15ஆம் திகதி மாலை சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் பிரதேசவாசிகளின் உதவியுடன் கிணற்றிலிருந்த சடலத்தை மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் நெலுங்கண்ணி பகுதியில் தற்காலிகமாக வசித்துவந்த 41 வயதுடைய தம்பான மஹியங்கனை பகுதியைச் சேர்ந்தவரென அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாராவது இவரைக் கொலைசெய்து கிணற்றில் போட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் கவரக்குளம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுர கவரக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டுநாயக்க – கொழும்புக்கு 40 நிமிடங்களில் ரயில் பயணம்

## அமைச்சர் பவித்ரா பணிகளை ஆரம்பித்துவைத்தார்



கட்டுநாயக்கவிலிருந்து நீர்கொழும்பு நகரத்திற்கு 40 நிமிடங்களில் பயணிப்பதற்கான ரயில் சேவைக்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக, கட்டுநாயக்க - நீர்கொழும்பு ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் இரட்டை ரயில் பாதைகளை அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இதற்கான ரயிலை உத்தியோகபூர்வமாக சேவையில் ஈடுபடுத்தும் நிகழ்வு போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தலைமையில் நேற்று முன்தினம் (16) இடம்பெற்றது.

இதன்மூலம் கொழும்பு கோட்டையிலிருந்து கட்டுநாயக்க வரை செல்லும் பயணிகளுக்கு தற்போது 40 நிமிடங்களுக்குள் சென்றடைவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இதன் நிர்மாணப் பணிகளுக்கென 4 ஆயிரத்து 446 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, களுத்துறை – கொழும்பு, வெயங்கொட – கொழும்பு, அவிசாவளை – கொழும்பு ஆகிய நகரங்களுக்கிடையிலும் இவ்வாறான ரயில் சேவைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இந்த நிகழ்வின்போது தெரிவித்தார்.

# விமானப்படையால் விசேட அறுவடை திட்டம் மொறவெவவில் அறிமுகம்



இலங்கை விமானப்படை, குறைந்த வருமானம் பெறும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் அறுவடை செலவைக் குறைக்கும் நெல் அறுவடை திட்டத்தை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

மொறவெவ விமானப்படை நிலைய கட்டளை அதிகாரி குரூப் கப்டன் லலித் சுகததாசவின் மேற்பார்வையின் கீழ் நெல் அறுவடை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டத்தின் ஊடாக மொறவெவ பிரதேச செயலகம் மற்றும் பிராந்திய நெல் விவசாய சங்கங்களின் பரிந்துரையின்கீழ் தெரிவு செய்யப்பட்ட 31 விவசாய குடும்பங்கள் பயனடையவுள்ளன.

இதற்கமைய முதற்கட்டமாக 93 ஏக்கரில் நெல் அறுவடை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இரண்டாவது மற்றும் மூன்றாம் கட்டங்கள் முறையே கனுகஹவெவ மற்றும் அம்பாறை பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் விமானப்படை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேசிய கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன பணிப்புரை விடுத்துள்ளதாக விமானப்படை மேலும் தெரிவித்துள்ளது.

# அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த சி.ஐ.டியில் வாக்குமூலம்



அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வந்து மூன்று மணிநேர வாக்குமூலமொன்றை நேற்று (17) வழங்கினார்.

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வெளியிட்ட கருத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் கடந்த டிசெம்பர் 10ஆம் திகதி செய்யப்பட்ட இந்த முறைப்பாடு குறித்த வாக்குமூலம் பெற்றுக்கொள்ள அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த, குற்றப்புலானாய்வுப் பிரிவுக்கு நேற்று (17) அழைக்கப்பட்டிருந்தார்.

அதன்படி, முற்பகல் 9.45 மணியளவில் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த வருகைதந்திருந்தார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கருத்து மற்றும் ஏப்ரல் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறும், சட்டநடவடிக்கை எடுக்குமாறும் தாம் கோரியுள்ளதாக அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவிலிருந்து வெளியேறிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

# பிரதமரின் செயலருக்கு கொரோனா தொற்று



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் அநுர திஸாநாயக்கவுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமரின் செயலாளர் காரியாலயத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று அறிகுறிகள் தென்பட்டதால் அவர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன்போது அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

இதனையடுத்து அவருடன் தொடர்பில் இருந்தோரை தனிமைப்படுத்துவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பெருந்தோட்டத்துறைக்கென மாத்திரம் விசேட தொழிற்சட்டம் அவசியமாகும்

## இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கம் கோரிக்கை

(கண்டி செய்தியாளர்)

பெருந்தோட்டத்துறைக்கான ஒரு விசேட தொழிற்சட்டம் உடனடியாக கொண்டுவரப்பட வேண்டும். அல்லது பெருந்தோட்டங்களில் தொழில் செய்துவரும் அனைத்து தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாகவும் சட்ட வலுவூட்டல் மூலமான சமத்துவ பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் - என கண்டியை தலைமையகமாகக்கொண்டு இயங்கும் இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கம் நேற்று (17) தெரிவித்துள்ளது.

அதன் ஆலோசகர் மேனகா கந்தசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பெருந்தோட்டப் பொருளாதாரமானது அடிமை முறை மற்றும் பலவந்த உழைப்பு என்ற அடிப்படையில் பிரித்தானிய காலனித்துவ காலத்தில் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. காலப்போக்கில் இந்த அடிமை முறையில் தளர்வு ஏற்றபட்டது. அந்தவகையில் 2003ஆம் ஆண்டு முதல் கூட்டு ஒப்பந்தம் பெருந்தோட்டத்திற்கே உரித்தான நடை முறை சார்ந்த பல விடயங்களை உள்ளடக்கிய ஒரு ஒப்பந்தமாக இருந்தது.

இன்று 1000 ரூபா நாட்சம்பளம் என்பது மிகவும் குறைந்த சம்பளமாகும். இந்த 1000 ரூபா சம்பள உயர்வு கூட்டு ஒப்பந்தத்திற்கூடாக மேற்கொள்ளாது வேறாக பிரித்தெடுக்கப்பட்டு சம்பள நிர்ணய சபைக்கூடாக மேற்கொள்ளப்பட்டது.



இதனை ஒரு காரணமாகக் காட்டி, உயர்த்தப்பட்ட 1000 ரூபா சம்பளம் எமது தொழிலாளர்களது கைகளுக்கு செல்லாதிருக்க தோட்டக் கம்பனிகள் முற்பட்டுள்ளன.

தோட்டங்களிலுள்ள தொழிற்சங்கம் மற்றும் தோட்டக் கமிட்டி தலைவர்களுடன் கலந்துரையாடியே எடுக்கவேண்டிய கொழுந்தின் அளவு தீர்மானிக்கப்பட வேண்டும். ஆனால், இன்று கம்பனிகள் தாம் நினைத்த அளவினை நிர்ணயித்து அதற்கு குறைவான அளவு கொழுந்தை அல்லது இறப்பர் பாலை எடுக்கும் போது நாளொன்றுக்கு அரை பெயர் போடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக முன்னர் எடுத்த சம்பள அளவினை விடக் குறைந்த சம்பளத்தையே எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, தோட்டங்களின் தொழிலாளர்களின் நிரந்தரத் தொழிலை இல்லாமற்செய்யும் நோக்கில் சில விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.


இதன்மூலம் தொழிலாளர்கள் இவ்வளவு காலமாக அனுபவித்துவந்த சகல தொழில் உரிமைகளையும் இழக்கின்றனர். குறிப்பாக ஈ.பி.எவ். மற்றும் ஈ.டி.எவ். பிரசவ சகாய நிதி, நட்ட ஈடுகள் மற்றும் சேவைகாலப் பணம் போன்ற பல்வேறு தொழில் உரிமைகளும் நீக்கப்படுகின்றன. அரசின் அனுமதியுடனே கம்பனிகள் பெருந்தோட்டத்துறைக்குள் வந்தன. இக்கம்பனிகளின் கடமை இந்நாட்டிலுள்ள சகல தொழில் உரிமைகளையும் பின்பற்றுவது. அதனை இக்கம்பனிகள் செய்ய தவறும்பட்சத்தில் அரசு தலையிட்டு தொழிலாளர்களுக்கெதிரான தொழில் உரிமை மீறல்களை தடுக்க வேண்டும். தற்போது இந்தளவு அராஜகம் நடக்கும்போது எதுவும் தெரியாததுபோல் பாராமுகமாக இருப்பதும் மற்றுமொரு அராஜகமாகும்.

தொழில் சார்ந்த பிரச்சினைகளுக்கு கூட்டு ஒப்பந்தம் ஓரளவு தீர்வை பெற்றுக்கொடுத்தது. அதில் பல இடைவெளிகள் உள்ளன. அவை நிரப்பப்பட வேண்டும். இல்லையெனில், பெருந்தோட்டத்துறைக்கான ஒரு விசேட தொழிற்சட்டம் உடனடியாக கொண்டுவர வேண்டும்.

சகல பொறிமுறைக்குள்ளும் பெருந்தோட்டத் தொழிலாளர் சிந்தனையுடைய பெண்கள் உள்வாங்கப்பட வேண்டும். ஒட்டுமொத்த பெருந்தோட்டங்களில் வேலை செய்துவரும் அனைத்து தொழிலாளர்கள் தொடர்பாகவும் சட்டத்தை வலுவூட்டி அவர்களுக்கு சட்டத்தின் மூலமான சமத்துவமான பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூவிலி எல்ல நீர்வீழ்ச்சியில் சிக்கிய இளைஞர் மாயம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)



பலாங்கொடை கல்தோட்ட தூவிலி எல்ல நீர்வீழ்ச்சியில் நீராடிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமல்போயுள்ளார்.

நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற இச்சம்பவத்தில் காணாமல்போயுள்ள இவ்விளைஞரை தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் பலனளிக்காமையினால் தேடுதல் முயற்சிகளை மேலும் விரிவுபடுத்தவுள்ளதாக பலாங்கொடை கல்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

காவத்தை எந்தான சமரகந்த பிரதேசத்தைச் சேர்ந்த இவ்விளைஞர் நீர்வீழ்ச்சியின் மேற்பகுதியின் கல் ஒன்றிலிருந்து இன்னொரு கல்லிற்கு தாவிப் பாய முயற்சித்தபோது தவறி விழுந்துள்ளார். அதன்பின்னர் நீரலையில் சிக்கி அதில் அடித்துச் சென்றதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இளைஞரைத் தேடும் பணியும் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தேயிலை திருடிய நால்வர் நோர்வூட் பொலிஸாரால் கைது

## நள்ளிரவு திருட்டை கண்காணிப்புக் கெமரா காட்டிக்கொடுத்தது

(கண்டி செய்தியாளர்)

தேயிலைத் தொழிற்சாலையில் தயார் நிலையில் இருந்த 172 கிலோ தேயிலையை திருடியதாக மூன்று தொழிலாளர்களும் ஒரு வர்த்தகரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவிலுள்ள ஹிலரி தோட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி தேயிலைக் களவு தொடர்பாக காவலாளி உட்பட இரண்டு ஊழியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினத்திற்கு முதல்நாள் தயார் நிலையில் இருந்த தேயிலைப் பொதிகள் சில குறைவாக இருப்பதாக உற்பத்திப் பிரிவின் முகாமையாளர் நிர்வாகத்தினருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

அதனையடுத்து கண்காணிப்புக் கெமராக்கள் பரிசோதிக்கப்பட்டபோது நள்ளிரவுவேளையில் தொழிற்சாலையினுள் மூவர் பிரவேசித்து தேயிலைப் பொதிகளைத் திருடுவது கண்டறியப்பட்டதால் நிர்வாகம் நோர்வூட் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புளியாவத்தை பிரதேச விற்பனை நிலையம் ஒன்றிலிருந்து மேற்படி தேயிலை கண்டுபிடிக்கப்பட்டு, அதனை கொள்வனவுசெய்த வர்த்தகர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் நால்வரையும் ஹட்டன் நீதவான் முன் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சிவனொளிபாதமலையில் குளவிக்கொட்டு

கேகாலை பிரதேசத்திலிருந்து சிவனொளிபாத மலைக்கு புனித யாத்திரை சென்ற குழு ஒன்றின் மீது குளவி கொட்டியதால் 15 பேர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருவிட்ட வழியாகச் சென்ற சமயமே இவ்வாறு இவர்கள் குளவித் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். குருவிட்ட மற்றும் கேகாலை பிரதேச வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

பொலிஸார் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் அவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.



மலையகத் தமிழர்கள் பற்றிய சிறுகதை நூல் ஒன்றை நூல் வெளியீட்டாளரும் இலக்கிய விமர்சகருமான கண்டி இரா.அ.இராமன், கண்டி உதவி இந்தியத் தூதுவர் எஸ்.ஆதிராவிடம் கண்டியிலுள்ள உதவித் தூதரகத்தின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கையளித்தார். (படம்: கண்டி செய்தியாளர்)

# அமரர் பாலசுப்பிரமணியத்தின் நினைவேந்தல் நிகழ்வு பதுளையில்









(நடராஜா மலர்வேந்தன்)

மலையகத்தின் கல்வித்துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்திய அமரர் சுந்தரம்பிள்ளை பாலசுப்பிரமணியத்தின் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் (16) பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கல்விமாணி கற்கைநெறி (2017/2020) ஆசிரியர், மாணவர்களும் கல்விச் சமூகமும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் அமரர் சுந்தரம்பிள்ளை பாலசுப்பிரமணியத்தின் உருவப்பட திரைநீக்கம், மௌனஞ்சலி, மலரஞ்சலி, தீபச்சுடர் ஏற்றல், கவிதாஞ்சலி நிகழ்வு, நினைவேந்தல் உரைகள், மரக்கன்றுகள் விநியோகம், வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பகிர்ந்தளித்தல் போன்ற அம்சங்கள் இடம்பெற்றன.

இதன்போது பதுளை கற்கைநெறி இணைப்பாளர் எஸ்.ஜெயகாந்தன், விரிவுரையாளர்கள் எஸ்.பிரபாகரன், பிரகாஸ், திருமதி சர்மிளா, சிவகுமார், பதுளை சரஸ்வதி தமிழ் தேசிய கல்லூரியின் உப அதிபர் தேவேந்திரன், பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபர் ஆர். பவானி, சட்டத்தரணி சத்தியமூர்த்தி, அருட்சகோதரி, பதுளை விவசாய திணைக்கள உத்தியோகத்தர், அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரும் அமரர் சுந்தரம்பிள்ளை பாலசுப்பிரமணியத்தின் துணைவியாரும் ஊவா மாகாண ஆசிரியர் மத்திய நிலையத்தின் முகாமையாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய திருமதி சரஸ்வதி பாலசுப்பிரமணியம், குடும்ப உறவினர்கள் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# பதுளை திறந்தவெளி அரங்கின் எதிர்கால திட்டங்கள் குறித்து ஆளுநர் ஆராய்வு



பதுளை குப்பை மேட்டுக்குத் தீர்வாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆலோசனையின் பேரில் விஞ்ஞான ரீதியாகக் குப்பைமேட்டை அகற்றி, அந்த இடத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள திறந்தவெளி அரங்கின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் கண்டறிய ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் குறித்த இடத்திற்குக் கள ஆய்வு விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது குறித்த இடத்தை சரியான முறையில் நிர்வகித்து, துறைசார் பிரிவினரின் ஆலோசனையுடன் பொதுமக்கள் கூடுதல் பயன்பெறும் விதமாக மாற்றியமைப்பது தொடர்பில் ஆளுநரினால் மாநகர மேயருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அத்துடன், திறந்தவெளி அரங்கைச் சுற்றியும் நடைபாதை ஒன்றை அமைப்பது தொடர்பிலும் இதன்போது ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்த விஜயத்தில் பதுளை மாநகர மேயர் பிரியந்த அமரசிறி, உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஆளுநரின் செயலாளர் எம்.எம். விஜயநாயக்க, நகராட்சி ஆணையர் ஜகத் பிரியஷாந்த ஆரியரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# சமுர்த்தி மானியம் வழங்கும் செயற்பாடு அம்பகமுவவில்







(செ.தி பெருமாள்)

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக சமூர்த்தி உதவி தொகையினை பெறும் பயனாளர்களுக்காக அரசினால் அதிகரிக்கப்பட்ட சமூர்த்தி மானியத் தொகையினை வழங்கும் நிகழ்வு நாடாளாவிய ரீதியில் கடந்த 14 ஆம் திகதி தினம் சுப வேளையில் ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வகையில் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்டபட்ட சமூர்த்தி உதவி தொகையினை பெறும் பயனாளர்களுக்கான உதவித் தொகையினை வழங்கும் நிகழ்வானது நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் , அம்பகமுவ பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தலைமையில் ஹட்டன் டிக்கோயா நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பகமுவ பிரதேச செயலாளர் திருமதி. சித்தாரா ருவினி கமகே , மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான கணபதி கனகராஜ், பிலிப் குமார், ஹட்டன் டிக்கோயா நகரசபை தலைவர் சடையன் பாலச்சந்திரன், மஸ்கெலியா பிரதேச சபை தலைவர் திருமதி. கோவிந்தன் செண்பக வள்ளி , பிரதேச செயலக அதிகாரிகள், சமூர்த்தி உத்தியோகஸ்தர்கள், சமூர்த்தி பயனாளர்கள் என பலர் கலந்துக் கொண்டனர்.

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் சப்ரகமுவ மாகாணத்தில் ஆரம்பம்







(சிவா ஸ்ரீதரராவ்)

சப்ரகமுவ மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் அரச, தனியார் மற்றும் சமூக நிறுவனங்கள் ஒன்றிணைந்து சிரமதான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளன.

சப்ரகமுவ மாகாணத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவின் பணிப்புரைக்கமைய உள்ளூராட்சி நிறுவனங்களின் மட்டத்தில் மேற்படி சிரமதானப் பணிகள் நேற்றுமுன்தினம் (16) ஆரம்பிக்கப்பட்டன. இதற்கமைய எஹலியகொட பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மஞ்சுளா இதிகாவெல உட்பட அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# இறைச்சிக்காக கொண்டுசெல்லப்பட்ட மாடுகள் வறிய மக்களுக்கு வழங்கிவைப்பு





(தலவாக்கலை செய்தியாளர்)

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கடந்த வாரம் சட்டவிரோதமாக அனுமதியின்றி இறைச்சிக்காக கொண்டுசெல்லப்பட்ட 2 பசு மாடுகளை சுற்றிவளைத்து கைப்பற்றிய பூண்டுலோயா பொலிஸார் அதனை பூண்டுலோயா கால்நடை வைத்திய அதிகாரி சம்பத்துடன் கலந்துரையாடி நீதிமன்ற அனுமதியுடன் இப்பிரதேசத்தில் பண்ணை வளர்ப்பில் ஈடுபடும் வாழ்வாதாரமின்றி சிரமப்படும் இரு குடும்பங்களுக்கு வழங்கினர்.

பூண்டுலோயா பழைய தோட்ட மேற்பிரிவில் வசிக்கும் கார்த்திக், தெற்கு மடக்கும்புற தோட்டத்தில் வசிக்கும் தியாகராஜா ஆகிய இருவருக்கும் இப்பசுமாடுகள் கால்நடை வைத்திய அதிகாரி சம்பத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

தமிழன்
# வணிக உலகம்
Business world
www.thamilan.lk

# நாடு முழுவதிலும் 4G வலைப்பின்னலை மேம்படுத்த தமது வலைப்பின்னலை விஸ்தரிக்கும் எயார்டெல்

airtel 4G

சர்வதேச தொலைத்தொடர்பு நிறுவனமான பாரதி எயார்டெல் லிமிடெட்டின் துணை நிறுவனமான எயார்டெல் லங்கா, அதன் புதிய 4G நெட்வொர்க்கை நாடு முழுவதும் விரிவுபடுத்தும் திட்டத்தை அண்மையில் முன்னெடுத்துள்ளது.

எனவே, 4G கவரேஜ் வலைப்பின்னலை விஸ்தரிக்கையில் தற்போது நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 2000 4G தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு மேலதிகமாக புதிய 400 4G தொலைத்தொடர்பு கோபுரங்கள் அதிகமாக அமைக்கப்பட்டுள்ளன.

இந்த புதிய 4G கோபுரங்களை நிறுவுவதன் மூலம், எயார்டெல் லங்கா தனது 4G கவரேஜை நாடளாவிய ரீதியில் அதிக மக்கள்தொகை மற்றும் கிராமப்புறங்களை உள்ளடக்கியதாக விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. எயார்டெல்லின் மேம்படுத்தப்பட்ட 4G நெட்வொர்க், அதிக கவர்ச்சிகரமான மேம்படுத்தப்பட்ட உள்ளக கவரேஜ் மற்றும் வலுவான சமிக்ஞை அமைப்புடன் வாடிக்கையாளருக்கு சிறந்த ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி அனுபவத்தை வழங்குவதற்கான சிறந்த கவரேஜ் மற்றும் திறனை வழங்குகிறது.

கட்டுமானத்திற்காக திட்டமிடப்பட்ட புதிய 4G கோபுரங்களில் மூன்றில் ஒரு பங்கு ஏற்கனவே முடிவடைந்துவிட்டது, மேலும் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் இறுதி 4G கோபுரங்கள் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களை உள்ளடக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நிறுவனம் அதன் வலைப்பின்னல் விரிவாக்கத்தை விரைவுபடுத்துவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, தொற்றுநோயுடன் புதிய பொதுமைப்படுத்தலின்கீழ் அதன் பயன்பாடு இரட்டிப்பாகும்.

"எங்கள் விரைவான விரிவாக்க நடவடிக்கையானது, நாடு முழுவதும் உள்ள எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நேரடியாகப் பயனளிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன், அவர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த 4G திறன்கள் மூலம் புத்துணர்ச்சியூட்டும் மற்றும் மேம்பட்ட நெட்வொர்க் அனுபவத்தை அளிக்கிறது. போதிய அல்லது கூடுதல் கவரேஜ் கிடைக்கும் வரை, நாங்கள் எங்கள் 4G விரிவாக்கத்தை தொடர்வோம். ஒவ்வொரு இடமும் அடுத்த தலைமுறை நெட்வொர்க்கிற்கு தடையின்றி இடமளிக்கும் வகையில் 5G தயார் நிலையில் இருக்கும்" என எயார்டெல் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான அஷீஷ் சந்திரா தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் மூலம், எயார்டெல் வாடிக்கையாளர்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் சிறந்த நெட்வொர்க் அனுபவத்தை அனுபவிக்க முடியும். எயார்டெல் சமீபத்தில் தனது 4G சேவைகளை Freedom Packsகளுடன் புதிய முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு பேக்கேஜ்களுடன் அறிமுகப்படுத்தியது. இந்த Freedom Packs 2009இல் இலங்கையில் செயற்பாடுகளை ஆரம்பித்ததன் பின்னர் இலங்கையில் Airtelஇன் மிகப்பெரிய முதலீடாகும். எயார்டெல்லின் நோக்கம் -கட்டமைக்கப்பட்ட 4G சேவையானது, 99% buffer-free வீடியோவைப் பார்ப்பது மற்றும் 4G சமிக்ஞைகள் மூலம் மேம்படுத்தப்பட்ட உள்ளக கவரேஜ் உள்ளிட்ட சிறந்த அனுபவத்தை பாவனையாளருக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதன்கீழ், ஒவ்வொரு பயனரும், குழந்தைகள்முதல் பெரியவர்கள்வரை, ஒன்லைன் கல்வியை அனுபவிக்கலாம், வீட்டிலிருந்து வேலை செய்யலாம் மற்றும் எந்த அழைப்பு செயலிழப்புகள், குறுக்கீடுகள் அல்லது சமிக்ஞை இடையூறுகள் இல்லாமல் இணையத்தில் ஒருவரையொருவர் இணைக்க முடியும்.

நிறுவனம் நாடளாவிய ரீதியில் அதன் கவரேஜ் வலையமைப்பை விரிவுபடுத்துவதுடன், இலங்கையின் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு (TRCSL) அனைத்து இலங்கையர்களுக்கும் இணைய அணுகலை சமமாக வழங்குவதற்கு Gamata Sanniwedanaya திட்டத்துடன் கைகோர்த்துள்ளது. இது மோசமான வலையமைப்பு கவரேஜ்கொண்ட கிராமப்புற மாவட்டங்களில் டிஜிட்டல் இடையூறுகளைக் குறைப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது. மேலும் 2022ஆம் ஆண்டளவில் நாடு முழுவதும் சுமார் 100% கவரேஜை வழங்கும் என்று நம்பப்படுகிறது.

பாரதி எயார்டெல் லங்கா நிறுவனம் தொடர்பாக:

2009 ஜனவரி 12ஆம் திகதி இலங்கையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த பாரதி எயார்டெல் (எயார்டெல் லங்கா) நிறுவனம் தற்போது ஒரு மில்லியன் வாடிக்கையாளர் மட்டத்தை நெருங்கிய இலங்கையின் வேகமான தகவல் தொலைத்தொடர்பு வலயமாகும். இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு'செய்யப்பட்டுள்ள எயார்டெல் லங்கா தொலைத்தொடர்பு வலயமைப்பு சேவைகள் மற்றும் நிறுவன ரீதியான தீர்வுகள் உட்பட டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகள் பலவற்றையும் வழங்குகின்றது. மேலதிக தகவல்களுக்கு www.airtel.lk என்ற இணையத்தளத்தை பார்வையிடவும்.

# Acuity Partners புதிய பணிப்பாளர் சபைத் தலைவர் மற்றும் 2 புதிய சுயாதீன பணிப்பாளர்களின் நியமனம் தொடர்பில் அறிவித்துள்ளது

தற்போது DFCC வங்கி பிஎல்சியின் பணிப்பாளர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி வருகின்ற திமால் பெரேரா, DFCC வங்கி மற்றும் ஹட்டன் நெஷனல் வங்கி ஆகியவற்றுக்கு இடையிலான சம உரிமையாண்மையுடனான கூட்டு வர்த்தக முயற்சியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள முழுமையான சேவைகளை வழங்கிவருகின்ற முதலீட்டு வங்கியான Acuity Partners (Private) Limitedஇன் பணிப்பாளர் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், இரண்டு புதிய சுயாதீன நிர்வாக அதிகாரமற்ற பணிப்பாளர்களான லலித் விதான மற்றும் சச்சித் என் பெரேரா ஆகியோரையும் Acuity Partners பணிப்பாளர் சபை வரவேற்றுள்ளது.

இந்த புதிய நியமனங்கள், குறிப்பாக கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் Acuity Partners பணிப்பாளர் சபையை மேலும் வலுப்படுத்த உதவும். வர்த்தக நிதி வழங்கல், பங்குகள், நிலையான வருமான பிணையங்கள், புதிய வர்த்தக முயற்சிகளுக்கான முதலீட்டு சேவைகள் மற்றும் சொத்து முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் விரிவான வரிசையை Acuity Partners வழங்கி வருகிறது.

புகழ்பெற்ற வங்கியாளரும் DFCC வங்கியின் பணிப்பாளர்/தலைமை நிர்வாக அதிகாரியுமான பெரேரா 2022 ஜனவரி முதலாம் திகதிமுதல் Acuity Partnersஇன் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளார். பெரேரா நிதியியல் சேவைகள் மற்றும் வங்கிச்சேவை துறையில் இரு தசாப்த காலத்திற்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் ஹட்டன் நெஷனல் வங்கியின் பிரதி பொது முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளதுடன், அங்கு தனிநபர் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிப் பிரிவுக்கான வங்கிச்சேவையை வழிநடத்தியுள்ளார். பெரேரா இலங்கை மற்றும் வெளிநாடுகளில் எஸ்எச்பிசி (HSBC) வங்கியில் பணியாற்றியுள்ளதுடன், கட்டார் கொமர்ஷல் வங்கி மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள பார்க்லேஸ் வங்கி பிஎல்சி (Barclays) ஆகியவற்றிலும் பணியாற்றியுள்ளார். எச்எஸ்பிசி (HSBC) வங்கியில் அவர் பணிபுரிந்த காலத்தில், மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா பிராந்தியங்களுக்கு மேலதிகாரியாக அட்டைகள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்களின் பிராந்திய தலைமை அதிகாரியாக பணியாற்றியுள்ளார். பார்க்லேஸ் (Barclays) வங்கியில் அவர் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தனிநபர் தயாரிப்புகள் மற்றும் வணிக வங்கிச் சேவைக்கான பணிப்பாளராக பணியாற்றியுள்ளார். ஹட்டன் நெஷனல் வங்கியில் பெரேரா HNB Assurance PLC, HNB General Insurance மற்றும் HNB Grameen Limited ஆகியவற்றின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் பணியாற்றியுள்ளார். அவர் இலங்கையின் பட்டயக் கணக்காளர் கல்வி நிறுவனத்தின் அங்கத்தவராகவும் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் கல்வி நிறுவனத்தின் இறுதி மட்டத்தில் சித்தியடைந்தவராகவும் உள்ளார்.



திமால் பெரேரா
பணிப்பாளர் சபைத் தலைவர் - Acuity Partners (Private) Limited



லலித் விதான
பணிப்பாளர் - Acuity Partners (Private) Limited



சச்சித் என் பெரேரா
பணிப்பாளர் - Acuity Partners (Private) Limited

லலித் விதான ஒரு சிரேஷ்ட மற்றும் மிகவும் நன்மதிப்பிற்குரிய தொழில்முறையாளர் என்பதுடன், வங்கிச்சேவை, உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிகள் அடங்கலாக 25 ஆண்டுகளுக்கும் மேலாக வர்த்தகத்துறையில் முகாமைத்துவப் பதவிகளை வகித்துள்ளார். Brandix Group, Ernst and Young, Amsterdam Rotterdam Amro Bank, IBM World Trade Corporation, Carson Cumberbatch, Ceylon Tea Services Limited மற்றும் Yamaha Corporation USA போன்ற பல நிறுவனங்களில் அவர் பணியாற்றியுள்ளார். அவர் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் குழுமத் தலைமை நிதி மற்றும் நிர்வாக அதிகாரியாகவும், Sri Lankan Catering நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். அவர் தற்போது Agility Consulting Services (Private) Limited நிறுவனத்தின் ஸ்தாபகர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளராகவும், Laugfs Gas PLC, Laugfs Maritime Services (Private) Limited, Softlogic Life Insurance PLC மற்றும் HNB Finance PLC ஆகியவற்றின் பணிப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார். அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக முதுமாணிப் பட்டத்தையும், ஐக்கிய இராச்சியம், University of Manchester Metropolitan பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். விதான, ஐக்கிய இராச்சியம் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் நிறுவனம் (FCMA) மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (FCA) ஆகிய இரண்டின் சக அங்கத்தவராவார். அவர் அமெரிக்காவின் Project Management Institute இல் செயற்றிட்ட முகாமைத்துவ தொழில் வல்லுனராகவும் (Project Management Professional) உள்ளார்.

சச்சித் என் பெரேரா வங்கிச்சேவை துறையில் ஒரு நன்மதிப்புடைய தொழில் நிபுணத்துவம் கொண்டவர் என்பதுடன், எச்எஸ்பிசி (HSBC) வங்கியில் 26 ஆண்டுகளுக்கும் மேலாக சேவையாற்றியுள்ளார். அதில் 12 வருடங்களாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான திறைசேரி பொருளாளர் மற்றும் Global Markets இன் தலைமை அதிகாரி பதவியை வகித்துள்ளார். இந்த பாத்திரத்தில், வங்கியின் அந்நிய செலாவணி மற்றும் வீதங்களின் முகாமைத்துவம், வகையீட்டு வர்த்தகம், ஐந்தொகை முகாமைத்துவம் மற்றும் உள்ளூர் பங்குகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான பாதுகாப்பு சேவைகளுக்கு அவர் பொறுப்பு வகித்துள்ளார். பெரேரா, எச்எஸ்பிசி (HSBC) வங்கியில் அதிகாரி, ஐந்தொகை முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம் மற்றும் இணக்கப்பாடு அணிகளின் அங்கத்தவராகவும் பணியாற்றியுள்ளார். 2017ஆம் ஆண்டில், ஆதனம் மற்றும் விருந்தோம்பலில் பிற வணிக ஆர்வங்களை மேற்கொள்வதற்காக அவர் எச்எஸ்பிசி (HSBC) வங்கியிலிருந்து முன்கூட்டியே ஓய்வு பெற விரும்பி அதை மேற்கொண்டார்.

புதிய பணிப்பாளர் சபை நியமனங்கள் மற்றும் இரண்டு முக்கிய பங்குதாரர்களின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவை Acuity Partners நிறுவனத்திற்கு தொழில்துறையில் தனது ஸ்தானத்தை வலுப்படுத்த உதவுவதுடன், முதலீட்டு வங்கிச்சேவைத் துறையில் தனது அடிச்சுவட்டை விரிவுபடுத்தி, இலங்கையில் முன்னிலை வகிக்கும் முதலீட்டு வங்கிகள் மத்தியில் தனது ஸ்தானத்தை வலுப்படுத்துவதற்கும் உதவுகின்றன. புதிய நியமனங்களைத் தொடர்ந்து, Acuity Partners நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது திமால் பெரேரா (பணிப்பாளர் சபைத் தலைவர்), ரே அபேவர்தன (முகாமைத்துவப் பணிப்பாளர்), ரஜீவ் திசாநாயக்க, தமித் பல்லேவத்த, சஞ்சய் விஜேமான, லலித் விதான மற்றும் சச்சித் என் பெரேரா ஆகியோரைக் கொண்டுள்ளது.

திகதி 16.02.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4680
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 8,152,630.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 6 9 9 4 4 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 44,278,280.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2975
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,242,240.00
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 06 07 35 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.65,752,828.00

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1028
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,176,480.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.236,303,266.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
ஆங்கில எழுத்து B
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 34 43 62 72

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 710
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,036,560.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 14 19 27 29
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,665,493.60

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0021
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,939,780.00
இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 01 15 48 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,532,166.80

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1212
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.13,506,493.20
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 2 3 3 3 1 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# மக்கள் வங்கி தமது புதிய சேவை நிலையமொன்றினை இத்தப்பனயில் ஆரம்பித்து வைத்தது






மக்கள் வங்கி அண்மையில் தமது புதிய சேவை நிலையமொன்றினை இத்தப்பன நகரில் திறந்துவைத்தது.

இச்சேவை நிலையமானது இத்தப்பன பிரதேசத்து வாடிக்கையாளர்களுக்கு அதிநவீன டிஜிட்டல் வங்கிச் சேவைகளை வழங்குவதுடன், ATM வசதிகளையும் வழங்குகிறது. இதன்மூலம் வாடிக்கையாளர்களுக்கு கிழமையின் 7 நாட்களும் 24 மணிநேரமும் தங்கள் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் காணப்படுகின்றன.

ஸ்ரீ கல்யாணி சமகி தர்ம மஹா சங்க சபையின் மஹா நாயக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தர் வண. டாக்டர் இத்தேபனே தர்மலங்கார தேரோ, சுஜீவ ராஜபக்ஷ - தலைவர், மக்கள் வங்கி, ரஞ்சித் கொடிதுவக்கு – பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் மக்கள் வங்கி, உதேனி அத்துகோரள – தலைவர், வளல்லவிட்ட பிரதேச சபை மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர், மஹிந்த பிரேமநாத் - பிரதி பொது முகாமையாளர் - மக்கள் வங்கி, கிரிஷாணி நாரங்கொட - பிரதி பொது முகாமையாளர் (எண்டர்பிரைஸ் வங்கி), கங்கா சேனாநாயக்க – உதவி பொது முகாமையாளர் (சனல் முகாமைத்துவம்), நாலக விஜேவர்தன – சந்தைப்படுத்தல் தலைவர், அனுர பெரேரா – உதவி பொது முகாமையாளர் - (இடர் மேலாண்மை மற்றும் கடன் கட்டுப்பாடு), எம்.எஸ்.கனக்க ஹேவகே – கொழும்பு தென் பிராந்திய முகாமையாளர், டபிள்யூ.டி.பீ.டி.புத்திக – களுத்துறை பிராந்திய முகாமையாளர், சமுத்ரி பெரேரா, கே.எஸ்.சீ. ரோஹினி லக்மினி வனிகரத்ன – உதவி பிராந்திய முகாமையாளர்கள், சமீர ரூபசிறி – அலுத்கம கிளை முகாமையாளர் மற்றும் லக்மால் பிரேமவங்ஷ - இத்தப்பன சேவை நிலைய முகாமையாளர் ஆகிய அனைவரும் இத்திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக அச்சுவேலியில் கையெழுத்துப் போராட்டம்







(யாழ். நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தடை செய்யக் கோரிய கையெழுத்துப் போராட்டம் நேற்று யாழ்ப்பாணம், அச்சுவேலி பிரதான பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இளைஞர், யுவதிகள் விசாரணையின்றி கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமாக சிறைகளில் அடைத்துவைக்கப்பட்டிருப்பதுடன் மிகவும் மோசமான சட்ட ஏற்பாடுகளைக்கொண்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ச்சியான கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த கையெழுத்துப் போராட்டத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி கிராமங்கள்தோறும் பொதுமக்களிடம் குறித்த கையெழுத்து பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நேற்றுக் காலை ஏழு மணிக்கு அச்சுவேலி பிரதான பஸ் நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான அணியினர் கையெழுத்தினை பொது மக்களிடமிருந்து பெற்றுக்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

# நோர்வேயின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மன்னார் மாவட்ட செயலகத்துக்கு விஜயம்

## அரசாங்க அதிபருடன் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆராய்வு






(மன்னார் நகர் நிருபர்)

நோர்வேயின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டிரைன் ஜோரான்லி எஸ்கெடல் நேற்று வியாழக்கிழமை (17) மன்னாருக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி (தூதுவர்) நேற்று வியாழக்கிழமை காலை 8.45 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு விஜயம்செய்தபோது தூதுவர் வரவேற்கப்பட்டு அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டி மெல்லுடன் கலந்துரையாடல் மற்றும் சந்திப்பு இடம்பெற்றது.

மன்னாருக்கு வருகைதந்த நோர்வே தூதுவர் மன்னாரில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார். தொடர்ந்து மன்னாரில் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவைகள் குறித்தும் அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டார். பெண்கள் அபிவிருத்தி தொடர்பாக தான் கவனம் செலுத்துவதாகவும் மாவட்ட பெண்களின் நிலை குறித்தும் கலந்துரையாடியுள்ளார். மேலும் மன்னார் பகுதிகளில் இந்திய மீனவர்களின் பிரச்சினை, பறவைகள் சரணாலயம், காற்றாலை மின்சாரம், கழிவு மீன் திரவ உரம் தயாரிப்பு, மன்னார் பொது வைத்தியசாலை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் அரசாங்க அதிபரிடம் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவி ஹரிஸ்ணவியின் படுகொலை இடம்பெற்று ஆறு வருடங்களாகியும் நீதி கிடைக்கவில்லை

## உறவினர்கள் விசனம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, பண்டாரிக்குளம், உக்குளாங்குளம் பகுதியில் வீட்டில் தனிமையிலிருந்த 16 வயது பாடசாலை மாணவியான கெங்காதரன் ஹரிஸ்ணவி கடந்த 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

எனினும், கடந்த ஆறு வருடங்களாக இடம்பெற்றுவரும் வழக்கு விசாரணைகளில் எவ்விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஒவ்வொரு வழக்குகளும் தவணை இடப்பட்டு கடந்து செல்கின்றதே தவிர குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவில்லை.

இவ்விடயம் குறித்து உறவினர்கள் தெரிவிக்கையில்,

பண்டாரிக்குளம் பாடசாலை மாணவியான ஹரிஸ்ணவியின் படுகொலையுடன் தொடர்புபட்டவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தச் செயலைச் செய்தவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்படவில்லை.

இப்படுகொலைக்கு நியாயமான தீர்வு கிடைக்கவில்லை. நீதித்துறை மீது நம்பிக்கை கொண்டுள்ள குடும்பத்தினர் உட்பட உறவினர்களுக்கு ஆறு வருடங்கள் நிறைவடைந்திருந்த நிலையிலும் நீதி நிலை நாட்டப்படவிலை.

இதனால் பெரும் ஏமாற்றமடைந்துள்ளோம். ஹரிஸ்ணவியின் குடும்பத்தினர் இதனால் பெரும் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்துள்ளனர். ஹரிஸ்ணவியின் படுகொலைக்கு நீதி கிடைக்கும் வரையிலும் நாங்கள் போராடி வருகின்றோம்.

இனியும் காலங்களை கடத்தி குற்றவாளி சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்கு இடமளியாமல் நீதித்துறை இப்படுகொலைக்கு உரிய தீர்வு பெற்றுத்தரும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருப்பதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மன்னாரில் 16 நாட்களில் 377 கொரோனா நோயாளர்கள்: மரணித்தவர்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரிப்பு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதன்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த 16 நாட்களில் 377 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இவ்வருடம் 2022ஆம் ஆண்டு தற்போதுவரை 578 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என - மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை(17) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் புதன்கிழமை (16) மேலும் புதிதாக 12 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், பெப்ரவரி மாதம் தற்போதுவரை 377 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் மொத்தமாக 578 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா தொற்றால் பெப்ரவரி மாதம் 03 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. தற்போதுவரை கொரோனா தொற்றால் 39 பேர் மரணித்துள்ளனர்.

ஒமிக்ரொன் அலை பரவல் தொடங்கியதிலிருந்து இறந்தவர்களின் எண்ணிக்கை மன்னாரில் 03 ஆகும். ஒவ்வொரு 120 நோயாளர்களுக்கும் ஒருவர் என்ற வகையில் இறப்பு இடம்பெற்றுள்ளது.

இது டெல்ட்டா அலை பரவும்போது ஏற்பட்ட இறப்புகளுடன் ஒப்பிடும்போது குறைவாக இருந்தாலும், இது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒரு எண்ணிக்கையாக காணப்படுகின்றது.

எனவே, பொதுமக்கள் தமது 02ஆவது தடுப்பூசியை பெற்றுக்கொண்ட பின்னர் மூன்று மாதங்கள் நிறைவடைந்திருந்தால் கட்டாயமாக 03ஆவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனைய சுகாதார வழிமுறைகளையும் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இதுவரை மொத்தமாக 12ஆயிரத்து 643 மாணவர்களுக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான 02ஆவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 16 தொடக்கம் 20 வயதுடைய மாணவர்களுக்கு குறித்த 02ஆவது தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை (16) மாலை வரை 799 மாணவர்கள் 02ஆவது தடுப்பூசியை செலுத்திக்கொண்டுள்ளனர். எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் 02ஆவது தடுப்பூசியை முழுமையாக வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

பாடசாலை தவணை ஆரம்பிக்கப்படும்போது 16 தொடக்கம் 20 வயதுடைய மாணவர்கள் அனைவரும் 02ஆவது தடுப்பூசியை பெற்றிருக்க வேண்டும் என்பது எமது நோக்கமாக உள்ளது.

மேலும், பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்ட மக்களின் சதவீதம் மன்னார் மாவட்டத்தில் 39 ஆகக் காணப்படுகின்றது. எதிர்வரும் நாட்களில் குறித்த தடுப்பூசியை வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரையில் 59.3 சதவீதமானவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளார்கள். மார்ச் முதலாம் திகதி இடம்பெறவுள்ள திருக்கேதீஸ்வர சிவராத்திரி நிகழ்வில் கலந்துகொள்ள உள்ள பக்தர்கள் முழுமையாக தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

02ஆவது தடுப்பூசி பெற்றிருந்து 03 மாதங்கள் நிறைவடைந்திருந்தால் 03ஆவது தடுப்பூசியை பெற்றிருக்க வேண்டும்.

இவர்கள் மாத்திரமே திருக்கேதீஸ்வர சிவராத்திரி நிகழ்வில் கலந்துகொள்ள முடியும். எனவே,, திருவிழாவில் கலந்துகொள்ள எதிர்பார்த்துள்ள பக்தர்கள் தமது 03ஆவது அல்லது பூஸ்டர் தடுப்பூசியை பெற்று 02 வாரங்கள் நிறைவடைந்துள்ளதை உறுதிசெய்துகொள்ள வேண்டும் - என்றார்.

# பௌதீகவியல் மாணவர்களின் ஆய்வு மாநாடு









யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல்துறை மாணவர்களின் பௌதீக மாணவர் ஆய்வு மாநாடு நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றபோது யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா முதன்மை விருந்தினராகவும், முன்னாள் தகுதிவாய்ந்த அதிகாரியும், வாழ்நாள் பேராசிரியருமான பேராசிரியர் க. கந்தசாமி சிறப்பு விருந்தினராகவும், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பி. ரவிராஜன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர். அத்தோடு இந்த ஆய்வு மாநாட்டில் 18 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. (யாழ் நிருபர்)

# யாழ். போதனாவில் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கான பி.சி.ஆர். பரிசோதனைக்கு 5 ஆயிரம் ரூபா அறவீடு!

(யாழ். நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையில் வெளிநாட்டு கடவுச்சீட்டு உடையவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்காக 05 ஆயிரம் ரூபா அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரஜைகள் மட்டுமே இலவச சுகாதார சேவைக்கு உரித்தானவர்கள். வெளிநாட்டுப் பிரஜைகள் தங்கள் மருத்துவ செலவுகளுக்காக உரிய கட்டணங்களை அரசாங்க வைத்தியசாலைகளுக்கு செலுத்தியே ஆக வேண்டும். இதனடிப்படையிலேயே வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு கட்டணமாக 05 ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்றது.

இப்பணம் உரிய முறையில் அரசாங்கத்தின் கணக்கில் வைப்பிடப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இச்சேவையைப் பெற்றுக்கொள்வோர் எதிர்மறை முடிவாயின் நேரடியாக விமானநிலையம் செல்லமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா – மன்னார் கால்நடை வளர்ப்பாளர்களுடன் இராஜாங்க அமைச்சர் ஹேரத் சந்திப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களுடன் இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் சந்திப்பொன்றை முன்னெடுத்திருந்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் குறித்த கலந்துரையாடல் நேற்று (17) இடம்பெற்றது. இதன்போது குறித்த மாவட்டங்களில் கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், அதற்கான தீர்வுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

பால்மாவுக்கு பதிலாக திரவப்பாலை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக உற்பத்தி செய்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், மேய்ச்சல்தரை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

குறிப்பாக வனவளத் திணைக்களங்களின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவித்து மேய்ச்சல்தரைகளாக பயன்படுத்துவது தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் அரச அதிபர்களான ஸ்ரான்லி டி மெல், பி.ஏ.சரத்சந்திர, வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களங்களின் பணிப்பாளர்கள், கால்நடை வைத்தியர்கள், கால்நடை வளர்ப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கங்காராம நவம் மஹா பெரஹெரா




கொழும்பு - ஹுணுபிட்டிய கங்காராம விகாரையின் 43ஆவது நவம் மஹா பெரஹெரா உற்சவம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் (16) இரவு இடம்பெற்றது.

வணக்கத்துக்குரிய கலபொட ஞாணிஸ்ஸர தேரரின் அனுசரணைக்கமைய, கங்காராம விகாராதிபதி கலாநிதி வணக்கத்துக்குரிய கிரிந்தே அஸ்ஸஜி தேரரின் மேற்பார்வையின் கீழ், இந்தப் பெரஹெரா உற்சவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உற்சவத்துக்கு வருகை தந்திருந்தவர்களுக்கான பஞ்சசீல போதனைகள் மற்றும் சிறு அனுசரணையை, மல்வத்து பீடத்தின் அனுநாயக்கர் அதி வணக்கத்துக்குரிய திம்புல்கும்புரே விமலதம்ம தேரர் நடத்தினார்.

புனித சதாதுக்க பேழையை, உற்சவத்துக்குத் தலைமை தாங்கியிருக்கும் மங்கள யானை மீது வைக்கும் நிகழ்வு, ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டது. கண்டி, தெற்கு மற்றும் சப்ரகமுவ கலாசாரங்களுக்கேற்ற நடனங்கள் மற்றும் யானைகளின் ஊர்வலங்களுடன், பெரஹெரா உற்சவம் கோலாகலமாக இடம்பெற்றது. விகாரையின் போதி மரத்தைச் சுற்றிப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தங்க வேலியைத் திறந்து வைத்தல், விகாரைக்கு முன்னால் காணப்பட்ட காணியை இலவச மானிய உரிமம் மூலம் கங்காராம விகாரைக்குப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பெரஹெராவுக்கு வருகைதந்த யானைப் பாகன்கள் மூவருக்கான சைக்கிள்களைப் பரிசளித்தல் போன்ற நிகழ்வுகள், ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றன.

மகா சங்கத்தினர், மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், விஹாரையின் பரிபாலன சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினரும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தனர்.

# வடமத்திய மாகாண கல்வியமைச்சின் மேலதிக செயலர் கொரோனாவுக்கு பலி

(வவுனியா செய்தியாளர்)



வட மத்திய மாகாண கல்வியமைச்சின் மேலதிக செயலாளரும், வவுனியா வடக்கு பிரதேச செயலக முன்னாள் பிரதேச செயலாளருமான க.பரந்தாமன் கொவிட் தொற்றால் நேற்றுமுன்தினம் (16) காலை மரணமடைந்துள்ளார்.

கொவிட் தொற்று காரணமாக கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இறுதிக்கிரியைகள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் நடைபெற்றன.

யுத்த காலத்திலும், மீள்குடியேற்றத்துக்கு பின்னரும் பல்வேறு அச்சுறுத்தலுக்கு மத்தியிலும், குண்டு வெடிப்புகளுக்கு மத்தியிலும் மக்களுடன் மக்களாக நின்று வவுனியா வடக்கு பிரதேசத்தை கட்டியெழுப்புவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை இவர் முன்னெடுத்து நீண்ட காலம் அங்கு பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்குவாரிக்கு ஆதரவாகவும் எதிராகவும் ஆனமடுவவில் இருவேறு ஆர்ப்பாட்டங்கள்

## இன்று இறுதிக்கட்ட தீர்மானம் எடுக்கப்படுமென அதிகாரிகள் உறுதி




(ரஸீன் ரஸ்மின், ஜூட் சமந்த)

ஆனமடுவ, ரம்பாவெவ கல் குவாரிக்கு ஆதரவாகவும் எதிராகவும் இருவேறு ஆர்ப்பாட்டங்கள் நேற்று (17) முன்னெடுக்கப்பட்டன. அப்பகுதியில் ஐந்து கல்குவாரி வேலைத்தளங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் இதன் காரணமாக சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஒரு தரப்பினர் குறிப்பிட்டனர். அண்மைக்காலமாக குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவுவதற்கான காரணம் இதுவெனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, இந்த கல்குவாரியினால் தொழில்வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக மறுதரப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டங்கள் காரணமாக மோதல் சம்பவம் இடம்பெறலாமென புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெற்றதையடுத்து அப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் இடத்துக்கு வருகை தந்த அகழ்வாராய்ச்சித் திணைக்கள அதிகாரிகள் அங்கு பொதுமக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தினர். இரு தரப்பினருடனும் இன்றைய தினம் பேச்சுவார்த்தை நடத்தி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அவர்கள் உறுதியளித்தனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றனர்.

# விகாரைகளில் கொள்ளையிட்ட தம்பதியினர் புத்தளம் ஆண்டியாகமவில் அதிரடியாக கைது

## ஒரு இலட்சத்து 28 ஆயிரம் ரூபா பணமும் பொருட்களும் மீட்பு

(ரஸீன் ரஸ்மின்)



புத்தளம் உள்ளிட்ட பகுதிகளில் பௌத்த விகாரைகளை இலக்கு வைத்து கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தனர் என்ற சந்தேகத்தின் பெயரில் அநுராதபுரத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியும் புத்தளத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் குறித்த தம்பதியினர் ஆண்டியாகம பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (16) மாலை கைது செய்யப்பட்டதாக பல்லம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் உடுபந்தாவ பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணும், 22 வயதுடைய இளைஞனும் திருமணம் முடித்த தம்பதியினர் எனக் கூறப்படுகிறது.

இந்த தம்பதியினர், பௌத்த விகாரைகளுக்குச் சென்று அங்கு கடமைபுரியும் பௌத்த மதகுரு மற்றும் பௌத்த விகாரையில் உபகாரம் புரியும் மதகுருக்களை இலக்கு வைத்து அவர்களுடன் நெருக்கமாக கலந்துரையாடியே கொள்ளைச் சம்பவங்களை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொள்ளையிடும் நோக்கில் வருகை தரும் கணவனும் மனைவியும் விகாரைகளுக்கு சென்றதும் கொள்ளையர்களில் ஒருவரான மனைவி குறித்த விகாரைகளில் உபகாரம் புரியும் மதகுருமார்களை அணுகி பேச்சைக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது கணவனான 22 வயதுடைய இளைஞன் பிரதம பௌத்த மதகுரு தங்கியிருக்கும் அறைகளுக்குள் புகுந்து பணம், தொலைபேசி உள்ளிட்ட பொருட்களை இவ்வாறு திருடுவதாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரிவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேபோன்றதொரு பாணியிலேயே சந்தேக நபர்களான கணவனும் மனைவியும் புத்தளம் - பல்லம நந்திமித்ர ரஜமஹா விகாரைக்குள் நுழைந்து 02 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை திருடியுள்ளதாக பல்லம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் காமினி சிறிவர்தன தெரிவித்தார்.

பௌத்த விகாரைக்குச் சொந்தமான தென்னந்தோட்டத்தில் தேங்காய் பறித்து விற்கப்பட்ட பணம், விகாரையின் புனரமைப்புக்காக கிடைத்த அன்பளிப்பு பணம், பிரதம பௌத்த மதகுருவுக்கு சொந்தமான பணம் என்பன அங்கு வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவை திருடப்பட்டிருப்பதாக தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

இவ்வாறு திருட்டுச் சம்பவம் பற்றி செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, சந்தேக நபர்களான கணவனும் மனைவியும் பயணித்ததாக கூறப்படும் மோட்டார் சைக்கிள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற சீ.சீ.டி.வி. காணொளியின் உதவியுடன் சந்தேக நபர்கள் ஆண்டிகம பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (16) கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 01 இலட்சத்து 28 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான தம்பதியினர் ரஸ்னாயக்கபுர, கொபேகன மற்றும் மஹகும்புக்கடவல ஆகிய பொலிஸ் பிரிவுகளிலுள்ள 10 இற்கும் மேற்பட்ட விகாரைகளிலும் இவ்வாறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பிங்கிரிய பொலிஸ் பிரிவிலும் இவ்வாறு பௌத்த விகாரையொன்றில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகவும் பிங்கிரிய பொலிஸார் அறிவித்துள்ளனர்.

எனினும், அந்த திருட்டுச் சம்பவம் பற்றியும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட கணவனும் மனைவியும் ஐஸ் போதை பாவனைக்கு பழக்கப்பட்டவர்கள் எனவும், நாளொன்றுக்கு 04ஆயிரம் ரூபா வரை போதைப் பாவனைக்கு தேவைப்படுவதாகவும் சந்தேக நபர்கள் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் புத்தளம் மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமல் பெரேரா மற்றும் புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.பி.எஸ்.ஜெயமக ஆகியோரின் ஆலோசனையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.சி.பி. ஹேரத்தின் மேற்பார்வையில் பல்லம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் காமினி ஸ்ரீவர்தனவின் தலைமையில் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் உபாலி அபேரத்ன, பொலிஸ் சார்ஜன்ட் ஜயந்த, பொலிஸ் கான்ஸ்டபில் அமீத், பொலிஸ் கான்ஸ்டபில் ரத்நாயக்க ஆகிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நோட்டன் வனப்பகுதிக்கு விஷமிகளால் தீ வைப்பு

## பறவை, விலங்குகளும் ஆபத்தில்



(செ.தி.பெருமாள்)

நோட்டன் பொலிஸ் பிரிவில் உள்ள 5ஆம் கட்டைப் பகுதியில் உள்ள பைணஸ் வனப்பகுதிக்கு விஷமிகள் தீ வைத்துள்ளனர்.

இதனால் பைணஸ் வனப்பகுதியில் தீ கட்டுக்கு அடங்காது பரவிவருவதாக நோட்டன் பொலிஸ் நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் கடும் காற்றுடன் கூடிய வெப்பமான காலநிலை தோன்றியுள்ளதால் தீ மிக வேகமாகப் பரவிவருகிறது.

இப்பகுதியில் நோட்டன் பொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர், லக்ஷபான இராணுவத்தினர் விரைந்து தீயை கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். தீப்பரவல் காரணமாக பல ஹெக்டேயர் பைணஸ் வனப் பகுதி அழிந்துள்ளது.

அத்துடன் வன விலங்குகள் மற்றும் பறவைகள் அழிந்து விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது என நோட்டன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# விசுவமடுவில் நிலாமுற்றம்







(யாழ். செய்தியாளர்)

விசுவமடு மத்திய சனசமூக நிலையமும் விசுவமடு விஞ்ஞானக் கல்வி நிலையமும் இணைந்து நடத்திய நிலாமுற்றம் - கலை விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் (16) மாலை விசுவமடு மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசிரியர் வே. பிரசாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை உளநல வைத்திய நிபுணர் டாக்டர் மா. ஜெயராசாவும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசனும் கௌரவ விருந்தினராக கவிஞர் மாணிக்கம் ஜெகனும் கலந்து கொண்டனர்.

விசுவமடு விஞ்ஞான கல்வி நிலையத்தின் நிர்வாகி பொறியியலாளர் பொ. கெங்கேஸ்வரன் தொடக்க உரையாற்றினார். அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்வுகள் பல இடம்பெற்றன.

இனிவரும் காலங்களில் ஒவ்வொரு பௌர்ணமியின் போதும் நிலா முற்றம் - கலை ஆற்றுகை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# காயம் காரணமாக சுகயீனமுற்றிருந்த மூன்றரை வயது யானைக்குட்டி உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சிகிச்சை பெற்றுவந்த யானைக்குட்டி ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக நிக்கவெரட்டிய வனவிலங்கு கால்நடை மருத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

மூன்றரை வயதுடைய நான்கு அடி உயரமும்கொண்ட யானைக்குட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யானைக்குட்டியின் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக எழுந்து நடக்க முடியாத நிலையில், கல்கமுவ பகுதியிலுள்ள வயல்வெளியில் கடந்த செவ்வாய்க்கிழமை (15) மாலை பெரும் சிரமத்திற்கு உள்ளாகியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து பிரதேசவாசிகள் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு



தகவல் வழங்கியதையடுத்து, அங்கு சென்ற அதிகாரிகள் குறித்த யானைக்குட்டிக்கு அந்த இடத்திலேயே முதலுதவி சிகிச்சை அளித்துள்ளனர்.

எனினும், அந்த முதலுதவி பயனளிக்காமையினால் மேலதிக சிகிச்சைக்காக குறித்த யானைக் குட்டியை நிக்கவெரட்டிய வனவிலங்கு கால்நடை மருத்துவப் பிரிவுக்கு கொண்டுசென்றனர்.

இந்த நிலையிலேயே குறித்த யானைக்குட்டி நேற்றுமுன்தினம் (16) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்த யானைக்குட்டியின் சடலம் மீதான பிரேத பரிசோதனை நிக்கவெரட்டிய கால்நடை வைத்தியர் இசுரு ஹேவாஹொட்டகவினால் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# இளைஞர் நாடாளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சரும் உறுப்பினரும் பாகிஸ்தான் தூதரக செயலருடன் சந்திப்பு

இளைஞர் நாடாளுமன்றத்தின் வெளிவிவகார மற்றும் இராஜதந்திர உறவுகளின் பிரதி அமைச்சர் அஹ்மத் ஸாதிக், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முப்தி ஆகியோர் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் (அரசியல்) திருமதி ஆயிஷா அபூபக்கர் ஃபஹாத்துடன் சந்திப்பொன்று பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில்



இடம்பெற்றது.

இச்சந்திப்பில், நாட்டின் கல்வி, விளையாட்டு, கலாசாரம் போன்றவற்றில் இளைஞர்களின் பங்களிப்பு தொடர்பாகவும் மேலும் அதிலுள்ள தாழ்வுகள் குறித்தும் இத்துறைகளில் பாகிஸ்தான் இளைஞர்களின் பங்களிப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலின் பின்னர், இலங்கையின் விளையாட்டுத்துறை மேலும் வளர்வதற்கான தேவைப்பாடுகள் குறித்தும் விசேடமாக களுத்துறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு விளையாட்டுத்துறையின் வளர்ச்சி குறித்தும் பேசப்பட்டதுடன் அவற்றுக்கான ஆதரவினை எதிர்காலங்களில் வழங்குமாறும் கேட்கப்பட்டது.

இலங்கை - பாகிஸ்தானுக்கு இடையிலான உறவு மேலும் இளைஞர்களின் ஊடாகவும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்று தூதரக செயலாளர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

# மத்துகமவில் குடும்பப் பெண் கொலை

## பல்வேறு கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணைகள் முன்னெடுப்பு

### உயிரிழந்தவருக்கு கொரோனா தொற்று உறுதி

களுத்துறை, மத்துகம பொலிஸ் பிரிவில் பாலிகா வீதி, மத்துகம பிரதேசத்தில் பெண்ணொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. நாகொட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொற்று ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய பெண்ணொருவரே துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகியுள்ளார். மேலும், கொலைக்கான காரணம் கணவருடன் ஏற்பட்ட முரண்பாடேயாகுமென ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டை நடத்துவதற்கு மூன்று பேர் வருகை தந்துள்ளனர்.

களுத்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனைகளில் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து ரி - 56 ரக 6 துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மத்துகம நீதவானினால் ஆரம்ப நீதவான் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் , பிரேத பரிசோதனைக்காக உயிரிழந்த பெண்ணின் சடலம் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. மேலும், உயிரிழந்த பெண்ணின் கணவனைக் கொல்வதற்காகவே சந்தேகநபர்கள் வருகை தந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டபோது கணவன் வீட்டில் இருந்த நிலையிலும் அந்த நபர் அதிலிருந்து தப்பியுள்ளார்.

கொலைக்கான காரணம், கொலை செய்ய சந்தேகநபர்கள் மற்றும் அவர்களால் உபயோகிக்கப்பட்ட துப்பாக்கி என்பவை தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்துகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# புதையல் தோண்டிய இருவர் கெப்பித்திகொல்லாவயில் கைது!

## மேலும் பலர் தப்பியோட்டம்

(அநுராதபுரம் செய்தியாளர் )

புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரை கெப்பித்திகொல்லாவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய கெப்பித்திகொல்லாவ யகாவெவ நிதன்கல பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடத்திய சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த சந்தேக நபர்கள் இருவரை கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் ஜெனரேட்டர் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புதையல் தோண்டிய இடத்திலிருந்த மேலும் சிலர் பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டபோது அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர்கள் 38,46 வயதுடைய மில்லவான மாத்தளை பகுதியை வசிப்பிடமாகக்கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய தப்பிச்சென்ற சந்தேக நபர்களை கைதுசெய்வதற்காக கெப்பித்திகொல்லாவ பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# குழந்தைகளின் ஆடைகளுக்குள் ஹெரோயின்!

## மூவர் நீர்கொழும்பில் கைது

(ரேமன் அபோன்சு)

குழந்தைகள் இருவரது ஆடைகளுக்குள் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்துவைத்து வர்த்தகம் செய்த இரு பெண்கள் உள்ளிட்ட மூவரை நீர்கொழும்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இரண்டு குழந்தைககளை சுமந்துகொண்டு நீர்கொழும்பில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதன் பிரகாரம் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளனர்.

பெண்கள் இருவரும் முச்சக்கரவண்டியொன்றில் பயணிக்கும்போது கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், முச்சக்கரவண்டியின் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர்கள் குழந்தைகளின் ஆடைகளுக்குள் மறைத்துவைத்திருந்த 10 கிராம் 310 மில்லிகிராம் ஹெரோயின் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மூவரும் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# சிறுமியை துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய இளைஞரும் பிக்குவும் சூரியவெவவில் கைது

## ஒத்துழைத்த பெண்ணைத் தேடி வலைவீச்சு

(கெலும் குணதிலக்க)

பன்னிரண்டு வயதான சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 18 வயது இளைஞர் ஒருவரும் பிக்கு ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சூரியவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

தாயுடன் கோபித்துக்கொண்ட சிறுமி கடந்த 15ஆம் திகதி எம்பிலிபிட்டிய பஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார். அங்கு பெண்ணொருவர் சகிதம் சென்ற இளைஞர் ஒருவர் சிறுமியின் தந்தை தனக்கு நன்கு அறிமுகமானவர் எனத் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் குறித்த பெண்ணும் இளைஞரும் சிறுமியை சூரிய ஆர என்ற இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு வீடொன்றில் வைத்து இளைஞரால் சிறுமி துஷ்பிரயோகப்படுத்தப்பட்டதாகவும் அதன் பின்னர் பிக்கு ஒருவர் அங்கு வரவழைக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் அயலவர் ஒருவரால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய 18 வயது இளைஞரும் 20 வயதான பிக்குவும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒத்துழைத்ததாகக் கருதப்படும் பெண் தலைமறைவாகியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியை வைத்திய பரிசோதனைகளுக்காக ஹம்பாந்தோட்டை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்க பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தோழனுக்காக பரீட்சை எழுதிய பிக்கு புத்தளத்தில் சிக்கினார்!

## மூன்று நாள் தொடர்ச்சியாக வந்தாரென தகவல்

(ஜூட் சமந்த)

தோழனின் அடையாள அட்டையை வைத்துக்கொண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதிய சக பிக்கு ஒருவர் புத்தளத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பெலியத்த, இசுருபுர பகுதியிலுள்ள விகாரையைச் சேர்ந்த பிக்கு ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பரீட்சை மத்திய நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தப் பிக்கு வினாத்தாள்களுக்கு பதிலளித்துக்கொண்டிருந்தபோது சந்தேகம் கொண்டு தற்செயலாக பரீட்சை மேலாளர் பரிசோதித்துள்ளார்.

இதன்போதே போலி அடையாள அட்டையுடன் பிக்கு பரீட்சை எழுதியமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பில் புத்தளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் பரீட்சை நிலையத்துக்கு வந்து பிக்குவை கைதுசெய்துள்ளனர். இந்தப் பிக்கு கடந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொண்டவரென தெரிவிக்கப்பட்டுள்ளது. தனது நண்பரான சக பிக்குவுக்காக பரீட்சை எழுதியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலாப் பயணிமீது ஏற்பட்ட திடீர் காதல்!

## எல்ல பகுதி இளைஞர் கைது

வெளிநாட்டு சுற்றுலாப் பயணி மீது ஏற்பட்ட திடீர் காதல் காரணமாக அவதூறாகப் பேசிய இளைஞர் ஒருவரை எல்ல பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, இளம் பெண்ணான சுற்றுலாப் பயணியொருவர் எல்ல பகுதியில் விடுதியொன்றில் அறையொன்றை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்துள்ளார். அவர் அப்பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பெற்றுக்கொண்டு எல்ல பகுதியை பார்வையிடச் சென்றுள்ளார்.

அவ்வாறு சென்றுவரும் சமயத்தில் அப்பகுதியால் மோட்டார் சைக்களில் வந்த இளைஞர் ஒருவர் சுற்றுலாப் பயணி செல்ல முடியாதவாறு வழிமறித்து தனது மோட்டார்சைக்கிளை நிறுத்தியுள்ளார்.

அதன்பின்னர் அந்தப் பெண்ணைக் காதலிப்பதாக தெரிவித்து வேறொரு அறைக்கு வருமாறு அழைத்துள்ளார். அவ்வாறு மறுக்கும் சந்தர்ப்பத்தில் அங்கிருந்து செல்வதற்கு அனுமதிக்க முடியாதென்றும் இளைஞர் தெரிவித்துள்ளார்.

தான் ஆபத்தில் இருப்பதாக அறிந்துகொண்ட சுற்றுலாப் பயணி அங்கிருந்து தப்பிச்சென்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். இதனையடுத்து நடத்திய விசேட தேடுதலின்போது சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# போலி தகவல்களைச் சொல்லி விகாரையிலிருந்து சிலிண்டர் திருட்டு!

(டீ.கே. பேர்ணாட்)

ஜா-எல போதிராஜ விகாரையில் சிலிண்டர் ஒன்றைத் திருடிச்சென்ற நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

விகாரையிலிருந்து சிலிண்டரை எடுத்துக்கொண்டு வருமாறு அப்பகுதியில் பிரபலமான வர்த்தகர் ஒருவர் தெரிவித்ததாக விகாராதிபதியிடம் குறித்த நபர் கூறியுள்ளார்.

இதனையடுத்து அவர் சிலிண்டரை எடுத்துக்கொண்டு முச்சக்கரவண்டியில் பயணித்துள்ளார். அவரது நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட விகாராதிபதி அது தொடர்பில் உடனடியாக ஜா-எல பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்ததுடன் சந்தேக நபரை ஜா-எல பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளனர். இவ்வாறு கைதானவர் போதைப்பொருளுக்கு




அடிமையானவரென பொலிஸார் தெரிவித்தனர். ஜா-எல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரத்நாயக்கவின் தலைமையில் இது தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# அரசாங்கத்தால் கிழக்கு மாகாணத்தில் மஞ்சள், இஞ்சி, ஆடு வளர்ப்புத்திட்டம் நடைமுறைப்படுத்த தீர்மானம்






(மட்டக்களப்பு நிருபர்)

பின்தங்கிய கிராம அபிவிருத்தி, மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை, திருகோணமலை மாவட்டங்களுக்கு மஞ்சள், இஞ்சி மற்றும் ஆடு வளர்ப்புத் திட்டங்கள் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

அரசின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கமைவாக மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கையினை மேம்படுத்தும் நோக்குடன் கிழக்கு மாகாணம் உட்பட பொலன்னறுவை மாவட்டத்திலும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதனடிப்படையில் இவ்வாண்டு இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட அரச தரப்பினருக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டல் வழங்கும் விசேட நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்தின் ஏற்பாட்டில் நேற்று (17) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

பின்தங்கிய கிராம அபிவிருத்தி, மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி எஸ்.அமலநாதன் தலைமையில் இடம்பெற்ற தெளிவூட்டல் நிகழ்வில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், கால்நடை அபிவிருத்தி திணைக்களம், நீர்பாசனத் திணைக்களம், விவசாய விரிவாக்கல் பிரிவு ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

இத்திட்டத்தின் மூலம் வீட்டுத் தோட்டங்களுக்காக ஒருமாதம் பராமரித்து வளர்க்கப்பட்ட இஞ்சி மற்றும் மஞ்சள் கன்றுகள் இருபது பக்கெற்றுகளும் தோட்டங்களுக்காக குறைந்தது ஒரு பேச் நிலத்துக்கு 03 கிலோகிராம் விதைகளும் கூடியது 02 பேச் நிலத்துக்கு 06 கிலோ விதைகளும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தினை சிறப்பாக இம்மாவட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனை வழிகாட்டல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி எஸ். அமலநாதனினால் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், இத்திட்டத்தில் ஆடு வளர்ப்புக்காக நல் இன ஆடுகள் வழங்கப்படவுள்ளதுடன், இத்திட்டத்துக்கென மொத்தமாக மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சுமார் 40 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# திருமலை எண்ணெய்க் குதங்களை வெளிநாடுகளுக்கு வழங்க எதிர்ப்பு

## கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஆளுநரிடம் கையளிப்பு

(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை வெகுஜன ஒற்றுமை அமைப்பானது திருகோணமலை சீனக்குடா எண்ணெய்க் குதங்களை வெளிநாடுகளுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத்தெரிவித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று நேற்று (17) காலை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திடம் கையளிக்கப்பட்டது.

சமயத் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட குறித்த செயற்பாட்டில் களனிப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கபுகொல்லாவே ஆனந்த கீர்த்தி தேரர், திருகோணமலை சீனக்குடா பங்குத்தந்தை அருட்தந்தை ஜோர்ஜ் திசாநாயக்க மற்றும் பலர் ஒன்றிணைந்து தமது கருத்துகள் அடங்கிய மகஜர் ஒன்றினை ஆளுநரிடம் கையளித்தனர்.

திருகோணமலைக்கு சொந்தமான சொத்துகளை வெளிநாட்டவருக்கு வழங்குவதை திருகோணமலை வாழ் மக்கள் ஒன்றுபட்டு எதிர்ப்புத் தெரிவிப்பதாக கருத்து தெரிவித்த



அருட்தந்தை, பொதுமக்கள் நாட்டின் அபிவிருத்திக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் அல்ல. மாறாக, முறைகேடான அபிவிருத்தி திட்டங்களை தாம் வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்தனர்.

இவ் எண்ணெய்க் குதங்கள் விற்பனைக்கு எதிர்த்து கடந்த வாரம் திருகோணமலையில் பொது மக்களுக்கு தெளிவுபடுத்தும் மாநாடு ஒன்று திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றதுடன், வருகைதந்த மக்களிடம் கையொப்பமும் சேகரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# கலாசார மத்திய நிலையங்கள் திறந்துவைப்பு





(மட்டக்களப்பு நிருபர்)

கலாசார அலுவலகள் அமைச்சின், கலாசார மத்திய நிலையங்கள் செங்கலடி மற்றும் வாகரை பிரதேசங்களில் எதிர்வரும் மார்ச் 02ஆம் திகதி கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளரின் பங்குபற்றுதலுடன் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான முன்னாயத்த ஏற்பாட்டு நடவடிக்கைகள் மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (16) நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.என்.திலக் ஹெட்டியாராச்சி, பிரசாத் ரணசிங்க, கலாசார ஊக்குவிப்பு பணிப்பாளர், மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷினி ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் நவேஸ்வரன், பிரதேச செயலாளர்கள், பணிப்பாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# நிந்தவூரில் காணி உரிமையாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கிவைப்பு



(மாவடிப்பள்ளி நிருபர்)

நிந்தவூர் பிரதேசத்தில் அளிப்புப்பத்திரம், அனுமதிப்பத்திரம் மற்றும் கொட்டு வாடி பத்திரம் ஆகியன காணி உரிமையாளர்களுக்கு வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.ஏ.லத்தீப் தலைமையில் நிந்தவூர் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் மற்றும் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்ஸார் ஆகியோர் கலந்துகொண்டு இப்பத்திரங்களை வழங்கிவைத்தனர்.

இதில் உதவிப் பிரதேச செயலாளர் ரீ.ஜெஸான், அம்பாறை மாவட்ட தலைமை காரியாலய காணி உத்தியோகத்தர் கே.எல்.எம்.முஸம்மில் மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக காணிப்பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் 27 உத்தரவுப்பத்திரங்களும் 07 அளிப்புப் பத்திரங்களும் 01 கொட்டு வாடிப் பத்திரமும் உரியவர்களுக்கு வழங்கப்பட்டன.

இதேவேளை, அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் நிந்தவூர் பிரதேசத்தில் கடலரிப்புக்குள்ளாகியுள்ள பிரதேசங்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போடியார் புலம்பல்!



ஹக்கீமின் பின்னால் ஒளிந்து அரசியல் செய்யவேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் கல்முனையில நடந்த கூட்டத்தில் பகிரங்கமா சொன்னதப்பார்த்தால் சிரிப்புத்தான் வருகுது..! ஏன் தெரியுமா..? ஒளிச்சு ஒளிச்சு அரசியல் செய்யிறதே ஹக்கீம் நானா எலுவா.. அவரு சம்பந்தரோட, ரணிலோட, மகிந்தவோட, சந்திராவோட, மனோகணேசனோட எல்லாம் ஒளிச்சி விளையாடுறதுதானே அவருட புறவிக்குணம்.. மறுகா அவருக்கு பின்னால் ஆரும் ஒளிக்கதேவல்லயே.. அவரே ஒளிச்சு விளையாடி தாவி அரசியல் செய்யிறதில கில்லாடி எலுவா?

# நூறு கோடி மக்களின் எழுச்சி 2022



(மட்டக்களப்பு நிருபர்)

'பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும்' எனும் தொனிப்பொருளில் நூறு கோடி மக்களின் எழுச்சி 2022 என்ற நிகழ்வு மட்டக்களப்பில் கொண்டாடப்பட்டது.

'பெண்களுக்கு அவர்கள் உடல்மீதுள்ள உரிமைகளைக் கொண்டாடுவோம், பெண்கள் உடல்கள் மீது மற்றவர் உரிமை கொள்ளாத சமுகங்களைக் கொண்டாடுவோம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு நாவட்கடா பிரதேசத்தில் இயங்கிவரும் பெண்கள் அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு கடந்த 14ஆம் திகதி நாவற்குடா ஜீவஒளி மைதானத்தில் இடம்பெற்றது.

மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக்குழு, வன்முறையற்ற வாழ்வுக்கான காண்பியக் கலைஞர்கள், நீதிக்கான பறைசமதை பெண்ணிலைவாத நண்பிகள் குழு என்பன இணைந்து இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது பெப்ரவரி 14இல் வருடாந்தம் கொண்டாடப்படும் நூறுகோடி மக்களின் எழுச்சி நிகழ்வுகள், சிறுவர்களுக்கான ஓவியம் வரைதல் மற்றும் கண்காட்சி நிகழ்வுகள், செயல்வாதப் பாடல்கள், வன்முறையற்ற வாழ்வுக்கான காண்பிக் காட்சிகள் மற்றும் நீதிக்கான பறை போன்ற நிகழ்வுகளும் நிகழ்த்தப்பட்டன.

# கல்முனை அல்- பஹ்ரியா தேசிய பாடசாலையின் வருடாந்த பொதுக் கூட்டமும் நூல்கள் அன்பளிப்பும்

(கல்முனை நிருபர்)

கல்முனை அல்- பஹ்ரியா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களின் அமைப்புகளில் ஒன்றான பஹ்ரியன் 98 அமைப்பினரின் 2022ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் பாடசாலையின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஏ.எம். பைசால் பஹ்ரியன் அமைப்பின் ஆலோசகர் ஆசிரியர் ஜாபீர் ஏ காதர், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ்.எல்.ஹமீட் மற்றும் அமைப்பின் தலைவர் யூ.கே.லாபிர் செயலாளர் ஏ.ஆர்.சப்ரான் ஆகியோருடன் அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலையின் எதிர்கால கல்வி புறப்பாடவிதான அபிவிருத்தி மற்றும் பாடசாலையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, அதில் பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்புகள், கடந்த காலங்களில் பாடசாலையின் அபிவிருத்தி பணிகளில் பஹ்ரியன் அமைப்பின் மெச்சத் தகுந்த பங்களிப்புகள், தற்காலத்தில் பாடசாலையில் காணப்படும் பிரதான குறைபாடுகள் அதனை நிவர்த்தி செய்வதில் பெற்றோர் வழங்க வேண்டிய பங்களிப்பு போன்ற விடயங்கள் தொடர்பில்



பாடசாலையின் அதிபர் தனது கருத்துகளை பரிமாறினார். பின்னர் மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் ஹமீட், அமைப்பின் ஆலோசகர் ஆசிரியர் ஜாபிர் ஏ காதர், அமைப்பின் தலைவர் லாபிர் மற்றும் அமைப்பின் அங்கத்தவர்கள் தங்களது ஆக்கபூர்வமான கருத்துகளை பகிர்ந்துகொண்டார்.

நிகழ்வின் அங்கமாக பஹ்ரியன் 98 அமைப்பினர் பாடசாலையின் எதிர்கால கல்வி அபிவிருத்தியை முன்னிறுத்தி பாடசாலையின் நூலகத்துக்கு 50ஆயிரம் ரூபா பெறுமதியான நூல் தொகுதியை வழங்கிவைத்தனர்.

நிகழ்வின் இறுதியாக பஹ்ரியன் 98 அமைப்பின் இலட்சினை பாடசாலையின் அதிபர் பைசாலினால் வெளியிடப்பட்டது.

# ஆட்சி செய்வதில் காட்டும் ஆர்வமும் அக்கறையும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் காட்டப்படவில்லை

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் தெரிவிப்பு

(வீரமுனை நிருபர்)

சிங்கள பௌத்த தேசியவாதத்தின் மூலமாக ஆட்சி செய்வதில் காட்டும் ஆர்வ அக்கறை இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் காட்டப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறுகையில்,

தேசிய இனப்பிரச்சினையினை அரசியல் முதலீடாகவும் தமிழ்த் தலைவர்களை வில்லர்களாக்கி, சிங்களத் தலைவர்கள் கதாநாயகர்களாக செயற்படும் அரசியல் சினிமாவே இலங்கை அரசியலில் அரங்கேறுகிறது.

இலங்கையில் தமிழர்களுக்கான இனப்பிரச்சினை 1920இல் பிரித்தானிய ஆட்சியாளர்களின் பிரித்தாளும் தந்திரத்தினால் உருவாக்கப்பட்டது. அதாவது 1919இல் தோன்றிய இலங்கை தேசிய காங்கிரஸின் தலைவரான சேர்.பொன்.அருணாசலம் மூவினத்தவரின் விருப்புடன் தெரிவுசெய்யப்பட்டார். மூவின ஐக்கிய இயக்கம்



பிரித்தானிய ஆட்சிக்கு சவாலாக அமையும் என்பதற்காக, வில்லியம் மனிங் தேசாதிபதி சூழ்ச்சி மூலமாக தேசிய காங்கிரஸிலுள்ள தமிழ், சிங்களத் தலைவர்கள் மத்தியில் பிரித்தாளும் தந்திரத்தைப் பயன்படுத்தி பூசலை ஏற்படுத்தினார். சட்ட நிரூபண சபைக்கான மேல் மாகாணப் பிரதிநிதித்துவம் ஒன்றினை அதிகரித்து, அதனைப் பெறுவதில் சிங்கள தமிழ்த் தலைவர்கள் மத்தியில் போட்டியை ஏற்படுத்தினார். சிங்களத் தலைவர்கள் ஏற்கனவே தமிழ்த் தலைவர்களுடன் செய்து கொண்ட விட்டுக்கொடுப்பு ஒப்பந்தத்தினை மீறினர். இதனால் அதிகரித்த பிரதிநிதித்துவத்தை விட்டுக் கொடுக்காததால், இலங்கைத் தேசிய காங்கிரஸிலுள்ள தமிழ்த் தலைவர்கள் பிரிந்து சென்று சேர் பொன்.அருணாசலம் தலைமையில் 1921இல் தமிழ் மகாசபையினை உருவாக்கினர். இப்பிளவுடன் சிங்களவர், தமிழர் இனப்பிரச்சினைக்கான பலமான அத்திவாரம் இடப்பட்டது.

இதனை பிரித்தானிய ஆட்சியாளர் ஆரம்பித்து வைக்க சிங்களத் தலைவர்கள் இனவாத மதவாத கட்டுமானங்கள் மூலமாக தமது அரசியல் இலாபத்துக்காக மாறி மாறிக் கட்டமைத்து வளர்த்து விட்டனர். சிங்கள அடிப்படைவாத அரசியல் இலாப சிந்தனை எந்த முயற்சியையும் வெற்றி பெறவிடவில்லை.

1947இல் ஆட்சியமைத்த ஐக்கிய தேசியக் கட்சியினர் பிரஜாவுரிமை, வாக்குரிமைச் சட்டம், கல்லோயா சிங்கள குடியேற்றத்திட்டம் மூலமாக தமிழர் இனப்பிரச்சினையை வளர்த்ததுடன் மேலும் வலதுசாரிப் போக்குடைய ஐக்கிய தேசியக் கட்சி தனது அதிகார காலத்தில் இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் மேலும் வளர்த்து விட்டது.

எனவே, இடதுசாரிகளின் ஆட்சிக்காலத்தில் சிங்களம், பௌத்தம் மேலோங்கி நிற்க பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல், தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், தொழில்வாய்ப்பில் பாரபட்சம், சிங்களம் தெரியாத தமிழ் கிராம உத்தியோகத்தர் இடைநிறுத்தம் என்று பல சிங்கள அடிப்படைவாத கெடுபிடிகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

சுதந்திரக் கட்சியின் ஊடாக பொதுஜன முன்னணி என்ற பரிமாணத்தில் 1994-2005 வரை ஆட்சி செய்த சந்திரிகா அம்மையார் சமாதானப்புறாவாகக் காட்சியளித்து பின்னர் பொறுமை இழந்து சண்டைக்கோழியாக மாறினார்.

2005 முதல் 2015களில் ஆட்சி செய்த, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ, 13 பிளஸ் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு தரப்போவதாகக் கூறினார். அதுவும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனிடம் இந்த உத்தரவாதம் அளித்த பின்னர் அவரையே ஏமாற்றினார்.

தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் டி. எஸ். சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, பண்டாரநாயக்க, ஸ்ரீமாவோ, ஜயவர்தனா, பிரேமதாச, விஜேதுங்க, சந்திரிகா, ரணில், மஹிந்த, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்று அனைத்துத் தலைவர்களும் அன்று தொட்டு இன்றுவரை அக்கறையற்றவர்களாக அல்லது தீர்க்க விரும்பாதவர்களாக இருந்து வந்துள்ளனர்.

நாடு எக்கேடு கெட்டாலும் இந்த ஹீரோ-வில்லன் அரசியல் 74 ஆண்டுகளாக நடைபெறுகின்றது. இந்த அரசியல் ஆளும் தரப்பினருக்கு கொள்ளை இலாபமீட்டும் அரசியல் வியாபாரமாக அமைந்துள்ளது.

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்க்கவல்ல தலைவர்களோ புத்திஜீவிகளோ மதத் தலைவர்களோ மனப்பாங்கர்களோ இந்த நாட்டில் எவருமே இல்லை. இதுதான் இலங்கையின் துயரமான கறைபடிந்த 74 ஆண்டு கால வரலாறாகும். பிரச்சினைகளை அரசியல் முதலீடாக்கும் அடிப்படைவாதப் பொறிமுறைகளே இந்த நாட்டில் அதிகார வர்க்கத்திடம் அதிகமாகவுள்ளது.

நிகழ்காலத்தில் மட்டுமல்ல, எதிர்காலத்திலும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கவல்ல பல்லின ஆளுமையுள்ள ஆற்றலுள்ள சிங்களத் தலைவர்கள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை. எனவே தமிழர்களுக்கு இருக்கின்ற ஒரே வழி சர்வதேச பொறிமுறையே. எனவே தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களுக்காக ஒன்றுபட்டு இப்பொறிமுறையை முறையாகக் கையாள வேண்டும். 74 ஆண்டுகள் தமிழருக்குக் கிடைத்த பட்டறிவுப் படிப்பினை என்னவென்றால், தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவல்ல தலைவர்கள் இலங்கையில் இல்லை என்பதுதான் என்றார்.

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்கக்கோரி மட்டக்களப்பில் கவனயீர்ப்பு போராட்டம்

(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு ஓவியா விடுதி வளாகத்தில் அனுமதியின்றி முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மணல் அகழ்வினை தடுக்கக்கோரி நேற்று முன்தினம் மாலை (16) திருமலை வீதி கிரானில் பொது அமைப்புகளினால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு கிரான் கிறிஸ்தவ சேவை ஆச்சிரம வீதியில் இருந்து ஆரம்பமான எதிர்ப்பு பேரணியானது, ஊர்வலமாக பிரதான திருமலை வீதி வழியாக வந்து ஓவியா சுற்றுலா விடுதிக்கு முன்பாக ஒன்றுகூடி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினார்கள். வாழைச்சேனை பொலிஸாரினால் நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"தடைசெய், தடைசெய் சட்டவிரோத மணல் அகழ்வை தடை செய், நீச்சல் தடாகம் என்ற போர்வையில் மணல் அகழ்வதனை தடைசெய், மீன் வளர்ப்பு என்ற போர்வையில் எமது வளத்தினை சுரண்டாதே" போன்ற கோஷங்களை எழுப்பி சுற்றுலா விடுதிக்கு முன்பாக நின்று தமது எதிர்ப்பினை தெரிவித்தனர். இவ் மணல் அகழ்வு நடவடிக்கையினால் தங்கள் வீடுகள் இடிவதற்கு யார் பொறுப்பு, குடிநீருக்கு நாங்கள் எங்கே செல்வது, என்று போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கேள்விகளை எழுப்பினார்கள். பின்னர் தங்கள் கோரிக்கை அடங்கிய மகஜரை கோறளைப்பற்று பிரதேச சபை தவிசாளர் திருமதி






சோபா ஜெயரஞ்சித் மற்றும் வாழைச்சேனை பொலிஸாரிடம் கையளித்தனர்.

குறித்த சுற்றுலா விடுதி வளாகத்தில் கடந்த 04 மாத காலமாக பாரியளவில் மணல் அகழப்பட்டு தென்பகுதிக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதற்கு புவிசரிதவியல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அகழ்வுக்கான நியதிகள் எதுவும் பின்பற்றப்படாமல் மணல் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் குறித்த இடம் ஆழமாக்கப்பட்டு பாரிய குளம் போன்று அப்பகுதி காட்சியளிக்கிறது. இந்நடவடிக்கையினால் பிரதேசத்தில் வெள்ள காலங்களில் நீர் வழிந்தோடும் இடங்களில் சமநிலை குழப்பம் ஏற்பட்டு நீர் வழிந்தோட முடியாமலும் பல்வேறு அசௌகரியங்களையும் தாம் எதிர்காலத்தில் எதிர்நோக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

வெளிநாடொன்றில் வசிக்கும் இரட்டை பிரஜா உரிமை உள்ளவரே பொது நலம் கருதாமல் ஊருக்குள் மணல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும் இவர் இச் செயற்பாட்டினை நிறுத்தாமல் தொடர்ந்து மேற்கொண்டு வந்தால் பாரியளவில் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட தவிசாளர் கருத்து தெரிவிக்கையில், சுற்றுலா விடுதி நடத்துவதற்கே தாம் அனுமதி வழங்கியுள்ளோமே தவிர மேற்படி நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கவில்லையென்றும், குறித்த மணல் அகழ்வினை நிறுத்துமாறுகோரியும் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் புவிசரிதவியல் திணைக்களத்துக்கும் கிரான் பிரதேச செயலாளருக்கும் நடவடிக்கைக்காக அறிக்கை சமர்ப்பித்துள்ளேன். அத்துடன் சட்டவிரோத மணல் அகழ்வினை தடுக்கக்கோரி வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கவனயீர்ப்பு போராட்டத்தில் கிரான் பொதுமக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சியினர் கலந்துகொண்டனர்.

# மருதமுனை அய்மா நிஃமத்துல்லா உதவிப் பிரதேச செயலாளராக நியமனம்



(மருதமுனை நிருபர்)

2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட மருதமுனையைச் சேர்ந்த அய்மா நிஃமத்துல்லா கடந்த ஆறு மாதங்கள் கொழும்பு, திருகோணமலை, அம்பாறை, கல்முனை ஆகிய இடங்களில் பயிற்சியை நிறைவு செய்தபின்னர் மஹாஓய பிரதேச செயலகத்தின் உதவிப்பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 11ஆம் திகதி பிரதேச செயலாளர் திலின விக்கிரமரத்ன முன்னிலையில் தனது கடமையைப் பொறுப்பேற்றார். தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த 08ஆம் திகதி உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டது.

# ஏறாவூரில் கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை தீவிரம்

(ஏறாவூர் நிருபர்)

கொவிட் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஏறாவூரில் மிகத்தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ஏறாவூர்ப் பிரதேசத்தில் இதுவரை சுமார் 60 ஆயிரம் பேர் கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி சாபிறா வசிம் தலைமையில் நடைபெற்றுவரும் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையின்போது இதுவரை சினோபாம் முதலாம் டோஸ் 23 ஆயிரம் பேருக்கும் இரண்டாம் டோஸ் 21 ஆயிரம் பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஏறாவூரில் 11 ஆயிரத்து 500 பேர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இதேவேளை இங்கு சுமார் 05ஆயிரம் பேர் பைஸர் தடுப்பூசி பெற்றுள்ளதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி சாபிறா வசிம் குறிப்பிட்டார்.

தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் கட்டாயத்தை வலியுறுத்தி ஏறாவூர்ப் பிரதேசத்தில் பொது இடங்களில் அடிக்கடி ஒலிபெருக்கிகள் மூலமாக அறிவிப்புச் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. ஏறாவூரில் மதுபானம், கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூரில் பூரணை தினத்தில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட மற்றும் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட 03 பெண்களை நேற்று முன்தினம் (16) கைதுசெய்துள்ளதுடன், 43 கல்போத்தல் கொண்ட மதுபான போத்தல்களை மீட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஆறுமுகத்தான்குடியிருப்பு பகுதியில் உள்ள 3 வீடுகளை பொலிஸார் முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கை மேற்கொண்டபோது மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவரை 21 மதுபான போத்தல்களுடன் கைதுசெய்தனர்.

அதனைத் தொடர்ந்து இன்னுமொரு வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கு மதுபான வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரிடமிருந்து 22 கால் போத்தல் மதுபானங்களுடன் அவரை கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் 3,350 மில்லி கிராம் கஞ்சாவுடன் பெண் ஒருவரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கந்தளாயில் சுயதொழிலுக்காக புதிய துவிச்சக்கரவண்டிகள் வழங்கிவைப்பு



(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிரின் முன்மொழிவினூடாக கந்தளாய் பேராறு கிழக்கு கிராம சேவகர் பிரிவில் இரண்டாம் கட்டமாக அரசினால் வாழ்வாதாரமற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் வழங்கும் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வறுமைகோட்டின் கீழ் வாழும் சில குடும்பங்களுக்கு சுயதொழில் தேவைக்காக புதிய துவிச்சக்கர வண்டிகள் நேற்று முன்தினம் (16) வழங்கப்பட்டன.

ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் நாட்டின் தனிநபர் பொருளாதார அபிவிருத்தியை அதிகரிக்கும் சுயதொழில் வாழ்வாதாரத் திட்டத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அதுகொரலவின் வேண்டுகோளுக்கிணங்க, கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம். ஜவாஹிரினால் பேராறு கிழக்கு வட்டாரத்தில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் கந்தளாய் பேராறு 227 G/O கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராமிய பிரஜா பொலிஸ் அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மலையக இளைஞர், யுவதிகளின் தேயிலைச்சாயம் கண்காட்சி மட்டக்களப்பில்




(கல்லடி நிருபர்)

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் 40 மலையக இளைஞர்கள் மற்றும் யுவதிகளால் மலையக மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வகையிலான 190 புகைப்படங்கள் அடங்கிய தேயிலைச்சாயம் கண்காட்சி மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபம் மற்றும் சாள்ஸ் மண்டபம் ஆகியவற்றில் நேற்று (17) ஆரம்பமானது. இக்கண்காட்சி இன்று (18) மாலை 6.00 மணியுடன் நிறைவுபெறவுள்ளதாக மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் புகைப்படப் பிரிவுக்குப் பொறுப்பான லைறு கித்துலகம தெரிவித்தார்.

அந்த வகையில், மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் 100 புகைப்படங்களும் சாள்ஸ் மண்டபத்தில் 90 புகைப்படங்களுமாக 190 புகைப்படங்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

இக்கண்காட்சியில் கலந்து கொண்டிருக்கும் புகைப்படக் கலைஞர்கள் 40 பேரும் கடந்த மூன்று வருடங்களாகப் புகைப்படத்துறையில் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் மலையகத்தின் பதுளை மாவட்டத்திலிருந்து 20 இளைஞர், யுவதிகளும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 20 இளைஞர், யுவதிகளுமாக மொத்தம் 40 பேர் தெரிவாகியிருந்தனர்.

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்தோருக்கு சுயசக்தி நிறுவனமும், நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்தோருக்கு ஊவா சக்தி நிறுவனமும் பயிற்சியினை வழங்கியிருந்தது.

இவர்களால் எடுக்கப்பட்ட 04 இலட்சத்து 50 ஆயிரம் புகைப்படங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 190 புகைப்படங்களே இவ்விதம் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்புகைப்படக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது இப்புகைப்படங்கள் அடங்கிய ஆவணத்தை ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவனிடம் தேயிலைச் சாயம் புகைப்படக் கண்காட்சி ஒருங்கிணைப்பாளர் எ.செல்வராஜா வழங்கிவைத்தார்.

# பொத்துவில் சைக்கிளோட்ட வீரருக்கு மட்டக்களப்பில் மகத்தான வரவேற்பு




(மட்டக்களப்பு நிருபர்)

இன ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு தழுவிய சைக்கிளோட்டத்தை முன்னெடுத்துள்ள அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய கலந்தார் சுல்பிகார் நேற்று முன்தினம் (16) மட்டக்களப்பு நகரை வந்தடைந்தார். இதன்போது சைக்கிளோட்ட வீரருக்கு மட்டக்களப்பில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

இலங்கை திருநாட்டின் 74ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு முழுவதும் தனிநபராக 1,407 கிலோமீற்றர் சைக்கிள் சவாரியை இவர் கொழும்பு சுதந்திர சதுக்கத்திலிருந்து கடந்த சனிக்கிழமை ஆரம்பித்திருந்தார்.

குறித்த ஆரம்ப நிகழ்வில் சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் சைக்கிள் சவாரி ஆரம்பமாகி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, பொத்துவில், ஹம்பாந்தோட்டை ஊடாக கொழும்பை சென்றடையவுள்ளார்.

நான்காவது நாளான நேற்று குறித்த சைக்கிளோட்ட வீரர் மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதி ஊடாக வருகைதந்தபோது மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் வைத்து இந்த மகத்தான பாராட்டும் கௌரவமும் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வி. ஈஸ்வரன் தலைமையிலான விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களினால் வரவேற்கும் நிகழ்வு மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள், மட்டக்களப்பு வர்த்தக சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு வரவேற்பளிக்கப்பட்டதுடன் தொடர்ந்து கொழும்பில் நிறைவு செய்யவுள்ள பயணத்துக்கு வழியனுப்பி வைத்தனர்.

# பாண்டிருப்பு கடற்கரையில் துப்பாக்கி ரவைகள் மீட்பு




(பாறுக் ஷிஹான்)

பாண்டிருப்பு கடற்கரை பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் புதிய பல்வேறு வகையான துப்பாக்கி ரவைகளை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு கடற்கரைப் பகுதியில் நேற்று (17) முற்பகல் புலனாய்வு தகவல் ஒன்றுக்கமைய பிளாஸ்டிக் வடிவம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கரையொதுங்கிய குறித்த துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இத்தேடுதல் நடவடிக்கையானது கல்முனை கடற்படையினர் மேற்கொண்டதுடன், குறித்த துப்பாக்கி ரவைகள் புதிதாக காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கைப்பற்றப்பட்ட ரவைகளை கல்முனை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான பணியினை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனையில் சமுர்த்தி பயனாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கல்



(கல்முனை நிருபர்)

சுபீட்சத்தின் நோக்கத்துக்கமைய சமுர்த்தி பயனாளர்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி மானிய தொகை கொடுப்பனவை 28 சதவீதமாக அதிகரிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கமைய சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் பயனாளர்களுக்கான அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கிவைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடி சமுர்த்தி வங்கி வலயத்தின் ஏற்பாட்டில் கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கல்முனைக்குடி - 13 கிராம சேவகர் பிரிவில் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு குறித்த சமுர்த்தி அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சமுர்த்தி வங்கி வலய முகாமையாளர் மோசஸ் புவிராஜின் நெறிப்படுத்தலில் கல்முனைக்குடி -13 சமுர்த்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.வதூத் ஒருங்கிணைப்பில் கல்முனை அல் -மிஸ்பாஹ் மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

# திருமலை சண்முகா பாடசாலை ஆடையுரிமை மீறலை விசாரிக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)

74ஆவது சுதந்திர தினத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உரையில் இந்த நாட்டில் தனிநபர்களினதும் இனம், மதம் ரீதியிலான உரிமைகளை இந்த அரசாங்கம் உறுதிப்படுத்தி உள்ளதாகவும் பாதுகாத்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால், அவை இந்த நாட்டில் நடைபெறுகின்றதா? எனும் சந்தேகம் அண்மைய நாட்களில் நடைபெற்ற சம்பவங்களை பார்க்கும்போது தோன்றுகிறது.

ஆனால், திருகோணமலை சண்முகா பாடசாலையில் முஸ்லிம் மாணவிகள் தமது பர்தாவினையும் காற்சட்டையினையும் கழற்றி வைத்துவிட்டே வகுப்பறைகளுக்கு அனுப்பப்படுவதாக திருகோணமலை கள விஜயத்தின்போது கிழக்கின் கேடயத்தினர் அறிந்துகொண்டதாகவும் இதுதொடர்பில் உண்மைத் தன்மையினை கண்டறிந்து தவறு இழைத்தவர்களுக்கு உரியநடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடுமாறும் கிழக்கின் கேடயம் சார்பில் தலைவர் எஸ்.எம்.சபீஸ் கையெழுத்திட்ட எழுத்துமூல கடிதம் அரசின் உயர்மட்டத்தினருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த பாடசாலைக்கு அங்கு காணப்படும் ஏனைய பாடசாலைகளையும் விட அதிகளவான பௌதீக வளங்கள் அதிகாரத்தில் உள்ளவர்களால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்படியிருந்தும், இவ்வாறான மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கக்கோரிய கடிதம் ஜனாதிபதி, கல்வியமைச்சர், ஆளுநர், மாகாண கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி பணிப்பாளர், ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# நல்லாட்சியில் ஜனநாயகம் உயிர்ப்பிக்கப்பட்டது

## முன்னாள் பிரதியமைச்சர் கணேசமூர்த்தி

(மட்டக்களப்பு நிருபர்)

வடகிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தர அரசியல்தீர்வு கிடைக்கப்பெறவேண்டும் எனும் நோக்குடன் புதிய அரசியலமைப்பை உருவாக்கி நாடாளுமன்ற தெரிவுக்குழுவையும் உருவாக்கி செயற்பட்டதுதான் எமது கடந்த கால நல்லாட்சியாகும். அக்காலத்தில் ஓய்வூதியக்காரர்களுக்குரிய பிரச்சினை, மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் என்பன ஏற்படுத்தப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக நாடாளுமன்றம் கலைந்ததனால் அவற்றை மேற்கொண்டு செல்ல முடியாமல் போய்விட்டது. ஆனாலும், அப்போது 19ஆவது அரசியலமைப்பு அரசியல் சரத்து கொண்டுவரப்பட்டுள்ளது. நாட்டின் ஜனநாயகம் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.



மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள இராசமாணிக்கம் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான ஒன்றுகூடலின்போது கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மால் உயிர்ப்பிக்கப்பட்ட ஜனநாயகத்தை தற்போதுள்ள அரசு மரணிக்கச் செய்துள்ளது. ஆணைக்குழுக்கள் அனைத்தும் சுதந்திரமற்ற நிலையில் காணப்படுகின்றன. எனவே ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கு கடந்த நல்லாட்சியில்தான் அடித்தளமிடப்பட்டது. தற்போது 20ஆவது சரத்தைக் கொண்டுவந்து அவைகளனைத்தும் தவிடுபொடியாக்கப்பட்டுள்ளன. தற்போது அரசாங்கம் பசளையை நிறுத்தி விவசாயிகளின் வயிற்றில் அடித்துள்ளது. இதனால் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளார்கள். இலவசமாக பசளை வழங்குவோம் என தேர்தல் காலத்தில் கூறிய அரசு தற்போது பணம் கொடுத்துக்கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. நாட்டில் எந்தப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்குச் சென்றாலும் வரிசையில் நிற்கவேண்டியுள்ளது. வரிசை யுகம் ஏற்பட்டுள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு நாட்டுமக்கள் இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளார்கள்.

இன விரிசல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எமது கட்சி இன ஒற்றுமைக்கு வழிவகுத்து, செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் மக்கள் சிந்தித்து செயற்படுவதற்குரிய காலம் ஏற்பட்டுள்ளது. பொருளாதாரம் குட்டிச்சுவராக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லை. வெளிநாட்டு வருமானங்கள் குறைந்துள்ளன. சர்வதேச மட்டத்தில் ஏற்றுமதி பாரிய வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு திட்டமான பொருளாதாரக் கொள்கை இல்லை மக்கள் மிகவும் இன்னலுறுகின்றார்கள். இந்த நிலையில் அரசாங்கம் வீண் செலவுகளை மேற்கொண்டு வருகின்றது. இந்நாட்டின் சரித்திரத்திலே இல்லாத பிரச்சினைகளை தற்போது மக்கள் எதிர்கொண்டு வருகின்றார்கள். இதற்கு ஒரே வழி இந்த அரசை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் ஸ்திரமான அரசை நிறுவுவதுதான். இதற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# நிலாவெளி கடற்கரையில் நீராடச்சென்று காணாமல்போன இளைஞர் சடலமாக மீட்பு



(ரவ்பீக் பாயிஸ், அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலாவெளி கடலில் குளிக்கச் சென்று 03 பேர் காணாமல் போயிருந்த நிலையில், இருவர் உயிருடன் மீட்கப்பட்டதுடன் மேலும் ஒருவர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனியார் தொழிற்சாலை ஒன்றின் ஊழியர்கள் சிலர் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு திருகோணமலை நிலாவெளி கடற்கரைக்கு வருகை தந்தநிலையில் நேற்று முன்தினம் (16) பிற்பகல் 1.30 மணியளவில் கடலில் குளித்துக்கொண்டிருக்கும்போது பாரிய அலையொன்றில் அடித்துச் சென்றதில் இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக காணாமல்போனவர்களின் நண்பர்கள் தெரிவித்தனர்.

மேலும், சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சுற்றுலா வந்தவர்களில் 13 பேர் கடலில் நீராடச் சென்றதாகவும் அவர்களில் நுவரெலியா, தலவாக்கலையைச் சேர்ந்த சமல் (வயது 21) மற்றும் தேஹிகொட்டுவ, நாளந்த பிரதேசத்தைச் சேர்ந்த பிரியங்கர பண்டார (வயது 28) மற்றும் பட்டியமுல்ல, தம்பகஹவெல, தலாத்துஓயா பிரதேசத்தைச் சேர்ந்த (வயது 21) மூவருமே காணாமல் போயுள்ள நிலையில் உப்புவெளி பொலிஸ் உயிர் காக்கும் பிரிவினரால் இருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் பட்டியமுல்ல, தம்பகஹவெல, தலாத்துஓயா பிரதேசத்தைச் சேர்ந்த (வயது 21) நபர் இதுவரை மீட்கப்படாத நிலையில், குறித்த நபரை தேடும் பணியில் உப்புவெளி பொலிஸ் உயிர் காக்கும் பிரிவினர் மற்றும் இலங்கை கடற்படையினர் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் நேற்று காலை அவர் சடலமாக கரையொதுங்கியுள்ள நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

காணாமற்போன குறித்த நபருடன் வருகை தந்த ஏனையவர்களும் நிலாவெளி கடற்கரையில் இருப்பதாகவும் குறித்த கடற்கரையில் கடல் சற்று கொந்தளிப்பான நிலை காணப்பட்ட போதிலும், கடலில் குறித்த தூரத்துக்கு மேலாக செல்ல வேண்டாம் என சிகப்பு கொடி நடப்பட்டு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ள நிலையில், நிலாவெளி கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அதையும் பொருட்படுத்தாது பொடுப்போக்குடன் நடந்து கொள்வதனால் இவ்வாறான அர்த்தங்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட உள்ளதாகவும் பிரேத பரிசோதனைக்கு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆதியம்மன்கேணியில் காட்டு யானை அட்டகாசம்





(கிண்ணியா நிருபர்)


திருகோணமலை மாவட்டம் சேருவில, ஆதியம்மன்கேணி லிங்கபுரத்தை சேர்ந்த விஜயராணி என்பவரின் வீடு, பயன்தரும் மரங்கள் என்பவற்றை காட்டு யானை நேற்று முன்தினம் அதிகாலை சேதப்படுத்தியுள்ளது.

அவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகி மயிரிழையில் உயிர்த் தப்பியுள்ளனர். குறிப்பாக இப்பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் ஒவ்வொரு நாளும் அச்சத்துடனேயே வாழ்கின்றனர் மற்றும் இப்பகுதியிலுள்ள விவசாய நிலங்களையும் தொடர்ந்தும் யானைகள் சேதப்படுத்தி வருகின்றன.

இவ்விடயமாக சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் ஏன் கவனத்தில் எடுக்கவில்லை என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# உடைந்துள்ள பாதையை புனரமைக்க கோரிக்கை





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நடுவூற்று கிராமத்தையும் சுங்கான்குழி கிராமத்தையும் இணைக்கும் பாதையானது உடைந்து சேதமாக்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று நாட்களாக பெய்த அடை மழை காரணமாக வெள்ளப்பெருக்கினால் நீர் உடைப்பெடுத்துள்ளதனால் குறித்த பாதை உடைந்துள்ளது. இப்பாதை ஊடாக நாளாந்தம் பலர் பயணிக்கின்றனர். விவசாயிகள் உட்பட பலர் இவ் வீதியை பயன்படுத்துகின்ற அதேநேரம் இப்பாதை ஊடாக பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இப்பாதையை புனரமைத்து தருமாறு உரிய அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# திருகோணமலை சுப்பர் 40 கழக சீருடை, இலச்சினை அறிமுகவிழா



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலையில் அனைத்து கழக அங்கத்தவர்களையும் ஒன்றிணைத்து திருகோணமலை சுப்பர் 40 கழகம் நேற்றுமுன்தினம் (16) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் அனைத்து கழகங்களில் இருந்தும் விளையாடி ஓய்வுபெற்ற வீரர்களை ஒன்றிணைத்து ஒரு கழகமாக ஒன்றிணைத்து 40 வயதுக்கு மேற்பட்ட வீரர்களை உள்வாங்கி இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதன் ஆரம்ப நிகழ்வு திருகோணமலை ரோயல் இன்டர்நேஷனல் கல்லூரியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது இலச்சினை மற்றும் சீருடை அறிமுக விழாவும் இடம்பெற்றது.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு மண்முனைப்பற்றில் கையளிப்பு

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக கடந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு வழங்க அங்கீகரிக்கப்பட்டமைக்கு அமைவாக மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவினை வழங்கும் பிரதான நிகழ்வு கிரான்குளம் தெற்கு பல்தேவைக்கட்டட மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி.ந.சத்தியானந்தி தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வுக்கு மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பிரிவின் முகாமையாளர் ஜெயராஜ், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர், தாழங்குடா வங்கி முகாமையாளர், மண்முனைப்பற்று பிரதேசசபை பிரதி தவிசாளர் மா.சுந்தரலிங்கம் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், பிரதேச அபிவிருத்திக் குழு தலைவரின் பிரதிநிதி, கிரான்குளம், கிரான்குளம் வடக்கு, தெற்கு மற்றும் மத்தி பிரிவுகளை சேர்ந்த கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கிரான்குளம், கிரான்குளம் வடக்கு, தெற்கு மற்றும் மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சேர்ந்த சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# செங்கலடி பிரதேச வைத்தியசாலையை தரமுயர்த்துமாறு கோரிக்கை



(மட்டக்களப்பு நிருபர்)

முன்னாள் அமைச்சர் கே.டபிள்யூ.தேவநாயகத்தினால் 1975ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட செங்கலடி பிரதேச வைத்தியசாலை தற்போதுவரை பின்னடைந்த நிலையிலேயே உள்ளது. இவ்வாறான வைத்தியசாலையை வளர்த்து மக்களின் நலனை காப்பாற்றுவதற்குரிய தூரநோக்கு கொண்ட தலைமைகள் இல்லாமையினாலேயே எமது சமூகத்தில் பல உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை உறுப்பினர் வ.சுரேந்திரன் தெரிவித்தார்.

செங்கலடி வைத்தியசாலையினை தரமுயர்த்துவது தொடர்பில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரைச் சந்தித்தமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

செங்கலடி ஏறாவூர்பற்று பிரதேசத்தின் மக்களுக்காக 1975ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் கே.டபிள்யூ.தேவநாயகத்தால் ஆரம்பிக்கப்பட்ட செங்கலடி பிரதேச வைத்திய சாலை தற்போது வரை பின்னடைந்த நிலையிலேயே உள்ளது. கடந்த கால யுத்த சூழ்நிலையில் அளப்பரிய பங்கினை வகித்துள்ளது. இவ் வைத்தியசாலை பல கிராம மக்களை அடிப்படையாகக் கொண்டு தனது சேவையினை முன்னெடுத்து வருகின்றது.


A5 பிரதான வீதி அருகில் உள்ள இந்த வைத்தியசாலையினை பல அமைச்சர்கள், முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பல அரசியல் கட்சி அமைப்பாளர்கள் எனப் பலரும் கடந்து செல்கிறார்கள். இவ்வாறான வைத்திய சாலையினை வளர்த்து மக்களின் நலனை காப்பாற்றுவதற்குரிய தூரநேக்கு கொண்ட தலைமைகள் இல்லாமையினாலேயே எமது சமூகத்தில் பல உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.


செங்கலடி வைத்தியசாலைக்கு பிறகு ஆரம்பிக்கப்பட்ட ஏறாவூர் வைத்தியசாலை தற்போது ஆதார வைத்தியசாலையாக மாற்றம் பெற்று வளர்ந்து நிற்கிறது. இதேபோன்று தமிழர் பிரதேசங்களில் பல வைத்தியசாலைகள் இன்னும் பின்தங்கிய நிலையில் உள்ளன.


தற்போது வைத்தியசாலைகளை முன்மாதிரியாக மாற்றி வெற்றி கண்டவரும், எமது பிராந்திய சுகாதார வைத்திய பணிப்பாளருமான வைத்திய கலாநிதி சுகுணனை சந்தித்து செங்கலடி வைத்தியசாலை தொடர்பாக பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளேன்.

எதிர்காலங்களில் தன்னால் முயன்றளவு முயற்சிகளை செய்து வைத்தியசாலைகளை முன்னேற்றுவது தொடர்பில் வெற்றிகொள்வோம் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதியளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# கல்முனை பிரதேச செயலகத்தில் அந்திமாலை நிலவு ஒன்றுகூடல்







(றாசிக் நபாயிஸ், பாறுக் சிஹான், ஏ.எல்.எம்.ஷினாஸ், சர்ஜூன் லாபிர்)

கல்முனை பிரதேச செயலகத்தின் நலனோம்பு அமைப்பு ஏற்பாடு செய்திருந்த "அந்திமாலை நிலவு" ஒன்றுகூடல் கடந்த 15ஆம் திகதி மாலை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி தலைமையில் பிரதேச செயலகத்தின் வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் கலந்துகொண்டார். கல்முனை மாநகர சபையில் முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டனர். விசேட அதிதிகளாக பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கல்முனை வர்த்தக சங்கத்தினர் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கல்முனை மாநகரத்தின் பிரதான 'கல்முனை வாசல்' நாற்சந்தியில் இருந்து பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளோடு அதிதிகள் பிரதேச செயலகத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

இதனையடுத்து, மாலைவேளை திறந்தவெளி மின்னொளி அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன. பிரதேச செயலகத்தில் நீண்ட காலமாக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்றவர்கள் மற்றும் ஓய்வுபெற்றவர்கள் இங்கு நினைவுச்சின்னம், பரிசில்கள் வழங்கி அதிதிகளினால் கௌரவிக்கப்பட்டார்கள். பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச கலைஞர்களினால் கலை கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. ஓவியக் கலைஞர் ஏ.சாக்கிர் பிரதம அதிதியின் உருவப்படத்தை நிகழ்வு நடைபெறும்போது தனது கைவண்ணத்தால் வரைந்து கையளித்தார். மாவட்ட அரசாங்க அதிபரை கௌரவித்து கல்முனை வர்த்தக சங்கத்தினர் தங்க நாணயக்குற்றியை அன்பளிப்பாக வழங்கிவைத்தார். கல்முனை பிரதான சந்தை வர்த்தக சங்கத்தினர் அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

நிகழ்வின் இறுதியில் பிரதம அதிதி, கௌரவ அதிதிகள் பிரதேச செயலக நலனோம்பு அமைப்பினரால் நினைவுச்சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.எல்.எம்.ஷினாஸ் தொகுத்து வழங்கினார்.

# இந்திய செய்திகள்

# உ.பியில் திருமண வைபவத்தை வேடிக்கை பார்த்த 13 பெண்கள் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

உத்தரப்பிரதேச மாநிலம் குஷி நகரில் திருமணத்திற்கான கொண்டாட்டத்தின் போது எதிர்பாராதவிதமாக கிணற்றில் வீழ்ந்து 13 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், இருவர் காயமடைந்துள்ளனர்.

நெபுவா நவுராங்கியா பகுதியில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியின்போது கிணற்று ஸ்லாப்பின் மீது ஒரேநேரத்தில் பலர் அமர்ந்திருந்ததால் பாரம் தாங்காமல் பலகை உடைந்து வீழ்ந்துள்ளது. இந்த விபத்தில் கிணற்றுக்குள் வீழ்ந்த 13 பெண்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தனது ட்விட்டர் பக்கத்தில், உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடந்த விபத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த துயரமான விபத்தில் தங்கள் உறவினர்களை இழந்து வாடும் அனைத்து குடும்பங்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டுகிறேன்" என்று பதிவிட்டிருக்கிறார்.

அதேபோல் பிரதமர் மோடி, "இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" என்று ட்விட்டரில் பதிவிட்டிருக்கிறார்.







உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளதுடன், 4 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## 'உறவுகள் தொடர்கதை' - மீண்டும் இணைந்த இளையராஜா - கங்கைஅமரன்



இசையமைப்பாளர் இளையராஜாவின் உடன்பிறந்த தம்பி கங்கை அமரன். ஆரம்பத்தில் இருவரும் இணைந்து பணியாற்றினார்கள். அதன் பின்னர் கங்கைஅமரன் தனியாக படங்களுக்கு இசையமைக்கத் தொடங்கினார். படங்களை இயக்கவும் செய்தார். அவரது இயக்கத்தில் வெளிவந்த 'கரகாட்டக்காரன்' மிகப்பெரிய வசூல் சாதனை படைத்தது.

ஒரு கட்டத்தில் இளையராஜாவுக்கும், கங்கைஅமரனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்தனர். இவர்களின் வாரிசுகள் பேசிக்கொண்டிருந்தாலும் இவர்கள் இருவரும் பேசிக்கொள்ளாமல், சந்தித்துக்கொள்ளாமல் இருந்து வந்தனர். குடும்ப நிகழ்வுகள், விழாக்களில் இருவரும் கலந்துகொண்டாலும் ஒருவரையொருவர் சந்திப்பதை தவிர்த்தார்கள். இளையராஜா குறித்து பல இடங்களில் கங்கைஅமரன் கடுமையாக விமர்சித்தும் பேசியிருக்கிறார்.

இந்நிலையில், பல ஆண்டுகளுக்குப் பின்னர் இளையராஜாவும், கங்கைஅமரனும் இளையராஜாவின் 'ரெகோர்டிங்' ஸ்டுடியோவில் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். இந்தப் படத்தை கங்கைஅமரனின் மகன் பிரேம்ஜி அமரன் சமூகவலைத்தளத்தில் வெளியிட்டு, "இறை அருளுக்கு நன்றி. உறவுகள் தொடர்கதை" என்று குறிப்பிட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஒரு புதிய படத்தில் இருவரும் இணைந்து பணியாற்றவிருப்பதாக கூறப்படுகிறது. இந்த புகைப்படம் ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பஹாசா மொழியில் 'ஒத்த செருப்பு'




பார்த்திபன் இயக்கி நடித்திருந்த 'ஒத்த செருப்பு' திரைப்படம் கடந்த 2019 வெளியாகி விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்றது. மேலும், அந்த ஆண்டுக்கான தேசிய விருதையும் அந்தப் படம் பெற்றது.

இந்தப் படத்தில் பார்த்திபன் மட்டுமே நடித்திருந்தார். அவரது வித்தியாச முயற்சிக்கு பாராட்டுகள் குவிந்தன. இந்தப் படத்தை ஹிந்தியில் அபிஷேக் பச்சன் நடிப்பில் பார்த்திபன் மறு உருவாக்கம் செய்து வருகிறார். அமிதாப் பச்சன் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார்.

இந்நிலையில், 'ஒத்த செருப்பு' திரைப்படம் இந்தோனிஷியாவின் பஹாசா மொழியில் ரீமேக் செய்யப்படவிருக்கிறது. இதன்மூலம் இந்தோனேஷியாவில் ரீமேக் செய்யப்படும் முதல் தமிழ் படம் என்ற பெருமையை 'ஒத்த செருப்பு' பெற்றுள்ளது. இதனை பார்த்திபன் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

## கடன் சுமையால் தத்தளிக்கும் இந்தியா

### மோடியின் 8 ஆண்டுகால ஆட்சியில் 152.2 இலட்சம் கோடி கடன்தொகை



2023 மார்ச்சில் இந்தியாவின் மொத்த கடன் ரூ.152.2 இலட்சம் கோடியாக இருக்கும் என்றும் கடந்த 3 ஆண்டுகளில் புதிதாக 50 இலட்சம் கோடி ரூபா பெற்றிருப்பதுவும் தெரியவந்துள்ளது.

2023ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் மத்திய அரசின் மொத்த கடன் சுமை ரூ.152.2 இலட்சம் கோடியாக இருக்கும் என்று அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றிய அரசின் பட்ஜெட் தெரிவிக்கிறது.

மத்திய அரசின் வருவாய் பற்றாக்குறை ரூ.16.6 இலட்சம் கோடியாக இருக்கும். அதாவது இந்த நிதியாண்டில் ரூ.16.6 இலட்சம் கோடியை மத்திய அரசு கடனாக வாங்கப் போகிறது. 2021-2022 நிதியாண்டில் ரூ.15.9 இலட்சம் கோடியையும் 2020-2021ஆம் நிதியாண்டில் ரூ.18.2 இலட்சம் கோடியையும் ஒன்றிய அரசு கடனாக வாங்கியுள்ளது. அதாவது, கொரோனாவுக்கு பிந்தைய 3 ஆண்டுகளில் மட்டும் மத்திய அரசின் கடன் சுமை ரூ. 50 இலட்சம் கோடி ஆக அதிகரித்துள்ளது.

மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்தின் முடிவில் அதாவது, 2014ஆம் ஆண்டு மார்ச்சில் இந்தியாவின் கடன் சுமை ரூ.53.11 இலட்சம் கோடியாக இருந்தது. அதுவே மோடி ஆட்சிக்கு வந்த பின் கடந்த 8 ஆண்டுகளில் கிட்டத்தட்ட கடன் 3 மடங்கு அதிகரித்து ரூ.152.2 இலட்சம் கோடியை எட்டியுள்ளது. இது நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 59% ஆகும். மத்திய அரசு கடனுடன் மாநில அரசுகளின் கடன் தொகையையும் சேர்த்தால் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் அது 89% ஆக உயரும். மத்திய அரசு தமது வரி வருவாயில் கிட்டத்தட்ட சரி பாதியை அதாவது 9.41 இலட்சம் கோடியை கடனுக்கான வட்டியாகவே செலவிடும் நிலை உருவாகியுள்ளது என இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஷரிஆ சட்டப்படி அல்ல; அரசியல் சாசனப்படியே இந்தியா ஆளப்படும்

### உ.பி. முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவிப்பு



''இந்தியா, அரசியல் சாசனப்படி ஆளப்படுமே தவிர, ஷரிஆத் (இஸ்லாமிய) சட்டத்தால் அல்ல'' என உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் 55 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில், யோகி ஆதித்யநாத் அளித்துள்ள பேட்டியொன்று மிகுந்த அரசியல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அதில் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளதாவது,

''இந்தியா, அரசியல் சாசனப்படி ஆளப்படுமே தவிர, இஸ்லாமியர்களுக்கான ஷரிஆ சட்டத்தின்படி ஆளப்படாது. பிரதமர் மோடி, முத்தலாக் முறையை இரத்துச்செய்தார். இதனால் முஸ்லிம் மகளின் உரிமை காக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான மரியாதையை மாண்பை பிரதமர் உறுதிசெய்துள்ளார். அந்த மகளுக்கான மாண்பை உறுதிசெய்யவே நமது தேசம் அரசியல் சாசனப்படி ஆளப்படுமே தவிர ஷரிஆ சட்டத்தால் அல்ல எனக் கூறுகிறோம்" என்றார்.

ஏஐஎம்ஐஎம் கட்சித் தலைவர் ஓவைசி, ''இந்தியாவில் ஒருநாள் ஹிஜாப் அணிந்த பெண் பிரதமராவார்'' என தெரிவித்துள்ளமை குறித்து ஆதித்யநாத் தெரிவிக்கையில்,

''நமது மகள்கள் ஹிஜாப் அணிய விரும்பினால், அணிந்துகொள், யார் உன்னைத் தடுக்கிறார் என்று பார்ப்போம் என்று பெற்றோர் சொல்லவேண்டும். அவர்கள் ஹிஜாப், நிகாப் அணிந்து பாடசாலைக்குச் செல்லட்டும். டொக்டர்களாகவோ, கலெக்டர்களாகவோ, தொழிலதிபர்களாகவோ ஆகட்டும். ஒருநாள், ஹிஜாப் அணிந்த ஒரு பெண் நமது பிரதமராகவும் ஆகலாம், நான் அப்போது உயிரோடு இல்லாமல் கூட போகலாம்" என்றார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "நாட்டின் மீதும் அதன் அமைப்புகளின் மீது நாம் நமது தனிப்பட்ட மத நம்பிக்கைகளை, வாய்ப்புகளை திணிக்க முடியாது. நான் உத்தரப்பிரதேசத்திலுள்ள அனைத்து அரசு ஊழியர்களையும் காவி உடை அணியுமாறு நிர்ப்பந்தப்படுத்த முடியுமா? முடியாதல்லவா? ஆகையால் பாடசாலைகளில் சீருடை அவசியம். தேசம் அரசியல் சாசனத்தின்படி இயங்கும்போது பெண்களின் பாதுகாப்பும், மாண்பும், சுதந்திரமும் உறுதிசெய்யப்படும்.

நான் மீண்டும் கூறுகிறேன், இது புதிய இந்தியா. உலகளவில் பிரபலமான தலைவரை பிரதமராகக் கொண்ட புதிய இந்தியா. இந்த புதிய இந்தியா உலகம் இருக்கும்வரை அரசியல் சாசனப்படி மட்டுமே ஆளப்படும். தலிபான் மனப்பான்மை கொண்ட சில மதவெறியர்களின் எண்ணங்கள் என்றுமே நிறைவேறாது" என்றார்.

கர்நாடகாவில் ஹிஜாப் சர்ச்சை குறித்த வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் உ.பி. முதலமச்சர் யோகி ஆதித்யநாத்தின் இந்தக் கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## ஹிஜாப் அணியவேண்டுமென குர்ஆனில் சொல்லப்படவில்லை

### "போராடும் மாணவிகள் முடிவை மாற்றிக்கொள்ளுங்கள்'' - என்கிறார் கேரள ஆளுநர் ஆரிஃப்



''இஸ்லாமியர்களின் 5 முக்கிய கடமைகளில், பெண்கள் ஹிஜாப் அணியவேண்டும் என குர்ஆனில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. எனவே, ஹிஜாப்பிற்காக போராடும் பெண்கள் தங்களது முடிவை மாற்றிக்கொள்ளவேண்டும். மாணவ, மாணவிகளின் சீருடையை தீர்மானிக்கும் அதிகாரம் பாடசாலை, கல்லூரிகளுக்கு உண்டு.''

- இவ்வாறு கேரள ஆளுநர் ஆரிஃப் முகமதுகான் தெரிவித்துள்ளார்.

கர்நாடகா மாநிலத்தில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கல்வி நிலையங்களில் ஹிஜாப், காவி துண்டு உள்ளிட்ட மத ரீதியான உடைகளை அணியக்கூடாது என அம்மாநில உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் கர்நாடகாவில் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கல்லூரிகள் திறக்கப்பட்டன. ஆனால், நீதிமன்ற உத்தரவுப்படி ஹிஜாப்புக்கு தடை விதித்ததால் மாணவிகள் வகுப்புகளை புறக்கணித்தனர்.

இந்நிலையில், கேரளா மாநில ஆளுநர் ஆரிஃப் முகமதுகான்,

''கர்நாடகாவில் நடந்துவரும் ஹிஜாப் விவகாரத்தின் பின்னணியில் சதியுள்ளது. முத்தலாக் தடையால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள்தான் ஹிஜாப் விவகாரத்தை பெரிதாக்குகிறார்கள். இதுபோன்ற விவகாரங்கள் பெண்களின் முன்னேற்றத்திற்கு தடையை ஏற்படுத்தும்'' - என அவர் தெரிவித்துள்ளார்.




பீஹாரில் வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளதாகக் கூறி, முதலமைச்சர் நிதிஷ்குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தள கூட்டணி அரசை கண்டித்து, லோக் ஜனசக்தி கட்சியினர் பாட்னாவில் போராட்டம் நடத்தினர். அப்போது வன்முறை வெடித்ததை தொடர்ந்து, போராட்டம் நடத்தியவர்களை தடியடி நடத்தி கலைத்த பொலிஸார்...

## கடலுக்கடியில் காதலர் தினம்



சென்னையை சேர்ந்த காதலர்கள் காதலர் தினத்தை கடலின் 50 அடி ஆழத்தில் மோதிரம் மாற்றி கொண்டாடியுள்ளனர்.

புதுச்சேரி மற்றும் சென்னை பகுதிகளில் டெம்பிள் அட்வன்ச்சர் என்கிற ஆழ்கடல் பயிற்சி மையம் வைத்திருப்பவர் அரவிந்த். இவர் கடலில் பல்வேறு சாகசங்களையும், நிகழ்வுகளையும் நடத்திவருபவர். ஆழ்கடலில் திருமணம், உடற்பயிற்சி, சைக்கிளிங் ஆகியவை செய்து மக்களை கவர்ந்தும் வருகின்றார்.



இந்நிலையில், சென்னை எக்மோர் பகுதியில் வசிக்கும் தனியார் நிறுவன ஊழியர் நிஷாந்த் தனது முதல் திருமண நாள் மற்றும் காதலர் தினத்தை புதுமையாக கொண்டாட ஆழ்கடல் நீச்சல் பயிற்சியாளரை அணுகியுள்ளார்.



இதனையடுத்து காதலர் தினமான 14ஆம் திகதி தனது மனைவி மனிஷாவுடன் சென்னை நீலாங்கரை பகுதியிலுள்ள கடலில் 50 அடி ஆழத்தில் தனது காதல் மனைவிக்கு மோதிரம் அணிவித்து காதலர் தினம் மற்றும் முதல் திருமண நாளை கொண்டாடிய நிகழ்வை தனது சமூக வலைத்தளங்களில் அரவிந்த் பதிவிட்டுள்ளார். இந்நிலையில், காதலர் தினத்தை புதுமையான முறையில் கடலுக்குள் மோதிரம் மாற்றி கொண்டாடிய அவர்களை அனைவரும் வாழ்த்தி வருகின்றனர்.



## உடைமைக்குள் 426 ஆமைகள்; மறைத்து எடுத்துச்சென்றவர் கைது



உத்திரப்பிரதேச மாநிலம் கோரக்பூர் ரயில் நிலையத்தில் உடைமைக்குள் ஆமைகளை மறைத்து எடுத்துவந்த ஒருவர் ரயில்வே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரயில் நிலையத்தில் பொலிஸார் பயணிகளின் உடைமைகளை பரிசோதித்துக்கொண்டிருந்தபோது ஒருவர் தனது பைக்குள் 426 ஆமைகளை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவரிடம் பொலிஸார் விசாரித்தபோது, மேற்கு வங்கத்தில் அவற்றை விற்பனை செய்வதற்காக எடுத்துச்செல்வதாக தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அவரை கைதுசெய்த பொலிஸார், ஆமைகளை பறிமுதல் செய்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

# உலக செய்திகள்

## உக்ரைன் எல்லையிலிருந்து படைகள் வாபஸ்

# ரஷ்யாவின் பேச்சை நம்ப முடியாது; எந்நேரமும் தாக்குதல் நடக்கும்

## அமெரிக்கா - நேட்டோ எச்சரிக்கை







உக்ரைன் எல்லையில் படைகளை வாபஸ் பெற்று வருவதாக ரஷ்யா கூறுவதை நம்ப முடியாது என அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் அறிவித்துள்ளதுடன், எந்த நேரத்திலும் திடீர் தாக்குதலில் அது ஈடுபடக்கூடும் என தெரிவித்துள்ள அவை, அப்படி நடந்தால் சரியான பதிலடி கொடுக்கப்படும் என எச்சரித்துள்ளன.

இதனால், உக்ரைன் எல்லையில் போர்ப் பதற்றம் நீடிக்கிறது. அமெரிக்கா, நேட்டோ கூட்டமைப்பில் உக்ரைன் இணைவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துவரும் ரஷ்யா, அந்நாட்டை தாக்குவதற்காக 3 எல்லைகளிலும் சுற்றிவளைத்து 1.50 இலட்சம் வீரர்களையும், ஆயுதங்களையும் குவித்துள்ளது.

இதற்கு அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. உக்ரைனை தாக்கினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரித்து வருகின்றன. இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நடத்திய தொலைபேசி பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதைத் தொடர்ந்து, உக்ரைனை ரஷ்யா நேற்று தாக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், எல்லையில் குவித்திருந்த படையில் ஒரு பகுதியை திடீரென திரும்பப் பெற்றது. இது அனைவரையும் குழப்பியிருக்கிறது. தாக்குதல் முடிவை புட்டின் மாற்றிக் கொண்டாரா என கருதப்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் பல இடங்களிலிருந்து படைகளை வாபஸ் பெற்று வருவதாக ரஷ்யா அறிவித்தது. 'உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் திட்டமில்லை. போர்ப் பயிற்சியில் மட்டுமே ஈடுபட்டு வருகிறோம்' என தெரிவித்துள்ளது. ஆனால், அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் இதை நம்ப மறுத்துள்ளன.

''பெலாரஸ் எல்லை, கருங்கடல் பகுதிகளில் ரஷ்ய இராணுவமும், கடற்படையும் தொடர்ந்து போர்ப் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றன. குறிப்பிட்ட அளவு படையை மட்டும் திரும்பப் பெற்றுள்ள ரஷ்யா, உக்ரைன் மீது எந்நேரமும் போர் தொடுக்கலாம்'' என்று அமெரிக்கா சந்தேகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி தெரிவிக்கையில், இராணுவ வீரர்களின் பயிற்சி முடிந்ததால் முகாம்களுக்கு திருப்பி அனுப்பினோம். உக்ரைன் விவகாரம் குறித்து அமெரிக்கா, நேட்டோ நாடுகளுடன் நம்பிக்கையூட்டும் பேச்சுவார்த்தைக்கு ரஷ்யா தயாராகவுள்ளது. ரஷ்யா போரை விரும்பவில்லை' என்று தெரிவித்துள்ளார். ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்கவே படைகளை திரும்பப் பெறுவதாகவும், மேற்கு நாடுகளுடன் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று ரஷ்யா கூறி வருவதாகவும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இது தொடர்பாக பைடன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

''உக்ரைனில் போர் வெடிக்க அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதலுக்கு தீர்க்கமான பதிலடி கொடுக்க தயாராகவுள்ளோம். உக்ரைனிலுள்ள அமெரிக்கர்களை ரஷ்யா குறிவைத்தால் கடுமையான பதிலடி கொடுப்போம். ரஷ்ய படைகள் உண்மையில் வெளியேறுவது நல்லது. ஆனால், ரஷ்ய படைகள் தங்கள் தளங்களுக்குத் திரும்பும் தகவலை நாங்கள் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. ரஷ்யா தனது படைகளை திரும்பப் பெறுவதற்கான ஆதாரங்களை வெளியிடவேண்டும்'' என தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் படை வாபஸை ஒரு தந்திரமாகவே அமெரிக்கா பார்க்கிறது. இதனால், உக்ரைனில் போர்ப் பதற்றம் நீடிக்கிறது.

**உக்ரைன் இராணுவ இணையதளம் முடக்கம்**

போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சு, ஆயுதப்படை மற்றும் 2 அரச வங்கிகளின் இணையத்தளங்கள் நேற்றுமுன்தினம் ஹேக்கர்களால் முடக்கப்பட்டன.

ரஷ்யாதான் இந்த சைபர் கிரைம் தாக்குதலை நடத்தியிருப்பதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.

## கின்னஸ் சாதனை படைத்த ஸ்டோபெரி



இஸ்ரேலில் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் விளைந்த ஸ்டோபெரியொன்று கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

சுமார் 289 கிராம் எடைகொண்ட இந்த ஸ்டோபெரி, சாதாரண ஸ்டோபெரியை விட 24 மடங்கு பெரியது எனத் தெரிவிக்கப்படுகிறது.



உக்ரைன் தலைநகர் கிவ்விலுள்ள இரு பாடசாலைகள் மீது நேற்று ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிப் படைகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.





# பிரேஸிலில் கடும் மழை - மண்சரிவு: 94 பேர் உயிரிழப்பு; 300 பேர் நிர்க்கதி









பிரேஸிலின் ரியோ-டி-ஜெனிரோ மாகாணத்தில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி 94 பேர் உயிரிழந்துள்ளனர்.

மலைப்பகுதியில் அமைந்துள்ள பெட்ரோபோலிஸ் நகரில் பெய்த கடும் மழையால் ஏராளமான பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டு உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன.

மொரோ டா ஆஃபிசினாவில் 80 வீடுகள்வரை மண்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளதால், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

300இற்கும் மேற்பட்டோர் தங்களது இருப்பிடங்களை விட்டு வெளியேறி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மண்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர்.

## 4 நாட்கள் வேலை; பெல்ஜியம் அறிவிப்பு



வாரத்தில் நான்கு நாள் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக பெல்ஜியம் அறிவித்துள்ளது.

கடந்த, 2021 செப்டெம்பரில் ஐரோப்பிய நாடான ஸ்கொட்லாந்து, சோதனை அடிப்படையில் வாரத்தில் நான்கு நாட்கள் வேலைத் திட்டத்தை அறிவித்தது.

இதைத் தொடர்ந்து ஐஸ்லாந்து, ஸ்பெயின், ஜப்பான் ஆகிய நாடுகளும் சோதனை அடிப்படையில் நான்கு நாட்கள் வேலைத் திட்டத்தை அறிவித்தன. எனினும், மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்ஸ்தான் முதன் முதலாக 2021 டிசம்பரில் நான்கு நாட்கள் வேலையை அதிகாரப்பூர்வமாக அமுல்படுத்தியது.

இந்நிலையில், ஐரோப்பிய நாடான பெல்ஜியமும் வாரத்தில் நான்கு நாட்கள் வேலைத்திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்திற்கு அமைச்சரவைக் குழு ஒப்புதலளித்துள்ளது. இதைத் தொடர்ந்து நாடாளுமன்ற ஒப்புதலுக்குப் பின்னர், நான்கு நாட்கள் வேலைத் திட்டம், எதிர்வரும் மே அல்லது ஜூனில் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர்- டி- க்ரூ தெரிவிக்கையில், கொரோனா காலத்தில் பணிச்சூழல் மாறியதற்கு ஏற்ப, தொழிலாளர் சந்தையும் மாறவேண்டியுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, குடும்பத்திற்கும், வேலைக்கும் சமமான நேரத்தை ஒதுக்கும் நோக்கில் இத்திட்டம் அமுலுக்கு வரவுள்ளது என்றார்.

**நான்கு நாட்கள் வேலையின் முக்கிய அம்சங்கள்**

ஊதியக் குறைப்பு இல்லை. ஒரு வாரத்திற்கு, 38 மணிநேர பணி, ஒரு வாரத்தில் கூடுதல் நேரம் பணியாற்றி அடுத்த வாரம் குறைத்துக்கொள்ளலாம், வேலை நேரம் முடிந்த பின் கம்ப்யூட்டர் உள்ளிட்ட சாதனங்களை அணைத்து விடலாம், வேலை நேரத்திற்குப் பின்னர் தொலைபேசியில் வரும் பணி சார்ந்த செய்திகளை கண்டுகொள்ளாமல் இருக்கலாம்.

Wi-Fiஐ துண்டித்ததால் ஆத்திரம்

## பெற்றோர் மற்றும் சகோதரனை சுட்டுக் கொன்ற 15 வயது சிறுவன்

ஸ்பெயினில் 15 வயது சிறுவனொருவன் வீட்டில் Wi-Fiஐ துண்டித்த ஆத்திரத்தில் தனது பெற்றோரையும், சகோதரனையும் சுட்டுக் கொலைசெய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எல்சே நகரில் வசித்துவந்த அந்தச் சிறுவன் பாடசாலையில் மதிப்பெண்கள் குறைவாக எடுத்ததால் பெற்றோர்கள் அவனை கண்டித்ததோடு, வீட்டில் வைபை இணைப்பையும் துண்டித்துள்ளனர். இதனால், ஆத்திரமடைந்த அந்த சிறுவன் வீட்டிலிருந்த துப்பாக்கியை எடுத்து மூவரையும் சுட்டுக் கொன்றதாக கூறப்படுகிறது.

3 நாட்களாகியும் எந்தத் தகவலும் வராததால் சந்தேகமடைந்த சிறுவனின் உறவினர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். பின்னர், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சிறுவனிடம் விசாரித்தபோது, சிறுவன் நடந்தவற்றை ஒப்புக்கொண்டுள்ளான்.

பெற்றோரை கொலைசெய்த சிறுவன், 3 நாட்களாக சடலங்களுடன் தனியாக வசித்து வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹொங்கொங்கில் அதிகரிக்கும் கொரோனா பாதிப்பு:

## நோயாளிகளால் நிரம்பி வழியும் மருத்துவமனைகள்; கடும் குளிரில் வீதிகளில் சிகிச்சை பெறும் அவலம்



ஹொங்கொங்கில் கொரோனா பாதிப்புகளால் மருத்துவமனைகள் நிரம்பி வழிவதால், ஏராளமான கொரோனா நோயாளிகள் மருத்துவமனைகளுக்கு வெளியே கடும் குளிரில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இம்மாத தொடக்கத்தில் தினசரி கொரோனா பாதிப்புகள் 100இற்குள் இருந்த நிலையில், 2 வாரங்களில் அந்த எண்ணிக்கை 40 மடங்கு அதிகரித்து, 4,285 ஆக உயர்ந்துள்ளது. மக்கள் தடுப்பூசி செலுத்தத் தயங்குவதே இதற்கு முக்கிய காரணமாக தெரிவிக்கப்படுகிறது.

ஹொங்கொங்கில் கொரோனாவால் இதுவரை 30,955 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 227 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெக்சிக்கோவில் அடுத்தடுத்து 5 ஊடகவியலாளர்கள் சுட்டுக் கொலை

**நாடாளுமன்றக் கூட்டத்தொடரை குறுக்கிட்டு ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்**



மெக்சிக்கோவில் ஊடகவியலாளர்கள் 5 பேர் அண்மையில் அடுத்தடுத்து சுட்டுக் கொலைசெய்யப்பட்டனர். இதனைக் கண்டித்து நாடாளுமன்ற கூட்டத்தொடரை குறுக்கிட்ட ஊடகவியலாளர்கள், உயிரிழந்த தங்கள் சகாக்களுக்கு நீதி வழங்குமாறு கோஷம் எழுப்பினர்.

கடந்த ஒன்றரை மாதத்தில் குற்றங்கள் தொடர்பான செய்திகளை சேகரிக்கும் ஊடகவியலாளர்கள் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனைக் கண்டித்து நாடு தழுவிய போராட்டங்களை ஊடகவியலாளர்கள் முன்னெடுத்தனர்.

நாடாளுமன்ற கூட்டத்தொடருக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள், கூட்டத்தொடரை இடைமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



# இந்தியாவுக்கு பதிலடி கொடுக்குமா மே.இ. தீவுகள்?

இந்திய அணியுடனான இருதரப்பு கிரிக்கெட் தொடரில் ஒருநாள் தொடரையும் முழுமையாக இழந்திருந்த மேற்கிந்திய தீவுகள் அணி இருபதுக்கு 20 சர்வதேச தொடரையும் தோல்வியுடனே ஆரம்பித்தது.

இரு அணிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் கொல்கத்தாவில் நடைபெற்ற முதலாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களை குவித்தது.

158 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 18.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்த நிலையில் போட்டியில் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக தனது முதல் இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் விளையாடிய ரவி பிஷ்னோய் தெரிவானார்.

இந்திய அணியின் வெற்றியின் மூலம் 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் இந்திய அணி 1-0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கும் நிலையில் இரண்டாவது போட்டி இன்று கொல்கத்தாவில் இலங்கை நேரப்படி இரவு 7.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

# டி.பி.ஜி.சி. சவால் கிண்ணத் தொடரின் சம்பியனான 3டி.எச். இன்டர்நெஷனல் க்ரூப்



டி.பி.ஜி.சி சவால் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் ஃபயர்பெஸ்ட் இன்சூரன்ஸ் அணியை 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்திய 3டி.எச். இன்டர்நெஷனல் க்ரூப் அணி முதல்முறையாக மோர்கண்டைல் கிரிக்கெட்டில் சம்பியனானது.

டேவிட் பீரிஸ் க்ரூப் ஒவ் கம்பனியின் அனுசரணையில் மோர்கண்டைல் கிரிக்கெட் 'ஈ' டிவிஷன் அணிகள் பங்குகொண்ட அணிக்கு 30 ஓவர்கள்கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை மோர்கண்டைல் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஃபயர்பெஸ்ட் இன்சூரன்ஸ் அணி 28.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 180 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் இனேஷ் பெர்னாண்டோ 72 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் கொலித்த நயனந்த 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், டெனம் கிராமர் மற்றும் நிலந்த விஜேகோன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகள் வீதம் வீழ்த்தினர்.

181 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய 3டி.எச். இன்டர்நெஷனல் க்ரூப் அணி 29.5 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் மிலான் அபேசேகர 72 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 8 பௌண்டரிகள் அடங்கலாக 76 ஓட்டங்களை பெற்று வெற்றிக்கு வித்திட்டார்.

தொடருக்கான வெற்றிக்கிண்ணத்தை 3டி.எச். இன்டர்நெஷனல் க்ரூப் அணியின் தலைவர் மிலான் அபேசேகர, நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட டேவிட் பீரிஸ் மோட்டார் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் ஜயந்த ரத்நாயக்கவிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



# எல்லைதாண்டிய மகிழ்ச்சியில் வீரர்கள்

ரஷ்ய, உக்ரைன் எல்லையில் இரு நாட்டு படைகளும் குவிந்திருக்கும் வேளையில் பீஜிங் ஒலிம்பிக்கில் இரண்டு நாட்டு வீரர்களும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து வெற்றியை மகிழ்ச்சியாகக் கொண்டாடினர்.

நடப்பு சம்பியனான ஒலெக்சாண்டர் அப்ரமென்கோ புதன்கிழமை பீஜிங் ஒலிம்பிக்கில் உக்ரைனின் முதல் பதக்கத்தை வென்றார். ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகளில் எல்லையில் பதற்றம் ஏற்பட்டு போர் நிலையில் ரஷ்ய பனிச்சறுக்கு வீரர் இலியா புரோவ் உக்ரைனிய வீரரைக் கட்டிப்பிடித்துக் கொண்டாடினார்.

“இந்த வெற்றிக்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், இந்த விளையாட்டுப் போட்டிகளில் உக்ரைனுக்காக முதல் பதக்கத்தை வென்றதில் என்னைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன்“ என்று அப்ரமென்கோ கூறினார்.

2018 பியோங்சாங் விளையாட்டுப் போட்டியில் அப்ரமென்கோ வான்வழிப் போட்டியில் தங்கம் வென்றார். குய், அப்ரமென்கோ ஆகியோர் வெற்றி மேடையில் தங்கள் நாடுகளின் கொடிகளை உயர்த்தியிருந்தனர். அதேநேரத்தில் புரோவ் ரஷ்ய ஒலிம்பிக் கமிட்டி அல்லது ஆர்.ஓ.சிக்காக தனது இடது கையில் ஒரு சின்னத்தை சுட்டிக்காட்டினார். நாட்டின் ஊக்கமருந்து ஊழலிலிருந்து ரஷ்யாவின் பெயர் மற்றும் கொடி ஒலிம்பிக்கில் தடைசெய்யப்பட்ட பின்னர் ரஷ்யர்கள் அந்த சுருக்கத்தின் கீழ் போட்டியிடுகின்றனர்.

உக்னிய வீரர் விளாடிஸ்லாவ் ஹெராஸ்கேவிச் கடந்த வாரம் ஓட்டத்தை முடித்தபோது “உக்ரைனில் போர் இல்லை'' என்று எழுதப்பட்ட ஒரு சிறிய பலகையை மெராக்களுக்கு ஒளிரச் செய்தார், உக்ரைனிய ஒலிம்பிக் குழு அடுத்த நாள் அமைதிக்கான அழைப்போடு பின்தொடர்ந்தது. உக்ரைனிய விளையாட்டு வீரர்கள் யாரும் போட்டியில் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

# தொடர் தோல்விகளுக்கு இன்று முற்றுப்புள்ளி வைக்குமா இலங்கை!



சுற்றுலா இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான நான்காவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டி இன்று மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் இலங்கை நேரப்படி பிற்பகல் 1.40 மணிக்கு ஆரம்பமாகிறது.

தசுன் சானக்க தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியானது அவுஸ்திரேலிய அணியுடன் 5 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. தொடரின் முதல் மூன்று போட்டிகளிலும் அவுஸ்திரேலியா அணி வெற்றிபெற்று தொடரை தன்வசப்படுத்தி இருக்கும் நிலையில், இலங்கை அணி தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இன்று களமிறங்குகிறது.


அண்மையில் நடைபெற்ற இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியின்போது இலங்கை அணி சுப்பர் ஓவரில் வெற்றியை கோட்டை விட்டமை குறிப்பிடத்தக்கது. 2022ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடர் இன்னும் 8 மாதங்களில் அவுஸ்ரேலியாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை அணி இவ்வாறு தொடர்ச்சியாக தோல்விகளை தழுவிக்கொண்டு வருகின்றமை ரசிகர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# “ஷஹீன் அப்ரிடி ரூ.200 கோடிக்கு ஏலம் போயிருப்பார்” – சமூக வலைத்தளங்களில் வைரலாகும் ட்வீட்

பாகிஸ்தான் ஊடகவியலாளர் ஒருவர் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஷஹீன் அப்ரிடி தொடர்பாக கற்பனைக்கு எட்டமுடியாத கருத்தை தெரிவித்ததால் அவரின் ட்வீட் சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது.

ஐ.பி.எல். தொடக்க காலத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்று விளையாடினர். இந்திய – பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான எல்லை தாண்டிய பதற்றம் மற்றும் அரசியல் அழுத்தம் காரணமாக அடுத்தடுத்த ஆண்டுகளில் பாகிஸ்தான் வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் விளையாட தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், சில நாட்களுக்கு முன் நடந்த மெகா ஏலம் தொடர்பாக பாகிஸ்தான் ஊடகவியலாளர் தெரிவித்த வேடிக்கையான கூற்று தற்போது வைரலாகியுள்ளது. “ஐ.பி.எல். மெகா ஏலத்தில் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் ஷஹீன்




அப்ரிடி கலந்துகொண்டிருந்தால், அவரை ரூ.200 கோடிக்கு ஏலம் எடுத்திருப்பார்கள்“ என்று ட்வீட் செய்திருந்தார்.

பலரும், “ஷஹீன் அப்ரிடி திறமையான வீரர்தான். என்றாலும் கற்பனைக்கு ஒரு எல்லை வேண்டாமா'' என பதில் கேள்வி எழுப்பி வருகின்றனர். ஒருவர் “ஐ.பி.எல். அணிகளின் மொத்த பட்ஜெட்டே 90 கோடிதான் மேன்“ என்று நக்கலடித்துள்ளார். இதனால் இவரின் ட்வீட் தற்போது வைரலாகியுள்ளது.

# இலங்கை அணிக்கு தொடரும் இழப்புகள்



அவுஸ்திரேலிய அணியுடனான மூன்றாவது போட்டியின்போது உபாதைக்குள்ளான நுவான் துஷாரவிற்கு உபாதை குணமாகாத நிலையில் அவர் தற்போது இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இருபதுக்கு 20 சர்வதேச தொடரிலிருந்து வெளியேறியுள்ளார். அது மாத்திரமல்லாமல் நுவான் துஷார அடுத்து இந்திய அணியுடன் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 சர்வதேச தொடரிரின் போட்டிகளிலும் பங்கேற்பது சந்தேகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு பக்கம் இருக்கும் நிலையில், பந்துவீச்சு சகலதுறை வீரர் ரமேஷ் மெண்டிஸும் பயிற்சியின்போது காயமடைந்துள்ளார். அவரது வலது பெருவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதால் அவரை ஓய்வெடுக்குமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். அவர் இன்னும் ஆஸி. அணியுடனான தொடரில் களமிறங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளான இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சகலதுறை வீரர்களில் ஒருவரான வனிந்து ஹசரங்க, இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள இந்திய அணிக்கு எதிரான தொடரில் விளையாடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொத்துவில் சைக்கிளோட்ட வீரருக்கு சாய்ந்தமருதில் பெரும் வரவேற்பு

74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இனங்களுக்கிடையில் இன ஐக்கியத்தை வலியுறுத்தி நாடுதழுவிய தனிநபர் 1407 கிலோமீற்றர் சைக்கிள் சவாரியை பொத்துவிலைச் சேர்ந்த சுல்பிகார் சர்வமதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் கடந்த இரு நாட்களுக்கு முன்னர் சுதந்திர சதுக்கத்தில் வைத்து ஆரம்பித்தார்.

இந்த சைக்கிள் சவாரி கொழும்பிலிருந்து, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை, பொத்துவில், ஹம்பாந்தோட்டை ஊடாக கொழும்பை வந்தடையுள்ளது. நேற்று முன்தினம் மாலை சாய்ந்தமருதை சென்றடைந்த வேளையிலேயே சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய கல்விச் சமூகம் பெரும் வரவேற்பு வழங்கியது.

இந்நிகழ்வில் கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எஸ். புவனேந்திரன், சாய்ந்தமருது கோட்ட கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலீக், அல்-ஹிலால் அதிபர் யு.எல். நஸார் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

**(தகவல் - அஸ்ஹர் இப்றாஹிம்)**



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7